மலர்மணம்

தொகுத்தவர் :

கி. மா. பக்தவத்சலன்

அருணோதயம்
சென்னை—14.

மலர் மணம்

தொகுத்தவர் :

கி. மா. பக்தவத்சலன்

அருணோதயம்
சென்னை—14.

அருணோதயம் வெளியீடு 18.
முதற் பதிப்பு: பிப்ரவரி, 1956.

விலை ரூ. 2—0—0

மாருதி பிரஸ், இராயப்பேட்டை, சென்னை—14.

முன்னுரை

புத்தகம்—ஓர் பூக்காடு. பூக்காட்டிற்குள் புகுந்து, உலாவி முடிந்ததும் வெளியே வரும் பொழுதெல்லாம் கூடை நிறைய மலர்களைக் கொண்டுவருவேன்—மலர், மனதை மயக்கியதால் மாத்திரமல்ல; மனம் மலரின் மணத்தால் மகிழ்ச்சியடைந்ததாலுமல்ல; மலர், மாலைகட்டவும் மருந்தாட்டவும் அழகைக் கூட்டவும் ஆயுளோடு ஒப்பிட்டுக் காட்டவும் உதவுவது உண்டு என்பதை மறவாததால்.

" இழுக்கல் உடை உழி ஊற்றுக்கோலற்றே ஒழுக்கமுடையார் வாய்ச் சொல் " என்று வள்ளுவர் வற்புறுத்திச் சொல்லியிருக்கிறார். குறள் கொடுத்த பெருங்கொடையே, இந்த மலரும் மணமும்.

அநேக நாட்களாக அரும்பாடுபட்டு என்றும் வாடாத இம் மலர்களை எள்ளளவும் குறையாத மணத்தோடு "அருணோதயம்" மூலம் அனுப்பி வைத்திருக்கின்றேன். உலகப் பேரறிஞர்களின் உள்ளக் கிடக்கையை ஓரளவு நான் உங்களின்முன் எடுத்துரைத்திட உறுதுணை புரிந்த திரு. அருணன் அவர்களுக்கு என் அன்பும், மன முவந்த நன்றியும் வணக்கமும் என்றும் உண்டு.

சென்னை
26-1-1956

அன்பன்,
கி. மா. பக்தவத்சலன்

மலர் மணம் தந்தோர்

இவர்கள் உலகெங்கணும் இருந்த மிகச்சிறந்த அறிஞர்கள். இவர்களின் மணிவாசகங்களில் பல உள்ளே உள்ளன. வாழ்ந்த காலமும் தெரிந்து கொள்ள இந்தக் கால அட்டவணை மிகவும் உதவும்.

கொலம்பஸ்	...கி.பி.1436—1506
தாந்தே	... 1265—1321
நெப்போலியன்	... 1769—1821
பெஞ்சமின் பிராங்கிளின்	... 1706—1790
ஜான் மில்டன்	... 1608—1674
மார்டின் லூதர்	... 1483—1546
ஜார்ஜ் வாஷிங்டன்	... 1732—1799
ஷேக்ஸ்பியர்	... 1564—1616
ஜேம்ஸ் ஆலன்	... 1864—1912
போன் விஸின்	... 1744—1792
கோகோல்	... 1800—1852
ஓஸ்ட்ரோவஸ்கி	... 1823—1886
டர்ஜனீவ்	... 1818—1883
பிஸம்ஸ்கி	... 1820—1881
லியோடால்ஸ்டாய்	... 1828—1910
அலக்ஸீடால்ஸ்டாய்	... 1817—1875
ஆண்டன் செக்காவ்	... 1860—1904
ஜூலியஸ் ஸீஸர்	... கி. மு. 50—40
ஐன்ஸ்டின்	...கி.பி.1879—1955
ஆல்பிரட் நோபிள்	... 1833—1896
வால்டேர் எமர்சன்	... 1803—1882
ஆர்தர் ஹியூக் கிளெவ்	... 1819—1861
தாமஸ் கார்லைல்	... 1795—1881

உள்ளே உள்ளவை

No. 2500.

மலர்மணம்

1. கடவுள்

கடவுள் ஒருவரே என்று நான் நம்புகிறேன். நம்பு கிறவர்களுக்குக் கடவுள இருக்கிறார்.

—மகாத்மா காந்தி

"கடவுள் இல்லை" என்பவர்கள் அறிவில்லாதவர்கள்; "கடவுள் இருக்கிறார்" என்பவர்கள் முழு முட்டாள்கள்.

—பெர்னட் ஷா

கடவுள் பற்றிய எண்ணங்கள், சரியாகப் புரிந்து கொள்ளாத அனுபவங்களுக்கு முன்னாளிலே செய்த தவறான வியாக்கியானத்தின் விளைவு.

—ஆண்ட் ரூலாங்

கடவுள் என்று சொல்லப்படுவது உயர் குணப் பண்பே ஒழிய, அது ஒரு உருவமல்ல; வஸ்துவுமல்ல.

—பெரியார் ஈ. வெ. ரா.

உனக்கு எட்டாத கடவுளைப் பற்றித் தெரிந்ததாய்ப் பிதற்றாதே.

—வால்ட் விட்மன்

மனிதனுக்கு என்ன பைத்தியம்? அவனால் ஒரு புழுவைப் படைக்க முடியாது. ஆயினும் கணக்கில்லாத கடவுளரைப் படைத்துக் கொண்டே இருக்கிறான்.

—மான்டெய்ன்

கடவுள் தன்னை நிரூபிக்க ஒரு நாளும் அற்புதங்கள் காட்டுவதில்லை. அவருடைய சாதாரண படைப்புகளே அதற்குப் போதும்.

—பேகன்

"கடவுள் இல்லாமல் மனிதன் வாழ முடியுமா?" என்பதல்ல முக்கியம். "மனிதனின்றி கடவுள் இருக்க முடியுமா?" என்பதே.

—லேண்டர்

கோவிலில் வைத்துக் கும்பிடும் கடவுளை மனிதனே படைத்தான். அதனால், மனிதன் தன்னைப்போலவே கடவுளையும் படைத்திருக்கிறான்.

—ஹெர்மீன்

நற்குணம் படைத்தவர்கள் ஒரு நன்மை புரிந்தால் அதற்காகப் பாதிரிமார்கள் கடவுளைப் பாராட்டுகிறார்கள். ஆனால் யாராவது தீமை செய்தால், செய்தவன் மீது பழியைப் போட்டு விடுகிறார்கள். கடவுளைக் குறை கூறுவதில்லை.

—இங்கர்சால்

உலகில் காணப்படும் சம்பவங்களுக்கு அவைகளின் காரணங்களை அறிந்து கொள்ள முடியாததினால் கடவுளும் கடவுளின் கர்த்தாக்களும் சிருஷ்டிக்கப்பட்டார்கள்.

—ஹக்ஸ்லி

கடவுளின் நீதி மெதுவாகத்தான் நகரும். ஆனால் ஒருபோதும் அது வழியில் தங்குவதில்லை.

—ராபர்ட் பிரௌனிங்

2. மனிதன்

நான் மனிதர்களை மூன்று வகையாகப் பிரிக்கிறேன், உலகத்தில் செயல்களைச் செய்து காட்டுபவர் சிலர்; செய்து காட்டும் செயலைப் பார்த்துக் கொண்டிருப்பவர் பலர்; என்ன செயல் நடக்கிறது என்றே அறியாமல் இருப்பவர் அநேகர்.

—பட்லர்

மக்களுக்காக உயிரையும் தியாகம் செய்யத் தயாராய் இருப்பவனே மனிதன்.

—மகாத்மா காந்தி

மனிதன் கற்பவற்றுள் உயர்ந்த கற்பனைக்குரிய பொருள் மனிதனே.

—போப்

மனிதன்—தான் நம்பும் நம்பிக்கைகளின் ஒரு கூட்டு.

—செக்காவ்

"உலகம் எப்படி இருக்கிறது?", "எப்படி இருக்க வேண்டும்" என்ற கருத்துக்கள் கொண்டவனாய், இரண்டின் வேற்றுமையையும் அறிந்தவனாய் இருப்பவன் மனிதன். அழவும், சிரிக்கவும் கூடியவன் அவனே.

—ஆஸ்லிட்

மனிதன் ஒரு விநோதமான பிராணி. கற்பனை செய்து பார்க்க முடியாத உயர்ந்த தன்மைகள் அவனிடம் இருக்கின்றன. இதைப்போலவே கட்டுக்கடங்காத துர்க்குணங்களும் அவனிடம் காணப்படுகின்றன.

—வ. ரா.

மனிதன் மிகவும் சக்தி வாய்ந்தவன். இவ்வுலகிலுள்ள மிக அழகிய பல பொருட்களை உருவாக்கியது, மனித உழைப்பும் மனிதனின் கைத்திறனுந்தான். மனிதக்கற்பனை

யின் பலன்களுக்கப்பால், உலகிலுள்ள மற்ற எவற்றைப் பற்றியும் எண்ணிப் பார்க்க முடியாது. ஆகவே மனிதனுக்குத் தலை வணங்குகிறேன்.

—மாக்சிம் கார்க்கி

தன்னுணர்வு கொள்ளா மனிதன் இவ்வுலகில் வாழும் தகுதியை இல்லாதவன்.

— இக்பால்

மனிதனுடைய உடம்பிலே அபாரமான உணர்ச்சி இருக்கிறது. அவன் முதுகைத் தடவிக் கொடுத்து விட்டால் போதும்; உடனே அவன் தலை கனத்துவிடும்.

—காஸ்பிளேம்

வீரமும் உணர்வும இல்லாதவன் மனிதனகான்.

—நெப்போலியன்

வாழ்விலே ஒவ்வொரு மனிதனும் ஒரு புத்தகம்தான்

—கானிங்

எல்லா மனிதர்களையும் நம்பி விடுவது ஆபத்து; ஒருவரையும் நம்பாமல் இருப்பது பேராபத்து.

—ஆபிரகாம் லிங்கன்

பெண்களுடைய பைத்தியக்காரத்தனங்களை எல்லாம் சேர்த்துப் படைத்தால் உருவமாகிறது......மனிதன்!

— அறன்

3. மதம்

மதம் என்பது மதம்.

—பெர்னட் ஷா

இந்தியாவில் காணப்படும் எல்லாவித சமுதாயக் கொடுமைகளுக்கும் முதற் காரணம் மதமேதான்.

—லாலா லஜபதிராய்

மதம் பற்றி என்றும் போராடாதே. மதம் பற்றிய சண்டைகளும், வாதங்களும் யாவும் ஞானமின்மையையே புலப்படுத்துகிறது.

—விவேகானந்தர்

மதம் என்பது ஒடுக்கப்பட்ட பிராணியின் புலம்பல்... அது மக்களுக்கு அபின். மக்களுக்கு மகிழ்ச்சி அளிப்பதாய் பிரமை காட்டுகிற மதத்தை ஒழிக்க வேண்டுமென்று கோருவது, மக்களுடைய உண்மையான மகிழ்ச்சியைக் கோருவதாகும்.

—கார்ல் மார்க்ஸ்

மதம் என்றால் குருட்டு நம்பிக்கை, வெறி, பிற்போக்கு, ஆராய்ச்சிக் கடங்காத கொள்கை, மூட பக்தி, சுரண்டல், பரம்பரைப் பாத்தியப் பாதுகாப்பு என்று எனக்கு எப்போதுமே தோன்றும்.

—ஜவஹர்லால் நேரு

மதம் பகுத்தறிவைத் தனது பரம வைரியாகவே பாவித்து வந்திருக்கிறது.

—ஷெல்லி

மதம் எப்போதும் கலைகளுக்கும், ஆராய்ச்சிக்கும், அறிவிற்கும் எதிரியாக வந்தது—வருகின்றது.

—இங்கர்சால்

மதம் சிந்தனையில் ஒரு இலாகா.

—மாக்ஸ் முல்லர்

மதம் முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டை.

—லெனின்

மதங்கள் பிரிவினைக்கும், பேதத்திற்கும் காரணமாய் இருப்பது மாத்திரமல்லாமல் மடமைக்கும், மூட நம்பிக்கைக்கும் காரணமாக இருக்கின்றன.

—பெரியார் ஈ. வெ. ரா.

வாழ்வின் பயனைக் குறைத்துக் காட்டுவதும், உண்மை உலகத்தின் உருவத்தை விபரீதமான வழியிலே மாற்றிக் காட்டுவதும் மதத்தின் செயல்முறையாகும். அதாவது: மதம் அறிவை அச்சுறுத்த எண்ணுகிறது, பலரை அவர்களின் தனிப்பட்ட பலவீனங்களில் இருந்து பாதுகாப்பதில் வெற்றியடைகிறது.

—பிரூட்

மதம் மக்களைப் பாகுபடுத்தவும்...........பிறரிடத்தில் வெறுப்புக் காட்டவும் கற்பிக்கிறது.

—தாகூர்

நீங்கள் அநுட்டிக்கிற மதம் மதமல்ல; தங்களுடைய பிறப்பு வரலாற்றை மறந்துவிட்ட ஒரு சிலருடைய அழுகிப் போன ஒரு சமுதாயத்தை எதிர்த்துத் தங்கள் மூதாதையர்களின் போராட்டங்களை மறந்துவிட்ட ஒரு சிலருடைய—இப்போது எந்த உலகத்தை நீங்கள் நிந்திக்கிறீர்களோ அந்த உலகத்தை மாற்றியமைக்கும் விஷயத்தில் பல வெற்றிகள் அடைந்த ஒரு சிலருடைய கோட்பாடுகளையே நீங்கள் மதமாகக் கொண்டிருக்கிறீர்கள்.

—மாஜினி

4. பகுத்தறிவு

மடமை மனிதனின் கொடிய சத்துரு. இதனை வேருடன் அறுத்தெறியக் கூடிய ஆயுதம் பகுத்தறிவு தான்.

—ஹெக்கல்

சிந்திக்கும் தன்மையின் கூர்மையே பகுத்தறிவு.

—பெரியார் ஈ. வெ ரா.

இன்று எனக்கு முன்பாக இருக்கும் காரியங்களைச் செய்வதிலேயே நான் திருப்தி அடைகிறேன். "இந்தக் காரியம் ஏன் நடக்கிறது?" "எதற்காக நடக்கிறது?" என்றெல்லாம் நான் அலட்டிக் கொள்வதில்லை. ஆழங் காண முடியாத விஷயங்களில் காலை விட்டுக்கொள்ளக் கூடாது என்று பகுத்தறிவு நமக்கு உணர்த்துகிறது.

—மகாத்மா காந்தி

பகுத்தறிவே மனிதனுடைய உயர்வுக்குக் காரணம். எனவே அது கற்பிக்கின்ற வழியினின்றும் விலகாமையே உத்தமம்.

—அக்பர்

பகுத்தறிவு என்பது உண்மையை அறியக் கடவுள் நமக்குத் தந்துள்ள ஒரே புனிதமான சாதனம். நம் அனை வரையும் ஒன்றாய் இயக்கத்தக்கது அதுவே. ஆனால், ஐயோ, நாம் அதைத்தான் நம்புவதில்லையே!

—டால்ஸ்டாய்

பகுத்தறிவு மனிதர்களுக்கு மிக இன்றியமையாதது. கண்பார்வையில் சிறந்த பொருள்களைப் பொறுக்கி எடுப்பதைப்போலவே, பகுத்தறிவின் மூலம் சிறந்த கருத்துக்களை அறியலாம். கண் பார்வையை அனைவரும் விரும்புவதுபோலவே பகுத்தறிவு வளத்தையும் அனைவரும் விரும்புவது இயற்கையாகும்.

—அரிஸ்டாட்டில்

பகுத்தறிவுக்குட்பட்ட பொய்களைவிட பகுத்தறிவுக் கொவ்வாத உண்மைகள் தீமை பயக்க வல்லவையாகும்.

—தாமஸ் ஹக்ஸ்லி

எதையும் ஆராய்ந்து பகுத்தறிவுக்குப் பொருத்தமான தாய் இருந்தால் அதை நம்பு. கடவுளே நேரில் வந்து

கதறினாலும் உன் பகுத்தறிவுக்கு ஒவ்வாத செயலை, சொல்லை ஏற்காதே.

—புத்தர்

பகுத்தறிவு உள்ள மனிதர்கள் நாடு, நட்பு, வீடு, இல்வாழ்வு, கூட்டுறவு என்பவைகளை உண்டாக்கிக் கொள்கிறார்கள்.

—மார்க்க அவுரேலியன்

பகுத்தறிவு ஆராயச் சொல்கிறது; சிந்திக்கச் சொல்கிறது. பகுத்தறிவு, "எனக்கு இதுவரையிலும் தான் தெரியும்; இது பற்றித் தெரியாது, ஆராய்ந்துகொண்டிருக்கிறேன்" என்று கூறுகிறது. பகுத்தறிவு வளர்ந்து கொண்டே செல்கிறது.

—இரா. நெடுஞ்செழியன்

5. காலம்

காலத்தின் நிலையை அறிந்துகொள். காலமே உன் உயிர். அதை வீணாக்குவது உன்னையே நீ கொலை செய்து கொள்ளுவது போலாகும்.

—ஜேம்ஸ் ஆலன்

காலம் என்பது அடிமைகள் பொருட்டு ஏற்பட்டதாகும்.

—பக்ஸ்டன்

காலத்தினும் சிறந்த அறிவுரையாளர் இல்லை.

—பெரிகிளிஸ்

காலத்தை மீற முடியாது, யாரும்! பொறுமையால் காலத்தைத் தழுவிச் செல்வது நலம்.

—மாந்தேன்

கால இடைவெளி பொல்லாதது; பொய்ச்சிரிப்புச் சிரித்துக்கொண்டே நோயாளிக்கு ஊசி ஏற்றும் வைத்தியனைப் போன்றது அது.

—துகிலன்

வாழ்வைத் தரிக்க காலமாதலால் காலத்தை வாழ்விலே பயன்படுத்து; காலத்தைக் கொல்வது தற்கொலை. காலத்தை வேலையில் பயன்படுத்து, அதுவே வெற்றிக்கு வழி. காலத்தைச் சிந்தனையில் செலவிடு, அதுவே சக்திக்கு வித்து.

—பிரிக் வொர்க்

காலமும் இடமும் நம் சக்தியிலேயே இருக்கின்றன.

—மாஜினி

வாழ்க்கையை வளமாக்க விரும்பினால் காலத்தை ஒரு விநாடியும் வீணாக்கக் கூடாது. காலத்தால் செய்யப்பட்டது தான் வாழ்க்கை.

—ரிச்சர்ட் சாண்டர்ஸ்

அறிவற்றவன் இடத்தையும் காலத்தையும் குறைக்க விரும்புகின்றான். ஆனால் அறிவுள்ளவனோ அவற்றை நீட்டிக்கவே விரும்புகின்றான்.

—ரங்கின்

ஒவ்வொரு நாளும் புதுப்புது நிலைக்கு வழிகாட்டுகிறது. இது பழையகாலம் அன்று: புதியதோற்றம், புதிய உண்மை, புதிய வாழ்க்கை முன் புதிய திட்டம், புதிய சமூகம், புதிய காலம் இவற்றிற்கு இஃதோர் முன்னோட்டம்.

—ஜேம்ஸ் ஆலன்

கெட்ட காலத்தைத் தாங்குவது மிகவும் கஷ்டந்தான். ஆனால் நல்ல காலத்தை தாங்கக் கூடியவர் ஒருவர் இருந்

தால், கெட்ட காலத்தைத் தாங்கக் கூடியவர் நூறுபேர் இருப்பார்கள்.

—ரஸ்கின்

6. இயற்கை

இயற்கையை மிறித் துருவி ஆராயவே மனிதன் பிறந்தான; கண் மூடிக்கிடக்க அல்ல.

—ஸ்டாலின்

இயற்கையைத் தெரிந்துகொள்ள மனிதன் விரும்பு கிறான். ஏனெனில், அதுபற்றிய அறிவு, அதன் கொடு மையிலிருந்து விடுபட வேண்டிய சக்தியை அளிக்கும்.

—ஷலியர் மாக்கர்

இயற்கையின் வசதிகளை தனது மகிழ்ச்சிக்கு உபயோ கிக்கும் திறமையை மனிதனுக்கு அளித்ததுதான் அறிவு.

—பெர்ட்ரண்ட் ரசல்

இயற்கையையும் இயற்கை விளைவுகளையும் உள்ளவாறு உணர்ந்தவனே முதியவர்களிடமும் ஒருவித அழகு இருக்கிறதென்று அறியக் கூடும்; இளைஞர்களின் அழ கையும் அவனே களங்கமற்ற இதயத்தோடு அநுபவிக்கக் கூடும்.

—மார்க்க ஒளரேலியன்

7. விதி

இயற்கையின் கொடிய தன்மையைப் பற்றிச் சிந்திக்காதே. 'விதி' விதியென்று கதறுபவர்கள் கேவல மான அடிமை உள்ளம் உடையவர்களே.

—எமர்சன்

விதி ! விதி! என்பது வீணர்கள் கூற்று. மனிதன் தான் தெரிந்து செய்தது அல்லது தன் சக்திக்கு மேற்பட்டதாகக் கருதுகிற செயலின் தவறை மறைக்கவே விதி, விதி என்று ஓலமிடுகிறான்.

—பகவன்

சோம்பேறிகள் தான் விதியைக் காரணம் கூறித் தப்பித்துக்கொள்ள முயலுவார்கள். விதியை நாம் என்ன செய்யவேண்டும் ? வரிந்து கட்டிக்கொண்டு நாம் செயலில் இறங்கி, இடைவிடாமல் முயற்சித்து 'விதி' என்பதை நாம் விரட்டியடிக்க வேண்டும்.

—ஜலாணி

'விதி' என்பது ஒடுக்கப்பட்டவர்கள், மிதிக்கப்பட்டவர்கள் கொதித்து எழாதிருக்கச் செய்த சதி.

—ஒரு பெரியார்

காரணங்களின் உட்பொருள் விளங்காவிட்டால் நாம் எதற்கும் விதி ! விதி ! என்று கதறுகின்றோம்.

—வால்டேர் எமர்

விதி விதி யென்றழுகின்றார் வினைகத் துன்பில்
விதி விதிக்கத் தம்மையன்றி வேறு—பதியொருவ
னுண்டென்று நம்பியொரு சிலரிங் கண்ணுற்றக்
கண்டறியேன் பேதையரைக் காண்.

—வ. உ. சிதம்பரம்

ஒரு பலமான தாக்குதலை நடத்தினால்—ஒரு தன்னலமற்ற முயற்சியைச் செய்தால்—மக்கள் வாழ்வில் நஞ்சைக் கலக்கும் விதி எனும் அடிமைத் தளையை நம்நாட்களிலேயே வீழ்த்த முடியும்.

—சி. என். அண்ணாத்துரை

அறிவாளிக்கு விதி பெரிது; முட்டாளுக்கு மதி பெரிது.

—ஒரு பெரியார்

8. புரட்சி

புரட்சிகள் எந்த நாளும் பின்நோக்கிச் செல்வதில்லை.

—எமர்சன்

பாதுகாப்பான வாழ்க்கை, அமைதியான நிலைமை இவற்றை நாடி நிற்பதே மக்கள் இயல்பு. ஆனால் கஷ்டங்கள் சகிக்காததாகி விடும்போது, மிக பலவீனமானவனும் எதிர்க்கத் துணிந்து விடுகிறான். இதுவே புரட்சியின் தோற்றம்.

—ஒரு பெரியார்

ஒரு புரட்சியைப் பற்றி எழுத முற்படும் சரித்திர ஆசிரியர்கள், அதன் சம்பந்தமான சகல காரணங்களையும் ஆராய்ந்தறிந்து பாரபட்சமின்றி எழுத வேண்டும். அவ் விதம் ஆராய்ந்தால்தான், தாறுமாறாகத் தோன்றியது ஒழுங்கானதாகவும், விகாரமாகத் தோன்றியது வீரம் செறிந்ததாகவும், வெளிப் பார்வைக்கு அழகான செய்கை உண்மையில் அவலட்சணமும் அக்கிரமமும் நிறைந்ததாகவும் அதனதன் சுய ரூபத்துடன் காட்சியளிக்கும்.

—சாவர்க்கர்

புரட்சி என்பது வாலிபத்தின் கூறு. பகுத்தறிவாளர் ஆயுதம். பழமை விரும்பிகள், புரட்டர்கள், எதேச்சதிகாரிகள் ஆகியோருக்கு நஞ்சு. புரட்சி என்பது மக்களின் மகத்தான சக்தி. அதைப் பொசுக்கிவிட யாராலும் ஆகாது.

—சி. என். அண்ணாத்துரை

9. அறியாமை

அறியாமையே பக்தியின் தாய்.

—கேலஸ்

அறியாமையைத் தவிர வேறு இருள் கிடையாது.

—இங்கர்சால்

காதல் காதல் அறியாமை உய்க்கிற்பின்
ஏதில ஏதிலார் நூல்.

—திருவள்ளுவர்

நெஞ்சிற் கவலை நிதமும் பயிராக்கி
அஞ்சி உயிர் வாழ்தல் அறியாமை.

—பாரதியார்

மனித வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் பெருந் தடையாய் இருப்பது அறியாமைதான.

—மாந்தேன்

அறியாமை ஒரு இருட்டறை.

—ஒரு பெரியார்

கருத்து வேற்றுமை காரணமாகப் பகைமை பாராட்டலும் கேடு சூழலும் அறியாமை.

—திரு. வி. க.

அறியாமை ஆண்டவன் சாபம்.

—மாஜினி

அறிவுதரும் கல்விக்கு ஆகும் செலவைவிட அறியாமைக்கு ஆகும் செலவே அதிகம்.

—பிளேட்டோ

அறியாமைதான் துர்பாக்கியத்தின் ஆணிவேர்.

—பிளேட்டோ

அறியாமையுடன் ஒருவன் நூறு ஆண்டுகள் வாழ்வதைவிட அறிவுடன் ஒருவன் ஒரே நாள் வாழும் வாழ்க்கையே மேலானது.

—புத்தர்

10. கல்வி

கல்வியின் பரந்த நோக்கம் மக்களைச் சிந்திக்கத் தூண்டுவதே ஆகும்.

—கிரேன்மர்

கல்வி கற்றவரை எளிதில் நல்வழியில் திருப்பலாம். ஆனால் ஏமாற்ற முடியாது. எளிதில் ஆளலாம்; ஆனால் அடிமைப் படுத்த முடியாது.

—புரோஹா

இளமையிற் கல்வி. சிலையில் எழுத்து.

—ஔவையார்

எத்தகைய கல்வியானாலும் அதனால் கிடைக்கக்கூடிய பலன்களில் மிகவும் சிறந்தது என்னவென்றால் நாம் செய்ய வேண்டிய காரியத்தைச் செய்ய வேண்டிய சமயத்தில் நாம் விரும்பினாலும் சரியே, விரும்பாவிட்டாலும் சரியே, நம்மையே நாம் செய்யும்படி வற்புறுத்தும் சக்தியே யாகும்.

—ஹக்ஸ்லி

கல்வியின் சிறந்த இலட்சியம் செயலாற்றும் சக்தியே யன்றி அறிவு பெறுவது மட்டுமல்ல.

—ஹெர்பர்ட்

கேடில் விழுச் செல்வம் கல்வி யொருவற்கு
மாடல்ல மற்றை யவை.

—திருவள்ளுவர்

கல்வி, இருளை நீக்கி ஒளியினைக் காட்டும்; இறப்பை நீக்கி, அமிர்தத்தை ஊட்டும்.

—தாகூர்

ஆண்கள் வேறு பெண்கள் வேறு என்று பாகுபாடு செய்து கற்றுக் கொடுப்பது அல்ல கல்வி; எல்லோரும் மக்கள் என்னும் முறையில் அவர்களுக்கு அறிவூட்டுவதே பரந்த கல்வி.

—ஸ்டீபன்சன்

அறிவு வளர்ப்பது மாத்திரம் அல்ல கல்வி; அது உள்ளத்தையும் உடலையும் வளர்க்க வேண்டும்.

—பகவன்

கல்வி எதற்கு? மனிதனை நல்ல தொழிலாளியாக ஆக்குவதற்கே.

—ஆஸ்பரி

கல்வி என்பது வாழ்வில் இரண்டறக்கலந்து, வாழ்வுக்குரிய பயனை அளிப்பது. அறிவையும் ஒழுக்கத்தையும் வாழ்விற்கு வழங்குவது கல்வியின் பயன்.

—திரு. வி. க.

இம்மை பயக்குமால்; ஈயக்குறைவின்றால்;
தம்மை விளக்குமால், தாம் உளராக் கேடின்றால்;
எம்மை யுலகத்தும் யாம் காணேம் கல்விபோல்
மம்மர் அறுக்கு மருந்து.

—நாலடியார்

கல்வி என்பது ஒருவரிடையே இளமையோடுமட்டும் தொடர்புடையது அன்று.

—பெர்னுட் ஷா

கல்வி என்பது தெரியாததைத் தெரியச் செய்வதல்ல ஒழுக்கத்தை ஒழுகச் செய்தது. கல்வியின் இலட்சியம் நல்ல காரியங்களைச் செய்யக் கற்றுக் கொடுப்பதன்று. நல்ல காரியங்களைச் செய்வதில் ஆசையும், ஆனந்தமும் உண்டாக்குவதே ஆகும்.

—ரஸ்கின்

இளமையிற் கல்வியைப் புறக்கணித்தவன் இறந்த காலத்தை இழந்தவன்; எதிர்கால விஷயத்தில் இறந்தவன்.

—யுரீப்பிடீஸ்

11. தன்னம்பிக்கை

தன்னம்பிக்கையே வீரத்தின் சாரமாகும். அது களைப்பற்றது; அஞ்சாத் துணிவுடையது, தளராவுறுதி கொண்டது.

—ஒரு பெரியார்

தன்னம்பிக்கை இல்லாதவனின் வாழ்க்கை காலால் நடப்பதற்குப் பதிலாக தலையால் நடப்பதை யொக்கும்.

—எமர்சன்

தம்மிடத்து நம்பிக்கை கொள்பவரே பெருமையும் வலிமையும் எய்தியுள்ளனர். எந்நாட்டுச் சரிதையிலும் என்றைக்கும் காணப்படுவது இதுவே.

—விவேகானந்தர்

நல்லது நடக்கும் என்ற நம்பிக்கை உடையவன் நான். அதற்கு ஏதேனும் சான்று இருக்கிறது என்பதற்காக அல்ல; நல்லதுதான் நடக்கும் என்ற தளராத நம்பிக்கை

பினால்தான் நான் உறுதியாக நினைக்கிறேன். அந்த நம்பிக்கையினால்தான் உத்வேகம் பிறக்க முடியும்.

—மகாத்மா காந்தி

மனிதன் கீழ்மை நிலையிலிருந்து மேம்பாடடைய வேண்டுமானால் தன்னம்பிக்கை உடையவனாகவும் தனது சக்தி என்ன என்பதை உணர்ந்தவனாகவும் இருக்க வேண்டும்.

—பெரியார் ஈ. வெ. ரா.

தன்னம்பிக்கை மட்டிலும் ஒருவரிடம் அமைந்து விட்டால் அவரிடம் எல்லா சக்திகளும் அமைந்த மாதிரியே. தன்னிட திறமைகளில் நம்பிக்கை இல்லாதவர்கள் தாம் வாழ்க்கையில் தோல்வி அடைகிறார்கள்.

—ஒரு பெரியார்

அதிருப்தி என்பது தன்னம்பிக்கையின்மையே ஆகும் அதுதான் ஆன்மாவின் நோய்.

—ஒரு பெரியார்

12. மூட நம்பிக்கை

மானிட சமுதாயத்தை இழிவுபடுத்தவும், அடிமைப் படுத்தவுமே மூடக் கொள்கைகள்—நம்பிக்கைகள் எல்லாம் ஏற்படுத்தப்பட்டு, உபயோகப்பட்டிருக்கின்றன.

—இங்கர்சால்

மூட நம்பிக்கையா—அது ஓர் அருவருக்கத்தக்க பொருளாயிற்றே—நசுக்கிப்போடு—அதை, தயங்காதே!

—வால்டேர்

மூட நம்பிக்கை மனிதருக்கு கொடிய விரோதி. இதனை ஆராயும் திறனாலும் உண்மையினாலும்தான் அடியுடன் அழிக்க முடியும்.

—ஹெக்கல்

மூட நம்பிக்கையைத் தூர எறி.

—விவேகானந்தர்

பேடி வழக்கங்கள், மூடத்தனம்—இந்தப்
பிடைகளே இங்குச் சாத்திரங்கள்.

—பாரதிதாசன்

மூட நம்பிக்கை இருளைத் தருகிறது.

—ஒரு பெரியார்

மூட நம்பிக்கை பயந்து பதுங்கும். அதனிடம் அதர்ம நினைவே அதிகம்.

—நியூமன்

மூட நம்பிக்கை மனித அமைப்பிலேயே ஓர் அம்சம். அதை ஓட்டிவிட்டோம் என்று மனோராஜ்யம் செய்யும் பொழுது அது நம் மனத்தின் ஒரு மூலையில் பதுங்கியிருக்கும். தனக்கு அபாயம் வராது என்ற நிலைமையில் திடீரென்று வெளியேறும்.

—கதே

13. இலட்சியம்.

உடல், பொருள், ஆவியால் காத்து வளர்க்கப்படுவது இலட்சியம்.

—ஒரு பெரியார்

இன்பங்களைப் பெற முயல்வதைவிட இலட்சியங்களைப் பெருக்க முயல்வதே நல்லது.

—ஆஸ்பரி

கலங்காத உள்ளம், குன்றாத ஆர்வம், விடா முயற்சி, சோர்வற்ற உழைப்பு, எல்லையற்ற துன்பங்களை ஏற்கும் சகிப்புத்தன்மை இவைகளே இலட்சிய சித்திக்கான இலட்சணங்கள்.

—ஒரு பெரியார்

உயர்ந்த இலட்சியத்திற்காக இடையறாது உழைப்பதில் தான் ஒருவன் உயிர்வாழ்வதின் பெருமை முழுதும் அடங்கியிருக்கிறது.

—பெர்னாட் ஷா

எவ்வளவு இடுக்கண் ஏற்பட்டபோதிலும் இலட்சியத்தை மாத்திரம் ஒருவன் விடாது பற்றிப்பிடித்து நிற்பானானால் எப்படியும் வெற்றி பெறுவான்.

—க்ளென் மார்டின்

இலட்சியத்தை அடைவதற்காகக் கஷ்ட நஷ்டம் என்ற விலையைக் கொடுத்தே ஆகவேண்டும்.

—பெரியார் ஈ. வெ. ரா.

இலட்சியமுடையான், ஆயிரம் பிழை இயற்றுவனாயின் இலட்சியமிலாதான் ஐயாயிரம் பிழை இயற்றுவான்—என்பது உறுதி. ஆதலால் இலட்சியமுடைமை மிக நன்று.

—விவேகானந்தர்

இலட்சியம் இல்லாத மனிதன் திசையறி கருவி இல்லாத கப்பலைப் போன்றவனாவான்.

—ஆவ்பரி

கடைசியில் இலட்சியத்தை அடையக்கூடிய செயல்களைச் செய்தால் மட்டும் போதாது. செய்யும் ஒவ்வொரு செயலுமே ஒரு இலட்சியமாய் இருத்தல் வேண்டும்.

—கதே

இலட்சியத்துடன் சேவை செய்யாவிடில், இலட்சியம் எட்டாமற் பறந்துபோய்விடும்.

—மாஜினி

சிறந்த இலட்சியங்களை வீரச்செயல்மூலம் நிறைவேற்றி மடிவது, நல்ல மரணமேதான். இறந்த பின்னும் இலட்சிய வெற்றியால் மரணம் தோன்றுகிறது என்றுகூட சொல்லாமல்; புகழின் கதவையே திறந்துவைக்கிறது, இந்த வீர மரணம்.

—பேகன்

14. சிந்தனை

சிந்தனை மூட நம்பிக்கையின் எதிரி.

—ஷேக்ஸ்பியர்

சிந்தனை செய்யாத மனமும், செயலாற்றாத வாழ்வும் சவக்குழியில் சரண்புக.

—ஒரு பெரியார்

மனம், இந்திரியம், அறிவு இத்தனையும் போட்டு விசாரணை என்னும் மத்தால் கடைந்தால் உண்டாகும் வெண்ணெய்க்குத்தான் சிந்தனை என்று பெயர்.

—சாமி கைவல்யம்

சிந்தனை பகுத்தறிவின் தோழன்.

—ஒரு பெரியார்

சிந்தனை செய்து செயலாற்றுதலே சாலச்சிறந்தது.

—மேஸ்டர் ஓபி

ஒவ்வொரு புரட்சி என்கிற மலரும் முதலில் மக்கள் உள்ளத்தில் சிந்தனை என்கிற அரும்பாக இருந்தது தான்.

—எமிலிஜோலா

சிந்தனை செய்யாதவன் முட்டாள். சிந்திக்கத் துணியாதவன் கோழை; சிந்தனை செய்ய மறுப்பவன் பிடிவாதக்காரன்.

—டிரம்மண்ட்

கடவுளே! என் இருதயத்தினின்றும் நீ விலகிப் போனாலும் போ. அதனால் பரவாயில்லை, ஆனால் என் உள்ளத்தில் தூய்மையான சிந்தனைகளுக்குமட்டிலும் இடமளிக்கும் பெருந்தன்மையும், தீய சிந்தனைகளுக்கு இடமளிக்காத உறுதியையும் நிலை நாட்டிவிட்டுப் போ.

—தெரீஸா

செயலற்றுக்கிடந்த உலகை, சிந்தனை செயலுக்குத் தூண்டியது! சிந்திப்பதே குற்றமென்ற செப்படி வித்தைக்கு இனி ஏமாறப்போவதில்லை. சிந்தனை ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் சுருங்கி அடங்குவதல்ல. அந்தச் சிந்தனையை நெடுந் தூரத்திற்கு ஓட்டி, ஒரு முடிவைக் காணும் நிலைமையை எல்லோரும் அடைவதில்லை. அதற்குக் காரணம் பற்பலர் பற்பலவிதமாகச் சொன்னாலும், நாமறிந்த மட்டில் சிந்தனையை ஒரு கடல் என்றே சொல்லவேண்டும்.

—ஒரு பெரியார்

சிந்தனை செய்யாதிருக்கக்கூடிய இடம் மரணம் ஒன்றே. ஆனால் சிந்தனை செய்வதை அந்த இடத்திற்காக ஒரு போதும் விட்டுவைக்கக் கூடாது.

—ரஸ்கின்

15. முயற்சி

முயற்சியே பெரும் பாக்கியம்.

—உருதுப் பழமொழி

முயற்சியின்மையை எல்லா வழியாலும் நீக்கல் வேண்டும். முயற்சியென்பது எதிர்த்தலென்றே எப்போதும் பொருள்படும்.

—விவேகானந்தர்

முயற்சி செய்யும் ஆன்மாவை நோக்கி அமரர்கள் நெருங்கி வருகிறார்கள்.

—ஸொராஸ்டர்

தெய்வத்தால் ஆகாதெனினும்—முயற்சி
மெய்வருந்தக் கூலிதரும்.

—திருவள்ளுவர்

ஒரே நாளில் தேகாப்பியாசம் எவ்வளவு கஷ்டமாகச் செய்தாலும், உடலை சக்தியுள்ளதாகச் செய்யாது. ஆகாரத்தைப்பற்றிய வெறும் விருப்பம் சாப்பாட்டைத் தயாரித்துத் தராது. இந்த உதாரணங்களால் நாம் தெரிந்துகொள்வது என்னவென்றால், வெறும் எண்ணம் எவ்வளவு பரிசுத்தமானதாக இருந்தாலும், முயற்சியின்றி பலன் ஏற்படாது. முயற்சி உண்மையானதாகவும், நிரந்தரமானதாகவும் இருக்க வேண்டும்.

—தியாகபூமி

முயற்சியுடையோர் இகழ்ச்சியடையார்.

—ஔவையார்

16. வெற்றி

வெற்றி, எண்ணத்தைப் பொருத்து இருக்கின்றது.

—நெப்போலியன்

தவறுகளை ஒத்துக்கொள்ளும் தைரியமும் அவைகளை விரைவில் திருத்திக் கொள்வதற்கான பலமும்தான் வெற்றி பெறுவதற்கான சிறந்த குணதிசயமாகும்.

—லெனின்

உறுதியைப்போல உழைப்பும் இருந்தால் நீ வெற்றி காணுவாய்.

—ஷெல்லி

"வெற்றி பெறுவோம்" என்ற எண்ணமும் தன் பலத்தில் தான் கொண்ட நம்பிக்கையுமே ஒரு படைக்கு வேறெதையும்விட அதிகமாக வெற்றியைத் தீர்மானிக்கக் கூடியது.

—கிராண்டு

வெற்றி என்பது மதில்மேல் இருக்கும் பூனை. அது எந்தப் பக்கம் குதிக்கும் என்று சொல்ல முடியாது. ஒரு வேளை அது ஒரு பக்கமும் குதிக்காமல்கூட இருந்து விடலாம்.

—பகவன்

பெரிய நெருக்கடிகளுக்கு இடையேதான் இறைவன் வெற்றி பெறுவதற்கான வழியையும் வகுத்திருக்கின்றான்

—ஹோம்ஸ்.

வெற்றி என்பது தோல்வியின் மறை உருவம்.

—ஒரு பெரியார்

தியாகத் தழும்பேறுமல் நீ வெற்றி பெற முடியாது.

—புசிடன்

"வெற்றி" என்ற வார்த்தையை நினைப்பதை நிறுத்துங்கள். அதற்குப் பதிலாக "உழைப்பு" என்ற வார்த்தையை உச்சரியுங்கள். அதை நன்ருகச் செய்யும்வரையில் சொல்லிக்கொண்டே இருங்கள். ஒருநாள் அந்த "உழைப்பு" என்ற வார்த்தையே 'வெற்றி" என்ற வார்த்தையாக மாறுவதைக் காண்பீர்கள்.

—பாபுராவ்

ஒருவன் தனக்கு அளவற்ற உற்சாகம் இருக்கும் எந்தத் தொழிலும் வெற்றி பெற முடியும்,

—சார்லஸ் ஷ்வாப்

வெற்றிபெற வேண்டும் என்னும் உங்களுடைய திடமான எண்ணம் தான் வேறு எந்த ஒரு காரியத்தையும்விட மிக மிக முக்கியமானது.

—ஆபிரகாம் லிங்கன்

எதிர்ப்பு எங்கு இல்லேயோ அங்கு வெற்றி இல்லே.

—பெர்னுட் ஷா

வெற்றி, விடாது உழைப்பவர்களேயே அடைகிறது.

—ஒரு பெரியார்

இரவு பகலாக ஓயாது உழைத்தால்தான் வெற்றி நழுவாமல் காக்கமுடியும். இல்லேயென்றல் அதுபிடிக்கப் பிடிக்க நழுவிவிடும்.

—ஸ்டூவர்டு ஷெர்மன்

வெற்றிகரமாகப் பின் வாங்கி ஓடுவதுதான் காதலின் மாபெரும் வெற்றி.

—நெப்போலியன்

17. அரசியல்

அரசியல் என்பது பணக்காரரிடமிருந்து பணமும் ஏழைகளிடமிருந்து வாக்குரிமையும், ஒருவரிடமிருந்து மற்றொருவரைக் காப்பதாகக் கூறிப் பெறும் கலை.

—இங்கிலீஷ் டைஜெஸ்ட்

அரசியல் கொடுமைகளிலிருந்து நாம் தப்பித்துக் கொள்வதற்கான பாதுகாப்பு வேண்டும். இது கிடைப்பது அரிதாயிருக்கிறது. போர் முறைகள் ஒவ்வோராண்டும் வளர்ந்துகொண்டே போகிறது. இதனல் நமது பாதுகாப்பின் அவசியமும் அதிகரித்து வருகிறது.

—பெட்ரண்ட் ரஸ்ஸல்

அரசியல்வாதி பாதரசத்துக்கு ஒப்பானவன். அந்த பாதரசத்தின் மேல் விரலை வைத்துப் பார்த்தால் அதன் கீழ் ஒன்றுமே இருக்காது.

ஆஸ்டின் ஓ'மாலே

இந்தக் காலத்தில் மிக மிக மலிவாகக் கிடைப்பது ஒரே ஒரு சரக்கு. அதுதான் 'அரசியல்'

—ஒரு பெரியார்

18. அரசாங்கம்

மக்களின் தேவைக்காக, மக்களின் அறிவு வகுத்துக் கொண்ட வகை முறையே அரசாங்கம்.

—எட்மண்ட் பர்க்

சமுதாய வாழ்க்கையை மிகச் சிறந்த வாழ்க்கையாக மாற்றுவதுதான் ஒரு சிறந்த அரசாங்கத்தின் நோக்கமாக இருக்க வேண்டும்.

—அரிஸ்டாடில்

அரசாங்கம் சமூகத்துக்கே கேடு சூழ்வதாகவும் ஆகலாம். ஆதலால் அரசாங்கத்துக்கும் வரையறைகள் இருக்கவேண்டும். சமூகத்திலுள்ள பல வகுப்புக்களும் ஒன்றாய் வாழ வேண்டும். ஒரு சாரார் பிறரை அடக்கி ஆள்வதோ பிறரைச் சுரண்டி வாழ்வதோ கூடாது. இக்குறிக்கோள்கள் நிலைபெறுவதற்கே அரசாங்கம் இருக்கிறது.

—மாடிசன்

அரசாங்கமே மக்கள் உயிர்.

—கம்பர்

மக்களுக்காக, மக்களால் நிறுவப்பட்ட மக்கள் அரசாங்கம் பூமியிலிருந்து ஒரு நாளும் மறையாது.

—ஆபிரகாம் லிங்கன்

மனித வர்க்கத்தின் அறிவின்மையால், இதுவரை இழுக்கப்பட்டு வந்த இலட்சிய நம்பிக்கைகள், இப்போது நம்முடைய அறிவு வளர்ச்சியால் நமக்கு எட்டும் தூரத் திற்குக் கொண்டுவரப் பட்டிருக்கிறது. மனித வர்க்கம் அந்த வாழ்க்கை இலட்சியங்களைப் பெற, அரசாங்கம் துணை புரிய வேண்டும்.

—பெர்ட்ராண்ட் ரசல்

மக்களின் எண்ணங்கள் மாறுவதுபோல் அரசாங்கங் களும் மாறும்.

—பிளேட்டோ

ஆசைக்காகவோ, அதிகாரத்திற்காகவோ ஓர் அரசாங்கம் இருத்தல் கூடாது. உண்மையான அரசாங்கம் மக்களுடைய அறிவாக விளங்குகிறது.

—மாஜினி

பொது மக்களின் பூர்ண ஒத்துழைப்பு இல்லாவிட்டால் அரசாங்கம் பாழாய்விடும். அரசாங்கத்தார் செய்பவை எல்லாம் நமது நன்மைக்காகவே என்பதை நாட்டில் உள்ளோர் ஒவ்வொருவரும் அறியவேண்டும். அப்படி அறிவாரானால் அரசாங்கத்திற்கும் மக்களுக்கும் இடையே நேசமும் ஒத்துழைப்பும் பெருகும், அந்நாடு சிறந்தோங்கும்.

—ஒரு பெரியார்

19. கடமை

மிகவும் மேல் நிலையில் இருப்போரும், மிகவும் கீழான நிலையில் இருப்போரும், எல்லோரும் செய்ய வேண்டிய கடமை ஒன்று உண்டு. அதாவது: ஓயாமல் தம்மைத் திருத்திச் செம்மை செய்து கொண்டிருப்பது.

—கன்பூஷியஸ்

மக்கள் தம்மைத் தாமே கொன்றொழித்துக் கொள்ளாமல் காப்பது சுதந்திர மனிதர் யாவருக்கும் உள்ள முதற் கடமை; அவர்களுடைய தலைவர்களுக்கும் அதுவே முதன்மையான கடமையாகும்.

—ஐசனோவர்

கடமையும் உரிமையும் கொழுக் கொம்புபோல. கடமையின்றி உரிமையில்லை; உரிமையோடு ஒட்டியிருப்பதுதான்

கடமை. கடமை அஸ்திவாரம்; உரிமை அதன்மீது எழுப்புகிற கட்டிடம்.

—ராஜாஜி

கடமை உணர்ச்சியே உன் நேர்மையான வாழ்வுக்குச் சூத்திரம்.

—ஹென்றிபோர்டு

ஆண்களின் குணத்தில் மிருகத்தனமும் குழந்தைத் தனமும் இருக்கின்றன. இந்த மிருகத்தனத்தைக் குறைத்து, குழந்தைத் தனத்திற்குப் பயிற்சியளிப்பது தான் பெண்களின் கடமை.

—டாக்டர் ராதாகிருஷ்ணன்

சட்டங்களுக்குப் பயந்து நடப்பது, வரிகளை ஒழுங்காகச் செலுத்துவது, அரசாங்கத்திற்குத் துரோகம் செய்யாதிருப்பது ஆகியவை மட்டும் தனி நபரின் கடமைகள் என்று கருதக்கூடாது. எது சரியோ, அதைத் தெரிவிப்பதோடு, அமுல் நடத்தவும் வேண்டும். எது தீயதோ, அதைக் கண்டு பிடிப்பதோடு முறியடிக்கவும் வேண்டும்.

—எட்மண்ட்பர்க்

எந்தக் காரியத்தை செய்வதற்கு முன்னால் வெறுக்கிறோமோ, செய்யும்போது அலுக்கிறோமோ, செய்த பின் அதைப் பற்றியே ஓயாமல் பேசுகிறோமோ அதற்குப் பெயர் தான் கடமை.

—ஒரு பெரியார்

ஒரு மனிதன் மற்றொரு மனிதனிடமிருந்து தனக்காக எதை எதை எதிர்பார்க்கின்றானோ அதைத்தான் கடமை என்கிறோம்.

—பெரியார் ஈ. வெ. ரா.

அரசாங்கம் அநீதி இழைக்குமானல், அதோடு ஒத்துழைப்பதை நிறுத்திக்கொள்வது நாட்டு மக்கள் கடமை.

—மகாத்மா காந்தி

கெட்ட காலம் வந்தால் எப்படிச் சகிப்பது என்பது குறித்து நல்ல காலத்தில் சிந்தனை செய்வது மக்கள் கடமை.

—டெரன்ஸ்

மற்றவர்களின் கடமைகளைச் சுட்டிக் காட்டுவதற்கு முன், யாவரும் தம்முடைய கடமைகளைச் செய்து முடிக்க வேண்டும்.

—வல்லபாய் படேல்

20. உரிமை

உரிமையை உபயோகிப்பது என்பது அவசியத்தை முன்னிட்டு திறமையின் அளவுக்குட்பட்டிருக்கிறது.

—மாஜினி

ஒவ்வொருவருக்கும் தங்கள் மனதிற்குள் உண்மையை நினைக்க இந்நாட்டில் உரிமையுண்டு. ஆனல் அதைச் சொல்வதற்கு உரிமையில்லை.

—ஒரு பெரியார்

ஒவ்வொரு மனிதனின் உள்ளத்திலும் உண்மை இருக்கிறது. அதைத் தேடிக் கண்டுபிடிக்க வேண்டும். தான் கண்ட உண்மை தனக்கு எப்படி வழிகாட்டுகிறதோ, அப்படியே ஒருவன் நடக்கவேண்டும். அதே சமயத்தில் தான் கண்ட உண்மைக்கேற்பவே நடக்கவேண்டுமென்று மற்றவர்களைக் கட்டாயப்படுத்த யாருக்கும் உரிமை கிடையாது.

—மகாத்மா காந்தி

பலமுள்ளவர்க்குள்ள உரிமைகளை எல்லாம், பலமில்லாதவர்களும் பெறவேண்டும். அதுதான் உண்மையான ஜனநாயகம்.

—ஒரு பெரியார்

ஒருவன் வெடி மருந்துக் கிடங்கில் வேலை பார்ப்பவனாயிருந்தால், புகை பிடிப்பதற்கு அவனுக்கு இயற்கையாயுள்ள உரிமையைக் கட்டுப்படுத்தித்தான் ஆகவேண்டும்.

—ஒரு பெரியார்

21. அடிமை

ஆராய இயலாதவன் குருடன். ஆராய மனமில்லாதவன் மடையன். ஆராய பயப்படுபவன் அடிமை.

—வில்லியம் பெர்னார்டு

அடிமையாக இருந்து மோட்சம் அடைவதைவிட அடிமைத்தனத்தில் இருந்து விடுதலை அடைவதையே மோட்சம் அடைந்ததாக எண்ணுவதுதான் உயரிய கொள்கை, இணையில்லாதது.

— இங்கர்சால்

அடிமைத் தன்மையை ஒழித்துச் சுதந்திர வாழ்வில் இன்பம் காண்பதே மனித வாழ்வின் இலட்சியம்.

—பகவத்கீதை

அடிமை மனிதனாக ஆயிரம் ஆண்டுகள் வாழ்வதைவிட, விடுதலை வீரனாக ஒரு விநாடி நேரம் வாழ்வது மேல்.

—அடிசன்

கடவுள் புவியைப் படைத்தார்; வானத்தைப் படைத்தார்; விரிந்து கிடக்கும் கடலைப் படைத்தார்; ஆனால் அடிமையை மட்டும் படைக்கவில்லை.

—ஜார்ஜ் வாஷிங்டன்

அடிமையாய் இராதே. அடிமையும் கொடுங்கோன்மையும் ஒரே பொருள் கொண்ட மொழிகளாம்.

—விவேகானந்தர்

ஒருவன் மற்றொருவனை அடிமையாக்குவது நியாயமென்று விவாதிக்கிறான். அவனை மற்றொருவன் தான் அடிமைப்படுத்துவது நியாயம் என்று சொல்லலாமல்லவா? ஒருவன் வெண்ணிறத்தான்; மற்றொருவன் கருநிறத்தான்; ஒருவன் பலசாலி; மற்றொருவன் பலவீனன். இதனை முடிவு செய்ய வேண்டுமானால், எவனும் தன்னைவிட திறமைக் குறைவாய் இருப்பவனை அடிமையாக்குவது நியாயமாகிவிடும்.

...ஆபிரகாம் லிங்கன்

............ஆயிரம் நன்மை வந்தாலும்
அடிமை வாழ்வது நரகம் எந்நாளும்.

—நாமக்கல் கவிஞர்

அறிவுள்ளவன் அடிமையாக இருப்பதைக் காட்டிலும் இறப்பதை உயர்வாகக் கருதுவான்.

—ஒரு பெரியார்

22. விடுதலை

விடுதலை வேர்விட ஆரம்பித்ததும், வெகுவேகமாக வளர்ந்து, பெருகி, விரிந்து பரவும்.

ஜார்ஜ் வாஷிங்டன்

விடுதலைப் பாதை அமை என்று கத்திக்கொண்டே விடுதலைப் பாதை அமைத்துவிட்டு மாண்டுபோனவன் மக்கள் மனதிலிருந்து ஒரு நாளும் மறைவதில்லை.

—மாண்ட்கோமரி

விடுதலை மரம் கொடுங்கோலர்களால் குருதி நீர் பாய்ச்சப்படும் போதே வளருகிறது.

—பெர்ட்ரண்ட்பெரி

விடுதலை இல்லாதபோது வாழ்வு சாரமற்றுவிடுகிறது. சப்பிட்டுப் போகிறது. பொருளற்றுப்போகிறது.

—அடிசன்

அடிமையும் வாழ்வும் அடிமைத் தனத்திலும் சிறையிலுந்தான் கிடைக்குமோ? வேண்டவே வேண்டாம்; எனக்கு வேண்டியது விடுதலை அல்லது மரணம்.

பேட்டிரிக் ஹென்றி

கண்களுக்கு ஒளி; மூக்கிற்குக் காற்று; உள்ளத்திற்கு காதல் உணர்வு எப்படியோ, அப்படியே உயிருக்கு விடுதலையும்.

—இங்கர்சால்

விடுதலையினால் பொறுப்பு ஏற்படுகிறது. பெரும் பாலான மக்கள் இதனால்தான் அதுவரையில் அச்சமடைகின்றனர்.

—பெர்னாட்ஷா

பிறர் விடுதலையை மறுப்பவர்கள்தான் அதற்கு உரியவராகார்.

—ஆபிரகாம் லிங்கன்

விடுதலையை நன்கு பயன்படுத்தும் தகுதி வரும்வரை, எவரும் அதற்கு உரியவராகார் என்பது ஒரு மறுக்க முடியாத உண்மை என்று பல அரசியல் அறிஞர்கள் பசப்புவதுண்டு. நீந்தக் கற்றுக்கொண்டபின் அன்றி எவரும் நீரில் இறங்கக் கூடாதென்று பேசிய பழைய

கதையில் வரும் படித்த முட்டாள் கூறுவதையே இது நினைவூட்டுகிறது.

—மக்காலே

நமது நன்மையைத் தேடுவதை நாம் விரும்பும் முறையிலே நாமே செய்யும் உரிமை தருவதே விடுதலை. அந்த உரிமையை நாம் பிறருக்கு மறுக்காமலும், அவர்கள் அதைப் பெறுவதை மறுக்காமலும் இருக்கும் வரை அது உண்மையான விடுதலையாகும்.

—ஸ்டூவர்ட் மில்

வேறு எந்த விடுதலையும் எனக்கு வேண்டாம். அறிய, ஆராய, அதன் முடிவை நம்ப, நம்பியவற்றைப் பிறருக்கு எடுத்துச் சொல்ல, இவற்றிற்கான விடுதலையே எனக்கு வேண்டும்.

—மில்டன்

23. நாடு

உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்
சேரா தியல்வது நாடு.

—திருவள்ளுவர்

சுதந்திரம் இல்லா ஒரு நாடு
நரிபுலி பேய் மிகும் பெருங்காடு

—நாமக்கல்கவிஞர்

என் தாய் நாடு யாதாயினும் ஆகுக. என்ன குறைகளுடையதாயினும் ஆகுக. எப்படியும் அது என் தாய்நாடே.

—சார்லஸ் சர்ச்சில்

என் நாடு! சரித்திரப் பெருமை பெற்ற என் தாய்த் திருநாடு! உலகிற்கெல்லாம் கலையும் நாகரிகமும் கற்றுத் தந்த பழம் பெரும் நாடு, இன்றைய உலக முன்னேற்றத்தில் பின் தங்கி இருப்பதேன்? நீண்ட நெடுந் தொலைவு ஓடிக் கடலில் விழும் மாநதிகள், வானத்தைமுட்ட நிற்கும் மலைச் சிகரங்கள், பூமித்தாயின் இதயத்தினுள்ளே புதைந்து கிடக்கும் கனிப் பொருள்கள், மண்ணிலே மாயம் செய்யும் விவசாயப் பெருமக்கள், இன்னும் வேண்டிய மூலப் பொருள்கள், அதைப் பயன்படச் செய்யும் மனித சக்தி இவை யாவும் நிறைந்து இன்றும் குறையுள்ள நாடாக இருப்பதேன்?

—மார்க்சிம் கார்க்கி

நல்ல நாடானால், அதிலே அறிவு நிலவவேண்டும்: அன்பு திகழவேண்டும்: துணிவு செறிதல் வேண்டும். பழமையைப்பற்றித் தொங்கும் இழிதன்மை ஒழிய வேண்டும்.

—பெர்ட்ரண்ட் ரசல்

ஒவ்வொரு நாடும் தன் சென்ற கால சரித்திரத்தோடு ஒட்டியே முன்னேறவேண்டும். குறுக்கு வழியிலே ஓடி தன் லட்சியத்தை எட்டிப் பிடித்துவிட முடியாது.

வுட்ரோ வில்சன்

நாட்டை ஒவ்வொருவனும் முதன்முதலில் தனதாக்கிக் கொள்ளவேண்டும். நாடு இல்லாதவரை வாழ்க்கையில்லை, வாழ்க்கையில்லாதவரை சமூகமும் சமுதாயமுமில்லை.

—மாஜினி

எல்லா வளங்களும் மலிந்த நாட்டைத்தான் சொர்க்கம் என்கிறோம்.

—காளிதாசன்

என் தாய்த் திருநாடே! உன் பொருட்டு நான் கந்தையை அணிவேன்; கூழையுங் குடிப்பேன். உனக்கு சேவை செய்வதைவிட சிறந்தது வேறு என்ன?

—ஒரு பெரியார்

24. நீதி

நீதி மெதுவாகத்தான் நகரும்; ஆனால் ஒருபோதும் வழியிலேயே தங்கிவிடாது.

—ஒரு பெரியார்

நீதி, பணச் செலவு அதிகமின்றியும் வேகமாகவும் கிடைக்கவேண்டும். பணம் அதிகம் படைத்தவனுக்குத் தான் நீதி கிடைக்கும் என்று இருக்கக்கூடாது.

—பேகன்

நீதி அல்லது நடுநிலைமையே சகல நற்குணங்களுக்கும் அஸ்திவாரம். நமக்குச் சஞ்சலபுத்தியும், கவனக்குறைவும், இதர விஷயங்களில் இச்சையும், எளிதில் ஏமாறுந் தன்மையும் இருந்தால் நாம் எவ்விதம் நீதியுடன் நடக்க முடியும்?

—மார்க்க அவுரேலியன்

ஒருவன் செய்யத்தக்கவைகளைச் செய்யாமையாலும் அநீதிசெய்கிறான்; செய்யத்தகாதவைகளைச் செய்வதாலும் அநீதி செய்கிறான்.

—ஒரு பெரியார்

நீதியானதைச் செய்வதில் திருப்தி அடைவதும் அதனால் மனச்சாந்தி பெறுவதும் ஆன்மாவின் இயற்கையாகும்.

—ஒரு பெரியார்

25. சுதந்திரம்

சுதந்திரம் என்பது நல்லதை அடைவதற்கான ஒரு வழி. அதுவே முடிவல்ல. சமத்துவம் காண்பதற்குச் சுதந்திரம் ஒரு சாதனமாய் இல்லாவிட்டால், சுதந்திரம் என்பதற்குப் பொருளே இல்லை.

—மாஜினி

இனிப்பாய் இருப்பது சர்க்கரையின் இயற்கை. புளிப்பாய் இருப்பது புளியின் இயற்கை. அதுபோல சுதந்திரமாய் இருப்பது மனிதனுடைய இயற்கை.

—விக்டர் யூகோ

சுதந்திரம் எனது பிறப்புரிமை. சுதந்திரத்தை மற்றவர்கள் கொடுத்து வாங்க முடியாது. அப்படிவாங்கும் சுதந்திரம் நீண்ட நாள் நிலைக்கவும் நிலைக்காது.

—திலகர்

எனக்கு வேண்டியது சுதந்திரம், அதைக் கொடு. சுவர்க்கமே எனது சிறையாக அமைந்தாலும் அதன் உயர்ந்த சுவர்களைத் தாண்டிக் குதிக்கவே விரும்புவேன்.

—ஜாண்டிரைடன்

நம் மனத்திற்குத் தோன்றியதைச் செய்து, மனம் போன போக்கில் போவது சுதந்திரம் அல்ல. எந்தச் சமயத்தில் எதைச் செய்யவேண்டுமோ அதைத் தீர ஆலோசனை செய்து, அதன்படி நடப்பதுதான் உண்மையான சுதந்திரம்.

—கரிபால்டி

சுதந்திரமே! உன் பெயரால் எவ்வளவு அநீதிகள் இழைக்கப்படுகின்றன?

—கோ'திசோபாமை

சரியான ஊழியமே பரிபூரண சுதந்திரம்.

—ரஸ்கின்

பெரிய வல்லரசுகள் சிறு நாடுகளின் சுதந்திரத்தில் தலையிடுவதை நிறுத்தும் வரை உலகத்தில் அமைதி ஏற்படாது.

—ஆபிரகாம் லிங்கன்

என்னுடைய தாய் நாடு எனக்கு எவ்வளவோ அருமையானது; ஆனால் தாய் நாட்டின் சுதந்திரம் எனக்குத் தாய் நாட்டைவிட அருமையானது.

—வால்டேர்

சுதந்திரமே எனது தேவை; ஆனால் அதை நம்பியிருக்க நான் வெட்கமடைகிறேன்.

—தாகூர்

சுதந்திரம் இருக்கிறதே, அது அறிவின் குழந்தை.

—இங்கர்சால்

சுதந்திரம் என்பது சமூகத்திடையேயுள்ள ஒரு ஒப்பந்தமாகும்.

—டோக்கி

எங்கும் மனித உரிமைகளே பிரதானம் என்னும் இடத்தில்தான் சுதந்திரம் உண்டு.

—ஒரு பெரியார்

26. குடியரசு

குடியரசைப்பற்றி என்னுடைய கருத்து இதுதான்: குடியரசின் கீழ், சக்திவாய்ந்தவர்களைப் போலவே சக்தி இல்லாதவர்களும் ஒரே மாதிரி சௌகர்யங்களை அடையப் பெறவேண்டும்.

—மகாத்மா காந்தி

மக்களே—மக்களை—மக்களுக்காக ஆள்வது என்பது தான் குடியாட்சி.

—ஆபிரிகாம்லிங்கன்

குடியாட்சி என்பது ஒரு கல்லறை போன்றது; அது வாங்குவதை என்றும் திருப்பித் தருவதில்லை.

—புல்வெர்ரிட்டன்

குடியாட்சியில் நல்ல அமைப்பும், ஒழுங்கும் கட்டுப் பாடுகளும் இருக்கவேண்டியதே. ஆனால் அதன் உயிர் நிலை தனி மனிதன் சுதந்திரமே ஆகும்.

—சார்லஸ்ஹேலன்ஸ்

குடியாட்சி என்றால், மக்களை மக்களுக்காகவே, மக்களைக்கொண்டே தடிகளால் அடித்தடக்குவது என்று பொருள்.

—ஆஸ்கார் ஒயில்டு

எவ்வளவோ தவறுகள் இருந்தாலும் குடியாட்சி என்பது சாதாரண தொழிலாளிக்கு இதுவரை கிடைக்காத மதிப்பைத் தந்திருக்கிறது.

—சிங்கிலர் லிவிஸ்

குடி மக்கள் ஆட்சி என்பது, கொந்தளிக்கும் கடல், மேடைப் பேச்சு என்பது சுழற்காற்று; இதில் அரசாங்கம் என்னும் கப்பல் எப்படிச் செல்ல முடியும்.

—பிளாட்டோ

கொடியவர் சிலரின் நியமனத்திற்குப் பதிலாக, தகுதி யற்ற பலர், சிலரைத் தேர்ந்தெடுப்பது என்பதை குடியாட்சி ஒரு மாற்றாகக் கொடுத்திருக்கிறது.

—பெர்னட்ஷா

குடியரசின் தீங்குகளுக்கு மருந்து இன்னும் அதிகமான குடியரசு உரிமைகள் அளிப்பதே ஆகும்.

—ஆல்பிரைட் ஸ்மித்

குடிமக்களின் ஒழுக்கம்தான் ஒரு நாட்டில் குடியரசு முறையைக் காப்பாற்றி வைத்திருக்க முடியும், ஒரு குடியரசு நாட்டில் மக்கள் மன்னர்களாகவும் மக்களாகவும் இருக்கிறார்கள். அவர்கள் சட்டத்தை இயற்றவும் அதை நடைமுறைக்குக் கொண்டு வரவும் செய்கிறார்கள். தங்களுக்குத் தாங்களே வரிவிதித்துக் கொள்கிறார்கள். எந்த விநாடியில் மக்கள் தாங்கள் இயற்றிய சட்டங்களுக்குக் கீழ்ப்படிய மறுக்கிறார்களோ, அந்த விநாடியே குடியரசுக்கு ஆபத்து ஏற்பட்டுவிடும்.

—மாண்டெஸ்க்யூ

குடியரசின் அழிவுக்குக் காரணமாக இருப்பது டாம்பீக வாழ்வு; முடியாட்சி முடியக் காரணமாக இருப்பது வறுமை.

—திருமதி மாண்டேகு

'நாட்டுக்கு நாம் அடிமை' என்பதே சர்வாதிகாரம். 'நாட்டின் நலனுக்கு மட்டும் நாம் அடிமை' என்பதே குடியரசு.

—ஒரு பெரியார்

குடியரசு என்பது தேசத்தினர் பொறுப்பிலிருக்கும் தேசிய அரசாங்கமே.

—மாஜினி

27. கலை

கலை, கலையாக இருக்கவேண்டும் என்றால், அது ஆறுதல் தரவேண்டும். எல்லா உண்மைக் கலையும் தன்னை அறிய துணைபுரியவேண்டும். சீலம் நிறைந்த வாழ்க்

கையின் கட்டுக் கோப்பும் அடிப்படையும் இல்லாத கலை என்ன கலை?

—மகாத்மாகாந்தி

கலை, ஓர் இன மக்களின் மனப்பண்பு, அவ்வின மக்களிடையே தோன்றும் தெளிவு, வீரம் ஆகியவற்றின் எடுத்துக்காட்டு. எனவே, கலை இனவளர்ச்சிக்கு ஏற்றபடி மாறியும் வரிந்தும் வருமென்பதே நுண்ணறிவாளரின் துணிவு.

—அண்ணாத்துரை

மக்கள் ஒருவரை ஒருவர் அறிந்துகொள்ள உதவும் நல்ல முறைகள் பலவற்றுள் ஒன்று கலையாகும். சச்சரவுகள் ஏதேனும் இருந்தாலும் அவைகளைப் புறக்கணித்து மனப்பூர்வமாகப் பழகுவதற்கு இது உதவுகிறது.

—ஜவகர்லால்நேரு

உண்மையான கலை நாடு என்னும் எல்லையைக் கடந்தது. அது மக்களை ஒன்றுபடுத்தி சகோதரத்துவத்தைத் தோற்றுவிக்கும் ஆற்றல் வாய்ந்தது.

—ருக்மணிதேவி

சமுதாயப் பிரச்னைகளை முக்கிய குறிக்கோளாகக் கொண்ட கலைதான் பயனுள்ளது, போற்றத் தகுந்தது. அடிமைத்தனத்திற்கு விரோதமாக பணக்காரத்தனத்திற்கு விரோதமாக எழுப்பப்படும் கலை மதிப்பிற்குரியதாகும்.

—ஆண்டன் செக்காவ்

வாழ்வை ருசுப்படுத்த, காலத்தை அழகுபடுத்தும் கலைகள் தேவை. அவற்றிலே மடமையும் அநீதியும் மண்டிவிடுதல் கூடாது.

—ஒரு பெரியார்

கற்பனை என்ற அற்புதமான சக்தி மனிதனிடத்திலே இல்லை என்றால் கலை என்ற ஒன்று வாழ்க்கையில் இடம் பெற்றிருக்கவே முடியாது.

—மாக்சிம் கார்க்கி

கலை என்பதே கலையின் முடிந்த முடிபன்று; மனிதர் உள்ளமளாவும் வகைகளுள் அது ஒன்று.

—முஸ்ஸார்க்ஸ்கி

கலையோ அல்லது இலக்கியமோ மக்களை இயங்கச் செய்து செயலுக்குத் தூண்ட வேண்டும்.

—காரல்மார்க்ஸ்

ஏழையின் உள்ளக் குமுறலையும், அவன் கண்ணீரையும் மக்கள் மனநிலையையும் இலக்கியத்தில் கொண்டு வருவதே உண்மை கலையாகும்.

—லெனின்

கலையுரைத்த கற்பனையே நிலையெனக்கொண்டாடும் கண்மூடி வழக்கமெலாம் மண்மூடிப்போக.

—இராமலிங்கர்

உண்மையை உரைப்பதற்குச் சாத்தியமான ஒரே வழி கலைதான்; அதுதான் கலையின் புகழும் நன்மையும் ஆகும்

—ராபர்ட் பிரௌனிங்

கலைக்கு உள்ளத்தைப் பண்படுத்தும் ஆற்றல் இருக்கிறது.

—ஒரு பெரியார்

28. கவிதை

கால்வாய் இல்லாத இடத்தில் பெய்த ஒளி மழையே கவிதை.

—கீத்ஸ்

காரணங்களை பாவனு சக்தியால் குறிப்பிடுவதே கவிதை.

—ரஸ்கின்

சிறந்த சொற்களைச் சிறந்த முறையில் அமைப்பது தான் கவிதை.

—கோல்ரிட்ஜ்

ஆற்றல் மிக்க சொற்கள் தாமாகப் பொங்கி விழுவது தான் கவிதை.

—ஒரு பெரியார்

கவிதை என்பது அழகில் உறையும் வாய்மை.

—கில்க் வில்லன்

கவிதை என்பது இயற்கை அழகின் திரை நீக்கம்.

—ஷெல்லி

கவிதை, உரைநடையைவிட சில சொற்களுள் பல் பொருள் கூறுகிறது.

—வால்டேர்

கவிதை என்பது கட்டற்ற உணர்ச்சி வெளிப்பாடல்ல; உணர்ச்சியின் பிடிப்பில் இருந்து விடுபடுவதே ஆகும்.

—எலியெட்

கவிதை என்பது யாப்புக் கூண்டில் அடைபட்ட அடிமைக் கிளியன்று. அஃது எல்லையற்று அருள்வானில் பறக்கும் சுதந்திரக் கருடனாகும். அழகே அதன் உருவம்; அருளே அதன் உள்ளம்: ஐக்கியமே அதன் வாக்கு; சமரசமே அதன் நோக்கு; உண்மையும் உரிமையுமே அதன் சிறகுகள்.

—சுத்தானந்த பாரதியார்

நீண்ட சிந்தனைக்குப் பின் கருத்தில் உருவகப்படுத்தப் பட்ட உணர்ச்சிகளின் வேகமே கவிதை.

—வேர்ட்ஸ் வொர்த்

உண்மையான கவிதைக்கு மரணமே கிடையாது.

—மாஜினி

கவிதை என்பது மக்கள் தம் மன அறிவினின்றும் வடித்து இறக்கப்பட்ட தூய அமுதமாகும்.

—மில்டன்

கவிதை ஒரு தனிப்பட்ட அனுபவத்தைச் சித்தரிக் கிறது என்ற உண்மையை ஒருவரும் மறுக்க முடியாது. ஆழ்ந்த கருத்துக்கள், அதில் பொதிந்து கிடக்கும் எத்தனையோ உணர்ச்சிகளை அது எழுப்பும் என்பதில் ஐயமில்லை.

—ஸ்டாவர்

கவிதை என்பது கருத்தின் இசையை மொழியில் தெரிவிப்பதாகும்.

—சாட்பீல்டு

கவிதையின் இலட்சியம் நன்ருய் யோசிக்கச் செய்வது அல்ல ; உண்மையை உணரச் செய்வதே ஆகும்,

—ராபர்ட்சன்

கவிதை வெற்றி பெறுவது அழுவதை மாற்றுவதிலும் மனத்திற்கு திருப்தி அளிப்பதிலும் இல்லை. அடைய முடியாததை அடைவதற்காக மறுபடியும் நம்மை எழுப்பி விடுவதிலேயே இருக்கிறது.

—எமர்சன்

கவிஞனின் சிந்தனை யொளிபடரும், ஒவ்வொரு பொருளும் விந்தை உயிரோவிய மாவதுதான் கவிதை.

—ஒரு பெரியார்

கவிதை என்பது இசைக் கூட்டம்.

—ஜான்ஸன்

கவிதை என்பது எதுகை, மோனைப் பகைப்பின் அழகே.

—அலென்கோ

29. சட்டம்

சட்டங்களும் விதிகளும் மனிதனுக்காகவேயொழிய மனிதன் அவற்றிற்காக அன்று.

—ராமதீர்த்தர்

சட்டம் ஒரு இருட்டறை! வக்கீலின் வாதம் ஒரு விளக்கு, அந்த விளக்கு ஏழைகளுக்கு எட்டாதது.

—சி. என். அண்ணாத்துரை

சட்டம் ஒரு சிலந்திக் கூடு, நியாய அநியாயம் பார்க்கும் பகுத்துணர்வற்றது. வாழ்பவர்களுக்கு—செல்வந்தர்களுக்கு சட்டம் நறுமணம் கமழும் பூங்கா. வாழ்க்கையுடன் போராடுபவர்களுக்கு சட்டம் ஒரு சதுப்பு நிலம். சறுக்கிவிழச் செய்யுமே தவிர, தலை நிமிர்ந்து—நறுமணம் கமழும் பூங்காவில் உலாவும் நிலை தராது.

—தாமஸ் ஜெபர்சன்

சட்டம் ஒரு வலைத்துணி! ஏழை, எளியவர்கள் அதன் உள்ளே நுழைந்து தப்பித்துக் கொள்வார்கள். பணக்காரர்கள் வலையை முறித்துக்கொண்டு வெளியே வந்து விடுவார்கள். நடுவாந்திரத்தில் உள்ளவர்கள் தான் அகப்பட்டுக்கொண்டு விடுவார்கள்.

—சீனப் பழமொழி

சட்டம் ஒரு கழுதை! அதன் முன்னே போனல் கடிக்கும்; பின்னே போனல் உதைக்கும்.

—மான்பெயின்

சட்டம் ஏழைகளை வருத்தும்; செல்வர்களைத் தீண்டாது. ஏனென்றல் அதை இயக்குபவர் அவர்களே.

—கோல்டு ஸ்மித்

ஒருவன் எவ்வளவுதான் உயர்ந்தவனுக இருந்தாலும் சட்டம் அவனைக் காட்டிலும் உயர்வு உடையதே.

—தாமஸ் குவல்லர்

சட்டங்கள் மிகவும் மென்மை உடையனவாய் இருந்தால் அவற்றிற்கு யாரும் கீழ்ப்படிய மாட்டார்கள். அவை மிகவும் கடுமை உடையனவாய் இருந்தால் பெரும்பாலும் அது நிறைவேற்றப்படுவதில்லை.

—கிவாங்கிலின்

தீய சட்டம் ஒன்றைத் தொலைக்க வழி, அதை வெகு கண்டிப்பாய் அமுல் செய்வதுதான்.

—ஆபிரகாம் லிங்கன்

சட்டம் இருபுறமும் கூர் கொண்ட கத்தி; அதை எடுத்தாள திறமும் லாகவமும் தேவை.

—பென்தாம்

மனிதனுக்காகச் சட்டமே யன்றி, சட்டத்திற்காக மனிதனில்லை.

—ரூசோ

சட்டம் ஏழைகளை மடக்குகிறது; பணக்காரன் சட்டத்தை மடக்குகிறன்.

—ஒரு பெரியார்

ஆயுதங்களுக்கு இடையே சட்டம் ஊமையாகி விடுகிறது.

—சிசரோ

சாவதைத் தடுக்கும் சட்டம், மனிதன் சாகாதிருக்க வழி காட்டுவதில்லை.

—மகாத்மா காந்தி

30 புத்தகம்

புத்தகம் ஒன்றுதான் அழிவற்ற நிரந்தரமான பொருள்.

—ஆர். சௌதே

புத்தகம் காலமென்ற பெருங்கடலில் எழுப்பப்பட்டிருக்கும் கலங்கரை விளக்கு.

—இ. பி. விப்பல்

சில புத்தகங்களைச் சுவைத்துப் பார்க்க வேண்டும். சிலவற்றை அப்படியே கபளீகரம் செய்ய வேண்டும்; சிலவற்றை நன்றாகச் சுவைத்து ஜீரணம் செய்ய வேண்டும்.

—பேக்கன்.

வீரர்கள், வேதாந்திகள் இவர்களின் இதயத்தை நம் மனதில் பிரதிபலித்துக் காட்டுவதே புத்தகங்கள்.

—கிப்பன்

புத்தகங்கள் மட்டும் இல்லையென்றால் கடவுள் இல்லை. நீதி சகிக்க முடியாததாக இருக்கும்; இயற்கை விஞ்ஞானம் குத்திட்டு அசையாமல் நின்று வரும்; தத்துவம் முடமாகி வரும்; எழுத்துக்கள் ஊமையாகிவரும்; சகலமுமே இருண்டுவிடும்.

—பார்த்தலோனி

பாரம்பரியம் ஒரு எரி நட்சத்திரம்; ஒரு தடவை கீழே விழுந்தால் மீண்டும் அதற்கு ஒளியூட்ட முடியாது. ஞாபக சக்தி ஒரு தடவை தடையானுல் மீண்டும் மனதிற்குக் கொண்டுவர முடியாது. ஆனுல் எழுத்து என்றைக்கும் மாருமல் ஒளிவிட்டுத் திகழ்வது. அதைச் சுற்றியுள்ள கரு மேகங்கள் விலகினவுடன் மீண்டும் முன்னைவிடப் பிரகாச மாகவே இருக்கும். அதைப் போன்று புத்தகங்கள் மிகப் பெரிய பண்டகசாலை, சில காலம் அஜாக்கிரதையாகவோ, மறதியாகவோ நாம் இருந்தாலும் மீண்டும் அதைத் திறந்த வுடன் நமக்கு வழி காட்டத் தவருது.

—ஒரு பெரியார்

ஒரு புத்தகம் எழுதியவனுடைய இதயத்திலிருந்து வெளிவந்ததாக இருந்தால் நிச்சயம் மற்றவர்கள் இதயத் தைத் தொடும்.

—சார்லைல்

நம் கைக்கு ஒரு புத்தகம் வந்ததென்ருல் இயற்கையின் மறை புதையல்களைத் திறந்து காட்டும் திறவுகோல்களுள் ஒன்று நம்மிடம் வந்து சிக்கியுள்ளது என்று பொருள்.

—ஒரு பெரியார்

சாதாரணமாகப் புத்தகம் என்பது நமமுடைய தவறு களுக்கு பெயரிடுவதைத் தவிர வேறென்றும் செய்வதில்லை.

—கதே

படிக்கத் தகுந்த புத்தகங்களைவிடப் படிக்கத்தகாத புத்தகங்களே உலகத்தில் ஏராளம்.

—தாகூர்

எல்லாப் புத்தகங்களையும்விட சிறந்த புத்தகம் இந்தப் பரந்த உலகம்தான். உலகத்தைவிட உன்னதமான புத்தகம் வேறு கிடையாது.

—சி. என். அண்ணுத்துரை

நல்ல நூல் நிலையமொன்றின் ஒரு பாதியைத் திரட்டினால்தான் ஒரு நல்ல புத்தகம் எழுத முடியும்.

—ஜான்ஸன்

எந்த வீட்டில் புத்தகசாலை இருக்கிறதோ, அந்த வீட்டில் ஆன்மா இருக்கிறது.

—பிளேட்டோ

31 எழுத்தாளன்

எழுத்தாற்றலை — அந்த எழுத்தாளனின் திறமையைப் பாராட்டி கை தட்டும் மக்களுக்கு அந்த எழுத்தாளனின் குடலில் இருந்துவரும் பசி தெரியாமல் இருக்கிறது.

—ஆஸ்ட்ரோ இவஸ்கி

மற்றவர்களுக் கெல்லாம் இல்லாத சக்தி எழுத்தாளன் ஒருவனுக்கே உண்டு. தன் துயரங்களை எல்லாம் கதையாக எழுதிவிட்டு அதன் மூலமே அவன் ஆறுதல் பெற்றுவிட முடியும்.

—ஒரு பெரியார்

எழுத்தாளன் என்பவன் அவனுடைய நாட்டின், வர்க்கத்தின் உணர்ச்சிமயமான மகர யாழ்! அதன் செவி, கண், இதயம் எல்லாம் அவன்தான். அவன்தான் அவனது சகாப்தத்தின் குரல்.

—மாக்சிம் கார்க்கி

தன்னிச்சையான முறையில் சொந்தக் கருத்தை ஓர் எழுத்தாளன் எழுதுவதைத் தடுக்க, தளைகளாலோ பட்டினியாலோ முடியாது. அவனுக்குக் கிடைத்திருக்கும்

சந்தர்ப்பம் மகத்தானது; அவைகளைவிட பொறுப்பும் மகத்தானது.

—வின்ஸ்டன் சர்ச்சில்

எழுத்தாளர்கள் பெரிதும் துயரப் படுவதற்கு ஒரு காரணம் என்ன தெரியுமோ? அவர்கள் தங்கள் திறமையைச் சுதந்திரமாகப் பயன் படுத்த முடியவில்லை; பண்பாடற்றவர் நிர்வகிக்கும் பணிமனைகளில் கூலிக்கு வேலை செய்ய வேண்டியிருக்கிறது; சுத்த அபத்தம் என்று தாங்களே கருதும் சிருஷ்டிகளைச் செய்ய வேண்டியிருக்கிறது.

—பெர்ட்ராண்டு ரஸல்

முற்போக்குப் படையின் முன்னோடியாகவே இலக்கிய கர்த்தா வாழவேண்டும். மனித இதயமே அவனின் தூங்குமிடம், செல்லரித்துப்போன சமூக அமைப்பை மாற்றுவதே அவனின் வேலை. "எல்லாம், அவன் செயல்" என்று சொல்லி, இன்றைய சமூக நிலை இப்படியே இருக்க வேண்டும் என்று கூறுவோர் எவராயினும் அவர்களைத் துரோகிகள் எனத் தூற்ற உண்மை எழுத்தாளன் அஞ்ச மாட்டான்.

—சங்கம் புழை

எழுத்தாளன் பேனா மயில் இறகாக வேண்டும். மயில் இறகுக்கு கண்கள் நிறைந்திருக்கின்றன.

—தாமஸ் புல்லர்

வெற்றிகள் மிகுந்த எழுத்தாளனின் வாழ்க்கையைப் போன்ற கவர்ச்சிகரமான பிழைப்பு வேறு எதுவும் கிடையாதுதான். மற்ற மனிதர்களை பாதிக்கிற எந்தக் கட்டுப்பாடுகளுக்கும் அவன் அடிமையல்லன். காலத்தின் மணிச் சங்கிலிகள் கூட அவனைக் கட்டிவிடுவதில்லை.

—அந்தோணி டிரல்லாப்

இந்த எழுத்துத் தொழிலின் மன்னாதி மன்னர்களான, மேதாவிலாசப் பேராளர்களான இத்தனை பெரிய திருக்கூட்டமும், இதுவரை சொல்லாத புதுமையாக எதைச் சொல்லிவிட்டார்கள் ? செய்யாததாக எதைச் செய்துவிட்டார்கள் ? வேறொரு புத்தகத்தில் இருப்பது போலில்லாமல் அல்லது அதற்கு அநேகமாய் ஒத்திருப்பது போலில்லாமல், புத்தம் புதியதாக ஒரு சொற்கோவை, சொல்லாட்சி, ஒரு பக்கம் — எதையேனும் நாம் எழுதிவிட்டோம் என்று நம்மில் யாரேனும் பெருமைப்பட முடியுமா ?

—மாபசான்

32. முன்னேற்றம்

முன்னேற்றம் வாழ்வின் நியதி; கூட்டுறவே அதற்கு உத்தரவாதம்.

—மாஜினி

முன்னேற்றம் என்பது இன்றைய செயலாக்கம், நாளைய உறுதிநிலை.

—எமர்சன்

முன்னேற்றம் என்னும் தோல்விகாணா பெரும்படையே மேலே செல்! ஆம் தொடர்ந்து மேலேறு! சட்டம் நியாயமாகும் வரையில் முன்னேறு! அறியாமை அழிந்து போகும் வரையில் முன்னேறு! வைதீக—அல்லது லௌகிக கட்சி இருக்கும் வரையில் முன்னேறு! மூட நம்பிக்கைகள் மறைந்துபோன கனவாகும் வரையில் முன்னேறு! இந்த உலகம் சுதந்திரம் அடையும் வரையில் முன்னேறு! மனிதனின் பகுத்தறிவு, அதிகாரம் என்னும்

அழகிய ஆடையை அணிந்து கொண்டு மன்னர்க்கு மன்னனாகும் வரையில் விரைந்து முன்னேறு! ஆம்! முன்னேறிக் கொண்டே இரு!

—இங்கர்சால்

முன்னேற்றம் என்பது தற்செயலாக ஏற்படுவதல்ல. அது இயற்கையின் ஒரு அம்சமேயாகும்.

—ஸ்பென்கார்

உலகத்தில் ஏற்படும் சிறந்த முன்னேற்றம் முழுவதுக்கும் அடிப்படையாக அமைந்திருப்பது மனிதனின் அதிருப்தியே.

—விங்காக்

மனிதனுக்குக் கிடைத்துள்ள மிகப் பெரிய வசதி முன்னேறுவதுதான். அந்த வசதியும் வாய்ப்பும் கடவுளுக்குமில்லை; மிருகங்களுக்குமில்லை.

—பிரௌனிங்

முட்டாள்கள் கோழைகளைப் பயன்படுத்திக்கொண்டு முன்னேறி விடுகிறார்கள்.

—ஒரு பெரியார்

33. வாழ்க்கை

வாழ்க்கை இன்பமானதுமல்ல; துன்பமானதுமல்ல. தைரியத்தோடும் தியாக உணர்வோடும் ஈடுபடவேண்டிய ஒரு கடினமான தொழில்.

—டி. டாக்கு வெல்லி

வாழ்க்கை என்பது ஆற்று நீரைப்போல் ஓடி ஓடிக் கழிந்து போகும் ஒரு நிகழ்ச்சியே.

—மார்க்க அரேலி

வாழ்க்கை என்பது மெழுகுவர்த்தியல்ல? அது டார்ச்சு லைட் போன்றது. தம் தலைமுறைக்குள்ளாக அதைப் பூரணமாக உபயோகப்படுத்திக் கொள்ள வேண்டும். அடுத்த தலைமுறைக்கென அதிலுள்ள எதையும் மீதமாக்கி வைக்கக் கூடாது!

—பெர்னுட்ஷா

உணர்ச்சித் திறமுடையவர்களுக்கு வாழ்க்கை ஒரு துயர் நாடகம். அறிவுத்திறமுடையவர்களுக்கு அது ஒரு களி நாடகம்.

—லாபுருயேர்

வாழ்க்கை என்பது ஊஞ்சலில் உட்கார்ந்து ஊசலாடுவது அல்ல; புயலுக்கு நடுவே படகைச் செலுத்துவது போன்றது.

—காண்டேகர்

வாழ்க்கையில் ஒவ்வொரு சிக்கலும் எதிர்படும்போது ஒதுங்கிச் செல்வது உண்டு. ஒதுங்கிச் செல்லும் வாழ்க்கை அச்சம் நிறைந்த வாழ்க்கை. இந்த இரண்டும் சொல்வதோ அக்கரையற்ற வாழ்க்கை. இந்த இரண்டும் பயனில்லை. சிக்கலைத் தீர்த்து வெல்லும் வீரம் வேண்டும்.

—மு. வரதராசன்

வாழ்க்கைபற்றிய ஆராய்ச்சியற்ற வாழ்க்கை, வாழத் தகுந்ததல்ல.

—சாக்ரடீஸ்

வாழ்க்கை என்பது சோர்வு கொள்வதற்கான ஒரு நீண்ட பயிற்சியே.

—சாமுவேல் பட்டர்

வாழ்க்கை என்பது தீராத ஒரு நோய்.

—ஆபிரகாம் கௌலி

அழுகையுடன் தொடங்கி அழுகையுடனும் அலறலுடனும் முடிவுறும் இந்த வாழ்க்கையிடம் நமக்கு ஏன் இவ்வளவு பற்றுதல்?

—மேரிவார்விக்

எளிமையும் அடக்கமும் வீரமும் இல்லாத வாழ்க்கை சாரமற்றதாகவும் முறையற்றதாகவும் இருக்கிறது.

—காகா கலேல்கர்

வாழ்க்கை என்பது தூக்கம் என்றால், காதல் அதன் கனவு.

—டிமூசெட்

வாழ்க்கை இறுக்கமான சட்ட திட்டங்களுக்குள்ளே எளிதில் அடங்கிவரும் என்று நினைக்காதீர்கள். அது அடங்காத புதிர்,

—ஆஸ்க்கார் ஒயில்டு

வாழ்க்கை பொதுவாக மனிதர்க்கு நன்மைதான். ஆனல் பலருக்கு நன்மையாவது சந்தேகம்; சிலருக்கு நன்மையேயன்று.

—ஜார்ஜ் எலியட்

வாழ்க்கையில்தான், மனிதன் மனநிலை பல கட்டுப்பாடுகளாலும், துன்பங்களாலும், உயர்ந்த பரிசுத்தமான உலகத்தையே அடைகிறது. வாழ்க்கையின் மனத்தூய்மை கெட்டிப்படுகிறது, பொறுப்பிலே உறுதி நிலவுகிறது.

—பேகன்

34. நாக்கு

நாக்கு மூன்று அங்குலநீளந்தான் உள்ளது. ஆனல், அது ஆறு அடி உயரமுள்ள மனிதனையும் கொன்றுவிடும்.

—ஜப்பான் பழமொழி

நரிக்கு வாலைப்போல் பெண்ணுக்கு நாக்குதான் முக்கிய உறுப்பாகும்.

—பிரஞ்சுப் பழமொழி

அந்தச் சிறிய உறுப்பு இருக்கிறதே நாக்கு-மனிதர்களை முன்னுக்குக் கொண்டு வருவதும் அதுதான்; முன்னுக்கு வரவொட்டாமல் அடிப்பதும் அதுதான்.

—சிட்னிலைப்

கடவுளின் படைப்பு விநோதத்தில், பெண்களின் நாக்கை அதிகப்படியாகக் கூர்மை படுத்தி விட்டான். இதயத்தையோ மென்மையாக வைத்திருக்கிறான். இதயத்தின் மென்மைக்கு நாவின் கூர்மை காவலாக இருக்கிறது.

—ஒரு பெரியார்

பேனா என்பது மூளையின் நாக்கு

—டான்க்யூ சோட்

யாகாவார் ஆயினும் நாகாக்க; காவாக்கால்
சோகாப்பர் சொல் இழுக்குப்பட்டு.

—திருவள்ளுவர்

கோடானு கோடி கொடுப்பினும் தன்னுடை நாக் கோடாமை கோடி பெறும்.

ஔவையார்

எத்தனையோ பெண்கள் கண்ணிருந்தும் பார்ப்பது கிடையாது. ஆனால் நாக்கிருந்தும் பேசாமல் இருந்தது மட்டும் கிடையாது.

—ஒரு பெரியார்

நாவடக்கம் என்றால் என்ன? "வாயடக்கமாயிரு" எனில் பேசாமல் ஊமையாயிரு" என்றோ பொருள்

கூறுவது? "பேசத்தகாததைப் பேசாதே" என்பதன்றே அதன் உண்மைப் பொருள்.

— திரு. வி. க.

பையிலே பணம் இல்லாதவன் நாக்கிலே தேன் (இனிமையான வார்த்தைகள்) இருக்க வேண்டும்.

—வாட்சின்ஸ்

இனிய வார்த்தைகளைக் கொட்டுவதால் நாக்கு காயப் படுவதில்லை.

—ஹேவுட்

நாக்குதான் மனிதனிடம் உள்ள நல்ல அம்சம். கெட்ட அம்சமும் அதுவேதான். அது நம் வசமானால் அதைவிட நல்ல பொருளில்லை; நாம் அதன் வசமானால் அதைவிடக் கெட்ட பொருளில்லை.

—அனார்காரிஸ்

35. உண்மை

உண்மையைக் காண்பதும் கடினம் அல்ல; அதைக் கண்டதும் கைவிட்டு ஓடாதிருப்பதுதான் கடினம்.

—எட்ரியென் இல்ஸென்

உண்மைக்குப் பகை உள்ளத்தில் தோன்றும் பகை.

—ஒரு பெரியார்

உண்மை ஒரு பெரிய தீப்பந்தம். அருகில் செல்ல அஞ்சி, கண்களைச் சிமிட்டிக் கொண்டே அதைக் கடந்து செல்கிறோம்.

—கதே

அன்பு சில குறைகளையும், அறிவு சில பிழைகளையும் பொருட் படுத்தாது. ஆனால் உண்மை எந்தக் குறையையும் எவர் பிழையையும் மன்னிக்காது; பொறுக்காது.

—ரஸ்கின்

உண்மையை நாம் அறிவினால் மட்டும் காண்பதில்லை; அன்பினாலும் காண்கிறோம்.

—பாஸ்கல்

"ஏன் உண்மையாய் நடக்க வேண்டும்?"— இந்தக் கேள்வி மூலமே இழிவைத் தேடிவிட்டாய்!. "மனிதனாகயிருப்பதால்—" என்பதே அதற்கு மறுமொழி.

—ஒரு பெரியார்

எக்காலத்திற்கும், எவ்விடத்திற்கும் பொதுவானது உண்மை! சோர்வடையாத செயல்களால் அடைய வேண்டியது, விருப்புடன் ஒப்புக்கொள்ள வேண்டியது. எப்போதும் தள்ளக் கூடாதது ஒன்று உண்டு என்றால் அதன் பெயர்தான் உண்மை.

—இங்கர்சால்

சிந்தித்துப் பார்ப்பவர்களுக்குத்தான் உண்மை புலனாகும்.

—கானிங்

தம்முடைய கட்சியில் உண்மை இருக்க வேண்டும் என்று ஒவ்வொருவரும் விரும்புகிறார்கள். ஆனால் ஒவ்வொருவரும் உண்மையின் கட்சியில் சேர விரும்புவதில்லை.

—வாட்லீ

உண்மை அழகுள்ளது; அழிவற்றது.

—பிளேட்டோ

உலகத்தார் நாடும் பெருமைகளை விரும்பேன். ஆனால் உண்மை அறிவதொன்றே என் விருப்பம்.

—சாக்ரடீஸ்

உண்மை தேடவே மனிதன் பிறந்துள்ளான். ஆனால் அதை அடையும் பாக்கியம் வேறொரு பெரிய சக்திக்கே உண்டு.

—மாண்டெய்ன்

உயர்ந்த உண்மை மலர்வது ஆழ்ந்த அன்பினாலேயே.

—ஹீன்

உலகம் தலைகீழாயிருக்கும் போது, உண்மை பேசினால் கூட அது ஒரு அதிசய செய்தியாகிவிடும்.

—பல்கேரியப் பழமொழி

36. பொய்

எந்தப் பொய்யும் வயோதிகம் அடையும் வரை வாழ்வதில்லை.

—ஸோபோகிளிஸ்

பிழை செய்தால் பிறர் கண்டு கொள்ள முடியும். ஆனால் பொய் சொன்னால் பிறர் கண்டு கொள்ள முடியாது.

—கதே

பலவீனத்தின் அளவே பொய்மையின் அளவும், பலவீனர் பொய் சொல்லியே தீர வேண்டும்.

—ரிக்டர்

பலவீனமும் கொடூரமும் ஒன்று சேர்ந்த இடத்திலே பொய் பிறக்கிறது.

—இங்கர்சால்

பொய் சொல்வது ஆண்களுக்குக் கடைசி மார்க்கம்; பெண்களுக்கு முதல் உதவி.

—கெலெட்பர்ஜஸ்

பொய் சொல்வதும் பிறர் மனைவியை விரும்புவதும், காரணமில்லாமல் கொடுமை செலுத்துவதும் ஆசையால் ஏற்படும் தீச் செயல்கள் ஆகும்.

—ஒரு பெரியார்

பொய், உண்மையின் மேலுள்ள வெற்றியினுல் பிறக்கிறது. மக்கள் உண்மையைத் தண்டித்துக் குற்றவாளியாக்குகிறுர்கள். அப்போது பொய்யின் விதை தோன்றுகிறது.

—பாபுராவ்

சத்தியங்களை வாரிவழங்குபவன் பொய்யனுக இருக்க வேண்டும்.

—காரன்லி

பொய்யை மருந்து போல உபயோகிக்கலாம். தெரிந்தவன் மருந்து உபயோகப்படுத்தலாமே யன்றி, எல்லோரும் உபயோகிக்கக் கூடாது.

—பிளேட்டோ

37. ஒழுக்கம்

நமது உணர்ச்சியின் தன்மை, விசாலம் இரண்டின் அளவே நமது ஒழுக்கமாகும்.

—ஜர்ர்ஜ் எலியட்

ஓதாதார்க்கு இல்லை உணர்வொடு ஒழுக்கம்.

—ஔவையார்

உன் வாக்கினின்றும் வரும் ஒவ்வொரு வார்த்தையும் பொருள் நிறைந்ததாகவும், இன்பம் பயப்பதாகவும் இருக்கட்டும். எக்காலத்திலும் ஒழுக்கத்தை உயிரினும் மேலாக ஓம்பி வருவாயாக.

—ஜேம்ஸ் ஆலன்

உலகம் வேண்டுவது ஒழுக்கமே. சுயநலன் உற்றதே தீய ஒழுக்கம்; சுய நலன் அற்றதே நல்லொழுக்கமாம்.

—விவேகானந்தர்

ஆழ்ந்த ஒழுக்க உணர்வு இல்லாவிட்டால், உயர்நடை ஒழுங்கு இருக்க முடியாது.

—எமர்சன்

மக்கள் எதில் ஈடுபட்டுப் பெருமை கொள்கிறார்களோ, அதுவே அவர்கள் கோட்பாடும் அவர்கள் ஒழுக்கமும் ஆகும்.

—ஜேமார்ட்டினோ

ஒழுக்கம் என்பது சொல்லுகிறபடி நடப்பதும் நடந்த படி சொல்வதுமே ஒழிய தனிப்பட்ட குணங்கள் அல்ல.

—பெரியார் ஈ. வெ. ரா.

குளிர் மிகுதிதான், கந்தை உடைதான்! ஆனால், என் ஒழுக்கம் எனக்கு உஷ்ணம் கொடுக்கும்.

—டிரைடன்

ஒழுக்கம் விழுப்பம் தரலான் ; ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப்படும்.

—திருவள்ளுவர்

வெறும் நம்பிக்கையால் மட்டும் பலன் கிடைக்காது, பாவம் கழியாது. மறுபிறவி எண்ணமின்றி ஒழுக்கத்தைக் கடைபிடிப்பதே மனிதப் பிறவியின் ஒரே நோக்கம்.

—சாக்ரடீஸ்

மனிதன் பல தலைமுறைகளாக நடந்தும் பாதுகாத்தும் வந்த ஒழுக்க முறைகளில், இன்று பெரும் மாறுதல் தேவைப்படுகிறது. பழைய முறைப்படியே நடப்பவன் எண்ணற்ற துன்பங்களுக்கும் தொல்லைகளுக்கும் ஆளாக நேரிடும்.

எச். ஜி. வெல்ஸ்

ஒழுக்கம் ஒரு சிறைச்சாலை. நீதி, நேர்மை என்பன இரண்டும் சிறைக்கூட்டத்தின் பெரும் இரும்புக் கதவுகள். கடமை அதில் மாட்டியுள்ள பெரிய பூட்டு.

—சி. என். அண்ணாத்துரை

ஒழுக்கம் கெட்டவர்களுக்கு எப்படிப்பட்ட சூழ்நிலை வந்தாலும் பழைய பெயர் வருவதில்லை.

—எடிசன்

38. பழக்கம்

அதிகமான பழக்கம் அவமரியாதையையே தரும்.

—சமஸ்கிருதப் பழமொழி

ஒரு துளி மை, முழுத்தாளில் எழுத்துக்களை விதைப் பதைப்போல உன்னிடம் ஒரே ஒரு கெட்ட பழக்கம் இருந் தாலும், உன் தகுதியைக் கெடுத்துவிடும்.

—ஏஸஸ்புல்லோ

சித்திரமும் கைப்பழக்கம்
செந்தமிழும் நாப்பழக்கம்
வைத்ததொரு கல்வி மனப்பழக்கம்

—ஔவையார்

பழக்கத்திற்கு அடிமைப்படுவது கண்கட்டி விளை யாடுவது போன்றது.

—எமர்சன்

எதையும் தெரிந்து வீணுக்கும் பழக்கம், விரைவில் அதையே தேடி அலையச் செய்யும்.

—ஸ்காட்லாந்து பழமொழி

எல்லா நல்ல பழக்கங்களும் காரண காரியங்களோடு விளக்கப் படாததால் மூடப்பழக்கம் என்று இகழப் படுகிறது.

—மகாத்மா காந்தி

சில வீடுகளில் தாயும் தந்தையும் எதற்கெடுத்தாலும் எப்போதும் வாதப் பிரதிவாதங்கள் செய்து கொண்டே யிருப்பார்கள். பார்த்துப் பார்த்துக் குழந்தைகளுக்கும் இந்தப் பழக்கம் ஏற்பட்டு வருகின்றது.

—கிளேடிஸ்

கெட்ட பழக்கத்தை விட நல்ல பழக்கத்தையே மிகவும் சுலபமாகக் கைவிட முடிகிறது. இதுதான் இந்த உலகத்திலே பெருந் துர்ப்பாக்கியமான விஷயம்.

—ஸாமர்ஸெட்மாம்

நாம்தான் நம்முடைய பழக்கங்களை உண்டாக்கு கிறோம். ஆனால், அவை நம்மையே அடிமையாக்கி அதிகாரம் செலுத்த ஆரம்பித்து விடுகின்றன.

—வேலாந்து

பழக்கந்தான் மனிதகுலம் பின் பற்றும் மிகப் பெரிய விதியாகும்.

—கார்லைல்

பல பழக்கங்களின் கூட்டுச் சரக்கே மனித னாகின்றான்.

—பாலி

பழக்கத்தால் ஒரு நாளும் இயற்கையை வெல்ல முடியாது.

—சிசரோ

தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும்.

—பழமொழி

உண்மையான காதலுக்கும், களங்க மற்ற அன்புக்கும் பெரிய பகையாக இருப்பது யார் தெரியுமா? சடங்கு—சம்பிரதாயம்—பழக்க வழக்கம்தான்.

—லிட்டன்

கண்மூடிப் பழக்க மெல்லாம் மண்மூடிப் போக.

—இராமலிங்கம்

39. சாதி

உடலில் ஓடும் இரத்தத்தில்—வடிந்து ஒழுகும் கண்ணீரில் தேடிப் பார்த்தாலும் சாதி தெரிவதில்லை. எனவே உலகில் உயர்குலம் என்று சொல்லிக் கொள்வது சரியன்று.

—புத்தர்

சாதிகளால் ஒரே மாகாண மக்கள்—ஒரே மொழியைப் பேசும் மக்கள், தங்களுக்குள் ஒற்றுமை யின்றிப் பரிதவிக்கிறார்கள்.

—தாகூர்

சாதிக் கொடுமைகள் வேண்டாம்.

—பாரதியார்

மதத்தின் ஆணிவேர் சாதி.

—ஒரு பெரியார்

சாதியை ஒழிக்க வேண்டுமானல் ஒவ்வொருவரும் கலப்புத் திருமணம் செய்து கொள்ள வேண்டும்.

—ராஜாஜி

சட்டத்தின் மூலமே சாதியை அறவே ஒழிக்க முடியும்.

—ஒரு பெரியார்

சாதியைப் பேணி வளர்ப்பவர்கள் படித்தவர்களும் பணக்காரர்களுமே. கலப்பு மணம், சமபந்தி யுணவு இவைகளால் சாதி ஒழியாது. மனிதனின் மனம் புரட்சிகரமான மாறுதலைப் பெற்றால்தான் சாதி ஒழியும்.

—காமராஜர்

சட்டத்தின் மூலமும் பிரசாரத்தின் மூலமுமே சாதியை ஒழிக்க முடியும்.

—ஒரு பெரியார்

பொருளாதார பேதம் ஒழிந்தால்தான் சாதிபேதம் ஒழியும்.

—ஒரு பெரியார்

சாதிகளை ஒழித்து முன்னேற்றம் பெற நாம் வழி வகுக்கவே யில்லை. நமது சாஸ்திரங்கள் சாதிப் பிரிவுகளைக் கடக்கக் கூடாதென்றும், கடந்தால், அவ்வளவு பாவம், இவ்வளவு தண்டனை என்றெல்லாம் சொல்லி, நம்மை அடக்கிவிட்டன.

—ஒரு பெரியார்

சாதியினால் விளையும் கேடுகளை அறிய முடியாத பாமரர்களை விட, அதனை நன்கு அறிந்திருந்தும், தமக்குச் சுகவாழ்வு கிடைக்கிறது, சாதி இருப்பதினால் என்ற காரணத்துக்காக, சாதி முறையைத் தங்கள் செல்லப் பிள்ளையாகக் கொள்ளும் படித்தவர்கள்தான் மிகப் பொல்லாதவர்கள்.

—சி. என். அண்ணாத்துரை

இந்திய சமுதாய அமைப்பில் சாதி ஏற்பாடு ஒரு களங்கமாகும். தீண்டாமையை ஒழித்துக் கட்டுவதற்கு சாதி அடிப்படையைத் தகர்த்தெறிய வேண்டியது தவிர்க்க முடியாததாகும்.

—ஜகஜீவன்ராம்

40. சமாதானம்

நிரந்தர சமாதானத்தை அடைய முடியும் என்பதில் நம்பிக்கை கொள்ளாவிட்டால், அது மனித இயல்பின் தெய்வீகத் தன்மையில் அவநம்பிக்கை கொள்ளுவதாகும்.

—மகாத்மா காந்தி

சமாதானத்துக்காக ஒவ்வொருவரும் முயற்சி செய்ய வேண்டும். இளைஞர் மற்றையோரை விட இதனை முக்கியமாகக் கவனிக்க வேண்டியவர்களாகின்றனர். அவர்களது பிற்கால நலனுக்குச் சமாதானம் இன்றியமையாதது.

—ரால்ப் பஞ்சு

ஒரு நாடு மற்ற நாடுகளோடு போட்டியிட்டு யுத்த ஆயுதங்களைப் பெருக்குவதால் சமாதானம் நிலைக்காது. மற்ற நாடுகளைப் பற்றி உண்மையாய் அறிந்து நீதியான முறையில் அவற்றோடு நடந்து கொண்டால் மட்டும் சமாதானம் நிலைக்கும்.

—ஐசனேவர்

ஒரு நாடு தன் எல்லைக்குள் மட்டும் சமாதானத்தை நிலை நாட்டிவிட்டால் போதாது; உலகெங்கும் சமாதானம் நிலவ, அது தன்னால் முடிந்தமட்டும் உழைப்பதும் அவசியம்.

—ஜவாஹர்லால் நேரு.

சமாதானத்திற்காக சண்டை பிறப்பிக்காமல் சண்டைக்காகச் சமாதானத்தைப் பிறப்பிக்கும் சட்ட சபையினன் புத்திசாலியல்ல.

—பிளேட்டோ

41. பலம்

பலமே இன்பமும், நிலையான அழிவற்ற வாழ்வும் ஆகும்.

—விவேகானந்தர்

என்னுடைய மனம் பரிசுத்தமாய் இருப்பதால் நான் பத்து மனிதர்களின் பலத்தை உடையவனாக இருக்கிறேன்.

—டென்னிஸன்

விவேகமில்லாத ஒருவனே எதிரியின் பலத்தைக் குறைவாக மதிப்பான்.

—சுபாஸ் சந்திரபோஸ்

பெண்ணுக்கு பலம் குறைவுதான். ஆனால், ஆத்ம பலமோ ஆணுக்கிருப்பதைவிட பெண்ணுக்குத்தான் அதிகம்.

—மகாத்மா காந்தி

கொடுவாளைக் காட்டிலும் எழுதுகோல் பலம் வாய்ந்தது.

—நெப்போலியன்

மன்னன் கையிலே செங்கோல் இருக்கிறது—அவன் கையசைத்தால் போர்வீரர்கள் என்னைப் பழிவாங்க வருவார்கள். மதகுரு கையில் சிலுவை இருக்கிறது—அந்தச் சிலுவை அசைந்தால் அதன் முன் மண்டியிட்டுக்

கிடக்கும் மக்கள் என்மீது பாய்வார்கள். எனினும், இருவரையும் நான் எதிர்க்கிறேன். ஏனெனில், என் கையில் பலம் பொருந்திய எழுதுகோல் இருக்கிறது.

—வால்டேர்

பலம் பொருந்தியவனின் பலத்தைக் குறைப்பதால், பலவீனனைப் பயில்வானாக்க முடியாது.

—ஆபிரகாம்லிங்கன்

அன்பும் சாந்தமும் உடையவனே பலமும் மனோ திடமும் உடையவன். காமக்குரோதத்திற்கும் அதிருப் திக்கும் ஆளானவனிடம் பலமும் மனோதிடமும் இருக்காது.

—மார்க்க ஒளரேலியன்

12. பலவீனம்

பலவீனர் அதிர்ஷ்டத்தில் நம்பிக்கை வைக் கின்றனர்.

—டால்ஸ்டாய்

பலவீனருடைய பாதையில் தடையாயிருக்கும் கல், பலமுள்ளவருடைய பாதையில் படிக்கல்லாய் இருக்கும்.

—கார்லைல்

நன்றியறியாமை ஒருவித பலவீனமே. பலமுடைய வர்கள் நன்றியறியாதிருக்க நான் பார்த்ததில்லை.

—கதே

நம்மிடம் பொய்யும் களவும் கொலையும் வேறு பாவச் செயல்களும் இருப்பதற்குக் காரணம் நமது பலவீனமே. நாம் பலவீனராய இருப்பதினால் நாம் கெட்டவராகிறோம்.

—விவேகானந்தர்

பலவீனர் உடலிலும் சில சமயங்களில் சிங்கத்தின் வீரம் ஓடும்; நீர்த்துளியிலும் நெருப்பின் உணர்ச்சி தோன்றுவதுண்டு.

—இக்பால்

பட்சம் மித மிஞ்சினால் பலவீனமாகும்.

—ஆவ்பரி

ஒரு பெண் "ஆகா! எவ்வளவு பலசாலி நீங்கள்!" என்று புகழும்போது அதை ஆமோதிக்கும் போதுதான் ஆண் பலவீனனாக இருக்கிறான்.

—ஸ்டிவ் ஹானகன்

தோல்வியைக் காட்டிலும் வெற்றியே நம் பலவீனத்தை அதிகமாக வெளிப்படுத்துகிறது.

—ஒரு பெரியார்

பலவீனமான சுபாவங்களுக்கு மிகப் பெரிய நன்மையோ—தீமையோ செய்யும் சக்தியில்லை.

—பிளேட்டோ

43 குற்றம்

பிறர் குற்றங்களை நம் கண் முன் வைத்துக் கொள்ளுகிறோம். நம் குற்றங்களை நம் பின்புறம் வைத்துக் கொள்ளுகிறோம்.

—ஸெனீக்கா.

பிறர் குற்றம் கூறினால் அதை எதிர்க்கவும் முடியாது, காப்பாற்றிக் கொள்ளவும் முடியாது. அதை அலட்சியம் செய்ய முடியும். அப்படிச் செய்தால் அது தானாக வந்து அடி பணிந்துவிடும்.

—கதே

குற்றம் செய்யும் பொழுது குற்றம் புரிகின்றோம் என்று உணரும் அறிவு போய்விட்டால், அதன் பிறகு உயிர் வாழ்வதால் என்ன பயன் ?

—மார்க்க ஒளரேலியன்

பிறருடைய குற்றங்களைக் கண்டு நகைக்காதே. உன்னுடைய செயலும் சொல்லும் ஆயிரம் மடங்கு குற்றத்திற்குரியனவாய் இருக்கலாம்.

—டீரேட்ஸ்

அடுத்த வீட்டுக்காரர்களுடைய குற்றங் குறைகளை அம்பலப்படுத்த ஆசையாயுள்ள தினவுக்கு மருந்துமில்லை. மந்திரமுமில்லை.

ஹார்வி

குற்றத்தை கடவுள் மன்னிக்கிறார்; ஆண் மறந்து விடுகிறான்; பெண் என்றும் நினைவு வைத்திருக்கிறாள்.

—ஆங்கிலப் பழமொழி

நமக்குப் பாரமாக இருப்பவர்களை நாம் மன்னித்து விடலாம்; நாம பிறருக்குப் பாரமாக இருப்பது மன்னிக்க முடியாத குற்றம்.

—ஷோ

குற்றம் குறைகளை நீக்கிக் கொள்வதே நமக்கு ஏற்படக் கூடிய பெரிய அதிர்ஷ்டமாகும்.

—கதே

குற்றஞ் செய்த பிறரை கடவுள் தண்டிக்கவிட்டுவிடு. குற்றம் செய்த உன்னை நீயே தண்டிப்பாய்.

—ஜார்ஜ் எலியட்

முதலில் ஒரு குற்றம் செய்தவன் அதை மறைக்க பொய்யுரைக்கும்போது இரண்டு குற்றங்கள் செய்தவனாகிறான்.

—வாட்ஸ்

தவறு செய்வது என்பது துரதிஷ்டமான விஷயம்; இரக்கப்பட வேண்டிய விஷயம்; ஆனால் இதுதான் உண்மை என்று தெரிந்து கொண்ட பிறகும் தவறு செய்வது ஒரு பெரிய குற்றம், உலகமே சேர்ந்து கண்டிக்கிற குற்றம்.

—மாஜினி

தான் ஒன்றைச் செய்வதில் ஒருவரும் குற்றம் காணாத அளவுக்குச் சரியாக செய்யவேண்டும் என்று எண்ணி ஒருவன் காத்திருந்தால் அவன் எதையுமே செய்ய முடியாது.

—நியுமன்

தன்னுடைய குற்றங்களைப் பிறருக்கெதிரே தைரியமாக ஒப்புக்கொண்டு, அம்மாதிரிக் குற்றங்களை மறுபடியும் செய்யவில்லை என்று உறுதி செய்வதைக் காட்டிலும் அந்தக் குற்றங்களைப் போக்கிக் கொள்வதற்கு வேறு சிறந்த வழியே கிடையாது.

—மகாத்மா காந்தி

44. நட்பு

நல்ல நண்பர்கள் இல்லாத உலகம் ஒரு பாலைவனம் தான். நண்பர்களையும் மனிதப் பண்புகளையும் வெறுப்பவன் ஒரு காட்டு மிருகம்தான். அவனுடைய தனிமையில் இன்பம் இல்லை; எங்கும் வெறுப்புதான். நட்பின் பலன்கள் மாதுளக்கனியில் உள்ள இன்ப ரத்தினங்கள் போல், அருமையான உண்மைகளைக் கொண்டு மனிதனை அபாயத்தின் எல்லையைவிட்டுத் தப்பித்துவர வழி காட்டுகின்றன.

—பேகன்

நிச்சய புத்தியில்லாதவனையும், நீலித்தனமாக பேசுவோனையும், நன்றி மறப்பவனையும் நண்பனாக்கிக் கொள்ளாதே; ஏன் தெரியுமா? அவனால், ஆபத்தும், அவமானமும் அளவுக்கு மீறி வந்து தொலையும்.

—ஜெசி

துன்பம் நம்மைத் தாக்கும்போது, நண்பர்களிடம் நமது இதயக் குமுறலைத் திறந்து காட்டினால், பாதித் துன்பம் தொலைந்தே போகும்; இன்பம் வரும்போது, நண்பன் அதை இரட்டிப்பாகப் பெருக்குகிறான்.

—பேகன்

பெரிய அரசனை நண்பனாகக் கொள்ளவேண்டும், அல்லது ஓர் பெரிய அறிஞனை நண்பனாகக் கொள்ள வேண்டும்.

—சமஸ்கிருதப் பழமொழி

நாடாது நட்டலின் கேடு இல்லை; நட்டபின்
வீடு இல்லை நட்பு ஆள்பவர்க்கு.

—திருவள்ளுவர்

45. அவதூறு

அவதூறு வெறுப்பை மூட்டி வளர்க்கிறது. வெறுப்பு பிரிவை உண்டாக்குகிறது. பிரிவு கட்சிச் சண்டையைப் பெருக்குகிறது. கட்சிச் சண்டை அழிவைக் கொண்டு வருகிறது.

—கிவாரல்ஸ்

திருட்டுப் பொருளை விலை கொடுத்து வாங்குபவன், திருடனைப்போல் மோசமானவன் தான். அவதூறுகளைக் காது கொடுத்துக் கேட்பவனும் அப்படித்தான்!

—செஸ்டர் பீல்டு

அடுத்த வீட்டுக்காரரின் அவமானத்தை அறைகூவிப் பரப்பவேண்டும் என்ற ஆசை வெறி மனிதர் மனதில் இருக்கிறது. அதனல் கழுகுகளின் இறக்கைகளில் அழியாத அவதூறுகள் பறந்து செல்கின்றன. ஆனல் நற்குணமான செயல்களோ, வெறுமனே கவனிப்பாரின்றிப் பிறந்து சாகின்றன.

—ஹார்வி

உலகத்தில் ஒரு பாதிக்கு அவதூறு சொல்லுவதில் மகிழ்ச்சி; மற்றப் பாதிக்கு அதை நம்புவதில் மகிழ்ச்சி.

—ஒரு பெரியார்

அவதூறு வாளினும் அதிகக் கூர்மையும் நரகத்தினும் அதிகமான விஷமும் உடையது.

—ஷேக்ஸ்பியர்

தற்புகழ்ச்சி முடைநாறும் என்பர். அப்படியானல் அவர்க்கு அநியாயமாய் கூறும் அவதூற்றின் நாற்றம் தெரியாதுபோலும்.

—கதே

46. புகழ்

புகழ் என்பது ஒருவன் தன்னேடுவைத்து வளர்க்கும் சொந்த ஆபத்து.

—சாக்ரடீஸ்

புகழ் என்பது வானவில்லைப் போன்றது.

—பகவன்

மனிதனுடைய புகழ் அவனுடைய திறமையைக் காட்டும் அளவுகோல் அல்ல; அது சந்தர்ப்பங்களால்

வருவது. அதனை மனிதனுடைய சொத்து என்று சொல்லி விட முடியாது.

—கார்லைல்

தனி மனிதன் அளவற்ற செல்வம் சேர்க்க இடந் தருவது சமூகத்திற்கு எவ்வளவு கெடுதியோ, தனி மனிதன் அளவற்ற புகழ்தேட இடங்கொடுப்பதும் அவ்வளவு கெடுதியாகும்.

—மு. வரதராசன்

புகழ் நீடித்து நிற்கவேண்டுமானால் பணத்தைப்போல அதையும் சிக்கனமாகவே செலவழிக்க வேண்டும்.

—டால்ஸ்டாய்

ஒன்றா உலகத்து உயர்ந்த புகழல்லால்
பொன்றாது நிற்பதொன்றில்.

—திருவள்ளுவர்

எப்பொழுதும் புகழைத்தேடு.

—சேன்கிரே

புகழைப் பொருட்படுத்துவார் யாரோ? அதனை விட்டொழி. பசித்த வாய்க்கு அன்னக் கவளங்களை எடுத்துச் செல்லும் முயற்சியில் புகழும் உடைமையும் யாவும் அழிவதாயினும்—மும்மடங்கு பாக்கியம் பெற்றனை ஆவாய்.

—விவேகானந்தர்

புகழ் ஆற்றைப்போல் தோன்றுமிடத்தில் ஒடுங்கியது. ஆனால், அது நீண்டு ஓடிச் செல்லுந்தோறும், அகன்று செல்கிறது.

—டாவனேன்ட்

புகழுக்குப் பாத்திரமாகிறவர் மிகச் சிலரே. விலைக்கு வாங்கப் பெறமுடியாத மிகச் சிலவற்றுள் அது ஒன்று—மனித இனத்தின் நன்கொடை அது ஒன்றே. அது பெறுமுன் தகுதித் தேர்வு மிகுதி ; தகுதி கண்ட பின்னும் உலகம் வழங்க மனமில்லாததுபோல் அளந்துதான் அதனை அளிக்கிறது.

—ஜான்ஸன்

புகழ் என்பது தனிச் சொத்து ; அதன் அருமை அதனை இழந்த பிறகுதான் தெரிகிறது.

—வின்னெலியட்

புகழ் என்பதே ஒரு வலை. இதைச் சரியானபடி கையாண்டுவிட்டால், எந்த மனிதனையும் பிடித்துவிடலாம். அவரால் ஆகக்கூடியதை நடத்திக்கொள்ளலாம். அதே மாதிரி புகழ்பெற்றவன் அந்த வலையினால் தனக்காகவும் பல காரியங்களைச் சாதித்துக் கொண்டுவிடலாம்

—"ஸம்பாதி"

புகழ் எனின் உயிரும் கொடுக்குவர்...

—புறநானூறு

பிறர் நம்மைப் புகழும் புகழ்ச்சி பூவைப் போன்றது. நாம் அதன் வாசனையைப் பிடிக்கலாம் ; ஆனால், அதை அப்படியே விழுங்கிவிடக்கூடாது.

—ஸ்பெக்டேட்டர்

47. கோழை

கோழையாக வாழ்வதைக் காட்டிலும் போராடிச் சாவது எவ்வளவோ மேல்.

—மகாத்மாகாந்தி

சாவு வருவதற்கு முன்னரே ஒரு கோழை பல தடவைகள் செத்து விடுகிறான்.

—ஷேக்ஸ்பியர்

கோழைகளே பாவம் புரிவார். தைரியமுடையார் ஒருக்காலும் புரியார். இவ்வுலகம் கோழைகட்கன்று.

—விவேகானந்தர்

நியாயம் இன்னதென்று தெரிந்து, நீ அதைச் செய்யாது இருப்பது கோழைத்தனமாகும்.

—கோன்புத்சன்

கடமையைச் செய்யத் தயங்குகிறவன் கோழை.

—சேர' திசோபானை

கோழைத்தனம் ஒன்றுதான் முன்னேற்றத்தின் கொடிய விரோதி.

—ஒரு பெரியார்

நீ செல்ல வேண்டிய பாதை தெளிவாய் இருக்கிறது. துயரங்களையும் ஏமாற்றங்களையும் கண்டு நீ பயந்து, அந்த முன்னேற்றப் பாதையில் செல்லத் தயங்குவாயானால்—நீ ஒரு கோழை.

—மாஜினி

மனிதனிடம் வீரமில்லாத ஒழுக்கமோ, ஒழுக்கமில்லாத வீரமோ இருந்தால் அவன் கோழையாக ஆகிவிடுவான்.

—பிளேட்டோ

சமாதானமும் செல்வமும் பெருகும்போது கோழைகள் பெருகுவர்.

—மாஜினி

கோழைத்தனம் கொடூரத்தின் தாயாகும்.

—மான்டெயின்

தவறான காரியத்தில் காட்டும் வீரம் கோழைத்தனமாக ஆகிவிடும்.

—மாலிங்கர்

48. வீரன்

வீரன், தோல்வியைக் கண்டு ஓடமாட்டான். தோல்வி முகத்திலே கெஞ்சுகிறவன் வீரனல்ல. வீரனாக வேஷம் போடுகிற கோழை.

—நெப்போலியன்

பேனாவே மக்களையும், தேசங்களையும் விடுவிக்கும் சுதந்திர வீரன்.

—வின்ஸ்டன் சர்ச்சில்

வீரம் என்பது உடலைப் பொறுத்தன்று; உள்ளத்தையே பொறுத்தது.

—மகாத்மா காந்தி

யார் சுத்த வீரன்? இராணுவத்தில் சேர்ந்து யுத்த களத்துக்குச் சென்று, உயிரைத் தியாகம் செய்கிறானே அவன் மட்டுமா? இல்லை... இல்லை. ஏழைகளுக்காகப் பரிந்து பேசி, செல்வாக்குள்ள பணக்காரர்களைப் பணிய வைக்கும் முயற்சியில் இடையறாத் துன்பம் நேரிட்டாலும், தனது இலட்சியத்திலிருந்து நழுவாமல் இருப்பவன் அவனைக் காட்டிலும் சிறந்த வீரனாவான்.

—ஸ்டுவர்ட்மில்

உலகில் படை கொண்டு போர் வெல்லுவோனை வீரன் என்கிறோம். பொறுமையோடு வறுமையை சகித்துக் கொண்டு மானத்தைக் காப்பவனே பெரிய வீரன். இந்த

வறுமைவீரர் போர் வீரரைவிட எவ்வளவோ பெரியவர். எத்தனையோ அறிஞர்கள் வறுமை வீரராயினர்!

—விக்டர்யூகோ

வீரத்தின் சிறந்த அம்சம் சமயோசித அறிவாகும். அறிவில்லாத வீரம் ஆபத்தையே அழித்ததாகும்.

—மாஜினி

வீரமே கண்ணியின் ஊற்று—அதுமட்டுமன்று, சகல நன்மைக்கும் சால்புக்கும் அதுவே பிறப்பிடம்.

—ரஸ்கின்

வீரம் என்பது ஆபத்தை அலட்சியம் செய்வதன்று. அதை தைரியமாய் துணிந்து எதிர்ப்பதாகும்.

—ஆவ்பரி

வீரம் மிகுந்தவரே கருணை நிறைந்தவர்; அன்பு மிகுந்தவர்; துணிவு நிறைந்தவர்.

—டெய்லர்

வீரம் என்பது கோழைத்தனத்துக்கும் கோபத்துக்கும் இடைப்பட்டதாகும்.

—ஸெர்வான்டீஸ்

செய்து தீரவேண்டிய நேரத்தில் மட்டும் துணிபவனே வீரன்.

—பெல்தாம்

வீரம் என்பது உடல் வலிமையைப் பொறுத்ததல்ல; உள்ளத்தின் உறுதியையே பொறுத்ததாகும்.

—மான்டேயின்

49. சூதாட்டம்

சூதாட்டம் — பேராசையின் குழந்தை; ஏற்றத் தாழ்வின் உடன் பிறப்பு; தொல்லையின் தந்தை. துயரத்தின் தாய். வெற்றி பெற்ற சூதாடி மேலும் பெற எண்ணி கிடைத்ததை இழக்கிறான். தோல்வி கண்டவன் வெற்றி பெறுவோம் என்ற சபலத்தில் பாழாகிறான். சுருக்கமாய் சொன்னால் ஒருவர் பயனடைய ஒரு லட்சம் பேர் துயருறுகின்றனர்.

—ஜார்ஜ் வாஷிங்டன்

சமூகத்திற்கு எவ்வித நன்மையுமின்றி, பணத்தை ஒருவரிடமிருந்து மற்றொருவரிடம் மாற்றும் செயலுக்குப் பெயர் சூதாட்டம்.

— ஜான்சன்

முட்டாள்களுக்கு விதிக்கப்படும் கொடுமையான வரிக்குப் பெயர் சூதாட்டம்.

—காஸ்ட்லர்

மூடர்களுக்காக கண்டு பிடிக்கப்பட்ட புதிய வரித் திட்டம் சூதாட்டம்.

—ஒரு பெரியார்

வேண்டற்க வென்றிடினுஞ் சூதினை வென்றதூஉந்
தூண்டிற்பொன் மீன் விழுங்கியற்று.

— திருவள்ளுவர்

50. மது

கடலைவிட மது அதிகமான ஆட்களை மூழ்கடித்துக் கொன்றிருக்கிறது.

—பப்லீயஸ் ஸைரஸ்

மது ஓர் அருமையான பானம்தான். அதற்கு நாம் நன்றி கூறத்தான் வேண்டும். ஆனால் அதற்கு முன்னாலேயே, உலகத்தில் தண்ணீர் உண்டாக்கப்பட்டிருக்கிறதே!

—ஜான் எலியட்

கையில் மதுப் புட்டியை வைத்திருக்கும் வாலிபன் யோசிக்க வேண்டிய விஷயங்கள் இரண்டு. அதாவது, மதுப் புட்டியை ஒழிப்பதா? அல்லது தன்னை ஒழிப்பதா?

—டிலிப்ஸ் ப்ருக்ஸ்

மதுவும் வாலிபமும் நெருப்பில் நெருப்பிட்ட மாதிரி.

—பீல்டிங்

நான் விசாரித்த குற்ற வழக்குகளில், குடிப்பழக்கம் இல்லாதவர்கள் செய்த குற்றங்கள் மிக மிகக் கொஞ்சமே.

—நீதிபதி காலரிட்ஜ்

மயக்கும் கள்ளும், மன்னுயிர் கோறலும்
கயக்கறு மாக்கள் கடிந்தனர், கேளாய்!

—மணிமேகலை

மதுவிலக்கால், நமது சமூக, பொருளாதார, தேசிய துறைகளில் புதிய வாழ்வு தோன்றியுள்ளது. மதுவிலக்கு, மக்கள் வாழ்க்கையில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. காந்தி நெறியான சாந்தியை, அமைதியை அள்ளி அள்ளி கொடுத்திருக்கிறது.

—ஒரு பெரியார்

ஸெனிகா சொன்னது போல, குடிப்பது தன்னை வேண்டுமென்றே பைத்தியமாக்கிக் கொள்ளுவது மட்டுமல்ல; முட்டாளாக்கிக் கொள்ளுவதும்தான் என்று யாரோ சொல்லியிருக்கிருர்கள்.

—எம்மான்ஸ்

உலகத்தின் இராணுவங்கள் எல்லாம் சேர்ந்தாலும் குடியைப்போல அவ்வளவு அதிகமான ஆட்களைக் கொல்ல முடியாது; அவ்வளவு அதிகமான சொத்து சுகங்களைக் கொள்ளையடிக்கவும் முடியாது.

—பேகன்

நாணென்னு நல்லாள் புறங் கொடுக்குங் கள்ளென்னும்
பேணுப் பெருங் குற்றத்தார்க்கு.

—திருவள்ளுவர்

மது முகஸ்துதி செய்யும் ஒரு பேய்; இன்பமாக இருக்கும் ஒரு விஷம்; மகிழ்ச்சி கொடுக்கும் பாவச் செயல். குடியைக் கைக்கொண்டவன் தன்னை கைவிட்டு விடுகிறான். குடிக்கிறவன் பாதகம் செய்வதில்லை, அவனே ஒரு மகா பாதகமாயிருக்கிறான்.

—அகஸ்தீன்

முதலில் மனிதன் மதுவைக் குடிக்கிறான். அப்புறம் அது மதுவைக் குடிக்கிறது. கடைசியில் மது மனிதனைக் குடித்துவிடுகிறது.

—ஜப்பானிய பழமொழி

மது (விஸ்கி) ஒரு நல்ல பொருள். செத்துப் போன வனைக் காப்பாற்ற அதைப்போல எதுவும் உதவுவது இல்லை. செத்துப்போன உடலைக் கெட்டுப் போகாமல் வைத்துக் காப்பாற்ற அதை மதுவில் போட்டு வையுங்கள். ஆனால், உயிரோடிருக்கும் ஒரு மனிதனைக் கொல்ல வேண்டுமென்றால் மதுவையே அவனுக்கு உள்ளே செலுத்திவிடுங்கள்.

—கத்ரீ

51. சோம்பல்

சோம்பல் ஒரு குற்றம். தொழிலின்றி வாழ்தல் ஒரு மலம்.

—உத்தம சக்தம்

தொழில் எத்தனைக் கீழ்த்தரமானாலும் அதைச் செய்வதில் அவமானம் ஒன்றும் இல்லை. சோம்பல் ஒன்றுதான் அவமானம்.

—டால்ஸ்டாய்

உடலைச் சொகுசுக்கும் சோம்பலுக்கும் இரையாக்கி வைத்திருப்பவன் மனிதாபிமானத்தை மறந்தவன்.

—தேரோ

சோம்பேறித்தனமாய் இருப்பது தற்கொலைக்கு ஒப்பாகும்.

—ஒரு பெரியார்

சோம்பேறியின் மன விருப்பம் அவனையே கொல்லுகிறது.

—ஸ—லோமான்

சோம்பேறிக்கு எல்லாம் கஷ்டமாகத் தோன்றும். ஊக்கமுள்ளவனுக்கு எல்லாம் எளிதாய்க் காணப்படும்.

—இரிச்சர்ட்

சோம்பல் மிகக் கெடுதி.

—பாரதியார்

காரியங்களைக் கடினமாக்குவது சோம்பேறித்தனம். அதைச் சுலபமாக்குவது உழைப்பு.

—பிராங்களின்

சந்தேகம், வருத்தம், மனச் சோர்வு, கோபம், ஏக்கம் இந்தப் பிசாசுகள் எல்லாம் மனிதனை அடிக்கும் பொருட்டு பதுங்கி நிற்கின்றன. அவன் சோம்பலுக்கு இடம் கொடுக்கும்போது இவையெல்லாம் அவனை வந்து தாக்குகின்றன.

—கார்லைல்

காற்றுள்ள போதே தூற்றிக்கொள். சோம்பல் சிறிதும் உதவாது.

—விவேகானந்தர்

சோம்பர் என்பவர் தேம்பித்திரிவர்.

—ஔவையார்

ஒருவனுடைய சோம்பலிலே மூதேவி வாழ்கின்றாள்; சோம்பல் இல்லாதவனுடைய முயற்சியிலே சீதேவி வாழ்கின்றாள்.

—திருக்குறள் கருத்து

சோம்பேறித்தனம் மகத்தான சக்தி வாய்ந்தது. அதனுடைய அணைப்பு காதலியினுடைய ஆலிங்கனத்தை விட அதிகமான ஆனந்தத்தை அளிக்கக் கூடியது, மனிதனை மெய்மறக்கச் செய்யும் தன்மை வாய்ந்தது.

—செஸ்டர் பீல்டு

சோம்பலாக வாழ்பவன் சாசுவதமாக சஞ்சலமும் தோல்வியும் மிகுந்த வாழ்க்கையையே பெற்றுக்கொள்ள வேண்டியிருக்கும்.

—ஒரு பெரியார்

சோம்பேறித்தனம் மெதுவாக நகர்கிறது; ஏழ்மை வெகு விரைவில் அதை வென்று விடுகிறது.

—செக்கர்

சோம்பேறியின் மனது சைத்தானின் தொழிற்சாலை.

—ஒரு பெரியார்

52. செயல்

ஒருபொழுதும் துன்பமாக மாருத பொருள் ஒன்று உண்டு. நாம் செய்யும் நற்செயலே அது.

—மேட்டர்லிங்க்

நமது செயலின் விளைவுகளை நாம் ஏற்றுக்கொள்ளும் முறையே நமது ஆன்மாவின் உயர்வை அளக்கும் கோலாகும்.

—மார்லி

மனிதன் செய்யக்கூடிய தீய செயல்களில் எல்லாம் முற்றிலும் தீயதும், சற்றும் மன்னிக்க முடியாததும் களவு ஒன்றே.

—ரஸ்கின்

செயல் எப்பொழுதும் இன்பத்தில் முடிவதில்லை. என்றாலும் செயலின்றி இன்பம் பிறப்பதில்லையே.

—டிஸ்ஸரரலி

செயலைக் கடினமாக்குவது சோம்பேறித்தனம் அதைச் சுலபமாக்குவது உழைப்பு.

—பிராங்க்ளின்

தன்னை அறிந்து கொள்வதே வாழ்க்கையில் கடினமான செயல்.

—கேலஸ்

செயல் பெரிதோ, சிறிதோ, தம்மால் செய்யக்கூடியவற்றைச் சலிப்பின்றி செய்பவரே போற்றுதற்குரியவர்கள்.

—கதே

53. கண்ணீர்

கண்களுக்குக் கண்ணீர் இல்லாவிட்டால் ஆத்மாவுக்கு வானவில் இராது.

—ஜான்வான்ஸ் செனே

அழகின் கண்ணீர் அவளது புன்னகையைவிடக் கவர்ச்சிகரமானது.

—காம்பெல்

உலகத்திலுள்ள மொழிகள் எல்லாவற்றிலும் அன்பை விளக்கப் பாடுபட்டால், தலை சிறந்தது கண்ணீர்! அதற்கு மிஞ்சிய பேச்சாளி ஏது?

—லாரனஸ்

பெண்களின் கண்ணீர், உலகத்திலேயே மிக்க ஆற்றலுள்ள நீர் வீழ்ச்சி.

—வில்சன் மிஸ்னர்

அரசியல்வாதி ஒருவன் கண்களிலிருந்து நீர் பெருகினால், யாருடைய தண்ணீர்த் தீர்வையோ அதிகரிக்கப் போகிறது என்று பொருள்.

—ரொனல்டு கோல்மன்

நல்ல சிகரெட் குடிப்பது ஆணுக்கு ஆறுதல்; நன்கு அழுவது பெண்களுக்கு ஆறுதல்.

—லிட்டன்

அழட்டும்......நன்றாக அழட்டும்......அழுகைதானே சாந்தி......சாஸ்வதம்......புனிதம்!

—ஒரு பெரியார்

நாம் பிறக்கும் பொழுது அழுகிறோம்—மூடரின் நாடக மேடைக்கு வந்துவிட்டோமென்று.

—மாஜினி

கணவன் அடிக்கிறான் என்பதற்காக எந்தப் பெண்ணும் தான் விரும்பியதை—கேட்டதை விட்டுவிடுவதில்லை. திரும்பக் கேட்கிறாள். கண்ணீரும் அவளுக்கு உதவியாக வந்து காரியசித்தி அளித்து விடுகிறது.

—ஒரு பெரியார்

பெண்களின் பார்வையில் இருக்கும் சக்தி நம் சட்டங்களுக்குக் கிடையாது. அவர்கள் கண்ணீருக்கு உள்ள பலம் நம் வாதங்களுக்குக் கிடையாது.

—சாவெல்

கருணையால் கண்ணீர் தோய்ந்த முகத்தைக் காட்டிலும் உண்மையைக் காட்டும் முகம் வேறு கிடையாது. கண்ணீர்விட்டழுவதைக் கண்டு மகிழ்வதைவிடக் கண்ணீர் விட்டு இரங்குவது மிகவும் சிறப்புடையது,

—ஷேக்ஸ்பியர்

அல்லல்பட்டு ஆற்றாது அழுத கண்ணீர் அன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை,

—திருவள்ளுவர்

அழகிய பெண் ஆனந்தமடைந்தால் பணப்பை கண்ணீர்விடத் தொடங்கியிருக்கும்.

—ஆங்கிலப் பழமொழி

54. சிரிப்பு

சிரி. உலகம் உன்னோடு சேர்ந்து சிரிக்கும். அழு. உன்னோடு ஒருவரும் அழமாட்டார்கள்.

—எல்லாவீலர்

சிரிக்கத் தெரியாத மனிதன் பிழைக்கத் தெரியாத மனிதன்.

—ஒரு பெரியார்

சிரிக்க முடியாத மனிதன் துரோகம், சூழ்ச்சி, கெடுமதி ஆகியவற்றுக்கே உரியவன். அவன் வாழ்நாள் முழுவதும் ஒரே சூழ்ச்சியாக இருக்கும் என்று கூறினால் மிகையாது.

—கார்லைல்

எதைக் குறித்து நாம் சிரிக்கிறோமோ அதைத் தவிர வேறெதுவும் நம்முடைய இயல்பைத் தெளிவாகக் காட்ட முடியாது.

—கதே

55. வறுமை

உடைமையும் வறுமையும் ஒருவழி நில்லா.

—வெற்றிவேற்கை

வறுமையே என்றும் மனவுறுதியின் தாய்.

—ஷேக்ஸ்பியர்

கொல்லன் கூடத்தில் காய்ச்சிய இரும்பு எவ்வளவுக் கெவ்வளவு சம்மட்டியால் அடிபடுகிறதோ அவ்வளவும் அதன் உருவத்தில் அழகும் மதிப்பும் மிகுதியாகும். அது போலவே வறுமைக்கனல் சுடச்சுட, துன்பச் சம்மட்டி தாக்கத் தாக்க மனித வாழ்வு மாறுதலடைகிறது.

—ஒரு பெரியார்

வறுமையால் ஒழுக்கம் உருக்குலைக்கப்பட்டு, விபசார பலிபீடத்திற்கு பெண்மை அழைத்து வரப்படுகிறது.

—மாக்சிம் கார்க்கி

வறுமை என்னும் ஒரே ஒரு தீமையினின்று தானே செல்வத்தினால் நம்மை காப்பாற்ற முடியும்.

—ஜான்ஸன்

வறுமையே பாவங்களில் பொல்லாதது. வறுமையில் வாழ்வதே கொடிய பாவ வாழ்க்கை. அந்தப் பாவத்தைப் போக்குவதே முதற் கடமையாகக் கொள்ளவேண்டும்.

—பெர்னட்ஷா

வறுமை மனிதர்களை ஒழுக்கங் கெட்டவர்களாகவும் திறமையற்றவர்களாகவும் செய்து வருகிறது.

—பிளேட்டோ

வறுமையைப்போல் துன்பப் படுத்துவது எது வென்றால் ஒருவனுக்கு எப்பொருளும் இல்லாதபடி துன்பப்படுத்தும் அவ்வறுமையேதான்.

—திருக்குறள் கருத்து

பிறருக்கு உதவுவதன்மூலம் வறியராவது பெரிதல்ல, வறுமையிலும் உதவுவதுதான் சிறந்தது.

—செனகா

56. ஆசை

ஆசையே எல்லாத் துன்பங்களுக்கும் அடிப்படை.

—புத்தர்

ஆசைப் படாதே. ஆசைப்பட்டாலோ அவதிப் படுவாய்.

—சீனப் பழமொழி

பேராசையின் குழந்தையே, ஏற்றத் தாழ்வின் உடன் பிறப்பு, தவறின் தந்தை: இன்னலின் அன்னை.

—ஜார்ஜ் வாஷிங்டன்

அவாவில்லார்க் கில்லாகுந் துன்பம்; அஃதுண்டேல்
தவாஅது மேன்மேல் வரும்.

—திருவள்ளுவர்

ஆசைகளை அறவே அறுத்தல் வேண்டும்.

—பகவத்கீதை

ஆசை பேராசையாகவும் அன்பு வெறியாகவும் மாறும்போது அமைதி தூர விலகி ஓடிவிடுகிறது.

—மாக்ஸிம் கார்க்கி

நாம் அறிய முடியாதபடி நுணுக்கமான விதத்தில் கடும் பாவம் நம்மைப் பற்றிக்கொண்டு விடுகிறது. ஆசையை அடக்குவதால் மட்டுமே அதைத் தடுக்க முடியும்!

—ஒரு பெரியார்

உண்மை, அறிவு, நேர்மை ஆகியவை தெய்விகக் குணங்கள் அல்ல; மனிதரின் குணங்களே. தெய்விக வாழ்க்கையைவிட மனிதவாழ்க்கை நடத்தவே மக்கள் ஆசைப்படவேண்டும்.

—விநோபாவே

பேராசையைப் போக்க நினைத்தால், அதன் தாயாகிய படாடோபத்தை ஒழிக்கவேண்டும்.

—ஸிஸரோ

ஆசை சில சமயம் அறிவையும் வென்றுவிடும்.

—டால்ஸ்டாய்

கல்யாணம் செய்துகொள்ளாதவனை ஆசைகள் அலைக்கழிக்கும்.

—பேலிஸ்

வயல்களுக்குத் தீமை களைகள். மனித வர்க்கத்துக்குத் தீமை ஆசை. ஆதலால் ஆசையற்றவர்களுக்குச் செய்த உதவி பெரும் பயனை அளிக்கும்.

—தம்மபதம்

57. அறிவு

அறிவு அதிகாரத்திலே மோகமுடையது; புகழ்ச்சியிலே விருப்பமுடையது; துணிச்சலுடையது; தனது சக்தியிலே எல்லை மீறிய நம்பிக்கையுடையது; அதன் பயனாக அனேக சமயங்களில் ஆபத்திலே சிக்கிக்கொண்டு விடுகிறது.

—வெ. சாமிநாத சர்மா

செம்மையான அறிவு; அதற்குரிய அனைத்தையும் அறியவேண்டும்.

— அவ்ரேலியன்

எழுத்தறிவு பரவுவதைவிட, புத்தியறிவு—ஒழுக்க அறிவு பரவுமானால் நன்மை வாழ்க்கையை நாம் அடையலாம்.

—பகவன்

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு.

—திருவள்ளுவர்

நான் கற்றுக்கொடுக்க எண்ணுவது அறிவையன்று; அறிவை அறியும் அறிவையே.

—ஆர்னல்ட்

மனம் விட்டுப் பேசுவதைவிடச் சிறந்த அறிவு வேறு இல்லை.

—டிஸ்ஸரலி

அற்புதங்களைச் செய்ய ஆற்றல் பெற்றது அறிவு.

—வ. ரா

அறிவு, நம்மை உயர்ந்த இடத்திற்கு ஏற்றுவதற்காக அமைக்கப் பெற்ற வன்மையான சிறகு.

—ஷேக்ஸ்பியர்

அறிவு—ஏக ஒளி, ராஜ வீதியில் நடக்கவும், மேடு பள்ளங்களைத் தாண்டவும், இயற்கைச் சக்தியை உணரவும், கலைகளை வளர்ப்பதும், உலகத்தை நாகரிகப் படுத்துவதும் பேய்களை விரட்டி, பூதங்களை ஓட்டி, இருள் மயமான பிரதேசங்களை ஒளி மயமாக்குவதும், அச்சத்தை அகற்றுவதும், ஆண்மையை வளர்ப்பதும் அறிவு ஒன்றுதான்.

—இங்கர்சால்

சொல் மிக அருகிய இடமே, அறிவு பெருகிய இடம்.

—சோபாக்ளிஸ்

அறிவை அடைவதற்கு ஒரே வழி, "தெரியாது" என்று உணர்வதே ஆகும்.

—டிஸ்ரேலி

சுகாதாரம் வைத்தியர்களின் வேலை. கடல் பாதுகாப்பு மாலுமியின் வேலை. இதேபோல் மக்கள் வாழ்க்கையைப் பாதுகாப்பது அறிவு.

—அரிஸ்டாட்டில்

அறிவு பிரகாசிக்கும்போது ஆனந்தமாக இருக்கும், ஆனால் அது சுடு நெருப்பாக மாறும்போது முதலில் அறிவைத்தான் கொன்றுவிடும்.

—கார்லைல்

அறிவே ஆனந்தம்; அறிவே அணிகலன்; அறிவே சக்தி.

—பேகன்

58. அன்பு

அன்பு எப்போதும், எதையும் கேட்பதில்லை; ஆனால் கொடுக்கிறது. அன்பு எப்பொழுதும் கஷ்டத்திற்கு ஆளாகிறது; ஆனால் அதற்காக அது வருந்துவதில்லை; பழிக்குப் பழி வாங்குவதுமில்லை.

—மகாத்மா காந்தி

அன்பு நிரந்தரமானது. அன்பு செய்வோருக்கும் செய்யப்படுவோருக்கும் அழிவுண்டு. ஆனால் அன்புக்கு அழிவில்லை.

—ஒரு பெரியார்

அன்பு செலுத்துவதனால் துன்பம் உண்டாகி, அந்தத் துன்பத்தை அனுபவித்துக்கொண்டே அன்பு செலுத்துவது இருக்கிறதே அதுதான் முதல்தரமான அன்பு என்று சொல்வதற் குரியது.

—வெ. சாமிநாத சர்மா

வெல்வது அன்பே. அன்பொன்றே, அறிவன்று. நூலும அறிவும் யோகமும் தியானமும் ஞான ஒளியும் அன்போடு ஒப்பிடுங்கால் அனைத்தும் மண்ணும்.

—விவேகானந்தர்

அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ்?—ஆர்வலர்
புன்கணீர் பூசல்தரும்.

—திருவள்ளுவர்

அன்பு தானே கொடுக்கும், தன்னையே கொடுக்கும். ஆனால் அதை விலைக்குப் பெற முடியாது.

—லாங்வெல்லோ

அன்புசெய்யும்வரை மனிதன் ஒழுக்கக்கேடுடையவனாக முடியாது.

—சார்லஸ்லாம்

விரும்பி அன்பு செய்தல் நன்று; விரும்பாது அது செய்தல் அதனினும் மிக நன்று.

—ஷேக்ஸ்பியர்

அன்புக்கு அழிவு இல்லை. அன்புக்குரியவர் அதனை ஏற்காவிட்டால் அன்பு செய்பவரிடமே அது மீண்டும் வந்து அவரைக் கனியச்செய்து தூய்மைப்படுத்திவிடுகிறது.

—வாஷிங்டன் இர்விங்

கடவுள் மனிதனுக்குமட்டும் கொடுத்துள்ள ஒரே அரும் பொருள் அன்பு. அது உள்ளத்துடன் உள்ளத்தை, உடலுடன் உடலை, உயிருடன் உயிரைப் பிணைக்கும் ஒரு வெண்மைத் தளை.

—வால்டர் ஸ்காட்

பொய்யும் புரட்டும் கூடிய ஒரு வார்த்தை இருக்குமானல் அதுதான் அன்பு.

—இப்ஸன்

59. ஆடை

ஆடையே பெண்ணின் ஆயுதம். வீரன் வெற்றி கிடைத்ததும் வாளைத் தூர எறிந்து விடுவதைப் போல, பெண் வெற்றிபெற்றதும் ஆடையை அவிழ்த்து எறிந்து விடுகிருள்.

—ரிச்டர்

ஆண்களுக்கு சிந்தனை எப்படியோ, அப்படித்தான் பெண்ணுக்கு ஆடை. துணி நிறைந்த பெட்டியே அவள் வாசகசாலை.

—அனன்

ஆணையும் பெண்ணையும் அழகுசெய்வது ஆடை.

—ஒரு பெரியார்

பெண் ஜென்மம் என்பது உடுத்துவதும் உழல்வதும், மீண்டும் எடுத்து எடுத்து உடுத்துவதும்தான்.

—ஞானி

உன்னை மகிழ்விக்கச் சாப்பிடு; பிறரை மகிழ்விக்க ஆடை உடுத்து.

—பெஞ்சமின் பிராங்ளின்

மொழி என்பது எண்ணத்தின் ஆடை.

—ஜான்ஸன்

வாழ்வு என்னும் ஆடையிலே எப்பொழுதும் இருவகை நூல் இணைந்திருக்கிறது. ஒன்று தீமை—மற்றொன்று நன்மை.

—ஷேக்ஸ்பியர்

பெண்கள் குறைவாக ஆடைகள் அணிந்தால் அதற்கு இரண்டே இரண்டு காரணங்கள்தான் இருக்கவேண்டும். ஒன்று அவர்கள் பரம ஏழைகளாக இருக்கவேண்டும். அல்லது பெரிய பணக்காரர்களாக இருக்கவேண்டும்.

—நியூயார்க் நீதிபதி

ஒவ்வொரு சீர்திருத்த ஆடையும் கிறுக்குக் கரையோடு தானிருக்கிறது.

—தியோடர் ரூஸ்வெல்ட்

வாழ்வென்னும் ஆடையை சாத்தான் நெய்கிறது; அதற்குச் சாமி கொஞ்சம் கறை போடுகிறார், அவ்வளவு தான்.

—ஒரு பெரியார்

கண்களைப் பறிக்கும் வர்ணமுள்ளதும், ஆடம்பரமானதும், பகட்டானதுமான ஆடைகளை அரசாங்கத்தில் வேலை செய்யும் பெண்கள் அணியலாகாது.

—இராஜேந்திர பிரசாத்

60. கடன்

நண்பனுக்குக் கடனைக் கொடுத்துவிட்டு, திரும்பக் கேட்கும்போது எதிராளியாய் இருப்பான். அழுத்திக் கேட்டால் பணம் போய்விடும் அல்லது நண்பன் மாறி விடுவான்.

—பிளாட்டஸ்

கடன் வாங்கவும் செய்யாதே; கடன் கொடுக்கவும் செய்யாதே. கடன் கொடுப்பது பணமும் போய் நட்பும் போய்விட ஏதுவாகும்.

—ஷேக்ஸ்பியர்

கடன் பட்டவன் கடன் கொடுத்தவனுக்கு வேலைக்கார னாகிறான். அவனைக் காணும்போது கொஞ்சம் தலை தாழ்த்தியே நிற்க வேண்டியதிருக்கிறது.

—சார்ட்டரி

ஒருதரம் கடன் வாங்கினால் அதுவே கடைசியில் ஒரு பழக்கமாகிவிடும். நாளடைவில் நாடு முழுவதும் பரவி பரஸ்பரம் வாங்கிய கடனை யாருமே திருப்பித்தர முடியாத நிலை ஏற்பட்டுவிடும்.

—ஹார்ட்ஸ் டில்வெல்

வாக்குறுதி அளிப்பவன் அதற்குக் கடனாளி ஆகிறான்.

—தலாமூத்

என் வாழ்விலே நான் செய்யாத காரியமும், காணவே பயப்பட்ட செயலும் கடனாகும்.

—மகாத்மா காந்தி

கடனோடு காலையில் எழுந்திருப்பதைவிட, பட்டினி யோடு இரவில் படுப்பது மேலாம்.

—பெஞ்சமின் பிராங்கிளின்

கையில் காசு இல்லையேனும் கடன் இல்லாமல் இருப்பது நன்று. மலர் மணம் வீச மறுத்தாலும் நாற்றம் வீசாமல் இருத்தல் நன்று அல்லவா ?

—மோரிஸ்

கடன் வாங்குவது, பிச்சை எடுப்பதின் அடுத்தபடி தான்.

—ஜப்பான் பழமொழி

61. பயம்

பயம் என்பது அறியாமையாலும் சலன புத்தியாலும் ஏற்படுகிறது.

—இராபின்சன்

நான் பயப்படாதவன் போன்று பாவித்ததினால் படிப் படியாக என்னிடம் இருந்த பயம் ஒழிந்து விட்டது.

—ரூஸ்வெல்ட்

எதைச் செய்யப் பயப்படுகிறோமோ அதையே எப்போதும் செய்ய வேண்டும். இதுவே பயத்தை வெல்வதற்கு ஏற்ற வழி.

—மகாத்மா காந்தி

பயமே மரணம் ; பயமின்மையே வாழ்வு.

—விவேகானந்தர்

பயத்தைப் பற்றி அடிக்கடி நான் நினைத்திருக்கிறேன். ஆனால் ஒரு தடவைகூட நான் பயந்ததே கிடையாது. பயம் என்பது பலவீனர்களுக்கு உரியது.

—ஆஸ்ட்டோ இவஸ்கி

பயம் தரும் காரியத்தை உடனே செய்து முடிக்க வேண்டும்; அப்போதுதான் பயம் இறந்தொழியும்.

—எமர்சன்

அறியாமைதான் அச்சத்திற்குக் காரணமாக அமைகிறது. அறிவு வளர வளர ஒரு மனிதனுடைய அச்சத்தின் அம்சங்கள் குறைந்து கொண்டு வருகின்றன.

—ஒரு பெரியார்

மனிதன் பயப்படும்போதெல்லாம் அது சிறு சிறு துளிகளாகி கவலையென்ற சிற்றோடையாக மாறுகிறது; அதை வளர விட்டோமானால் அச்சிற்றோடை கடலாகி மற்ற எண்ணங்களை மூழ்கடித்து விடும்.

—ஒரு பெரியார்

பயம் தற்காப்புக்காக ஏற்பட்ட உணர்ச்சி.

—தூரன்

ஐயமும் அச்சமும் யாக்கையைத் தேய்த்தரித்துப்
பையவே கொல்லும் பகைத்து.

—திரு. வி. க.

காரிய நிபுணர்களுக்கு இருக்கும் ஒரு குறை என்னவென்றால், அத்தகைய திறமை பிறரிடத்தில் இருப்பதை அவர்கள் நம்பமாட்டார்கள். அவர்களுக்கு தாங்கள் செய்ய விரும்பும் காரியத்தில் பிறர் கைவைத்தால் அது அடியோடு பாழாகி விடுமென்ற பயம்.

— தாகூர்

எல்லா உணர்ச்சிகளைக் காட்டிலும் கொடியது பயம். மனதில் பயம் கவ்வப் பெற்ற மனிதன் கோழையாகிறான்; அவன் எவற்றைக் கண்டு பயப்படுகிறானோ அவை நிழலாட்டம் காட்டி அவனை சித்ரவதை செய்து கொண்டே இருக்கும்.

—ஆர்னல்ட் பென்னட்

பயத்தை வெல்லுமளவே மனிதன் மனிதனாகின்றான்.

—கார்லைல்

நாம் எப்பொழுது பயத்தை வெளிக்குக் காட்டுகிறோமோ, அப்பொழுதே நாம் அழிந்தவர்களாவோம்.

—ராஜாஜி

பெண்களையும் புத்தகங்களையும் கண்டு பயப்படு. அவை தெம்பையும் மமதையையும் நம் உடம்பில் விளைவிக்கின்றன!

—அனடோல் பிரான்ஸ்

62. கோபம்

கோபமே பாவங்களுக்கெல்லாம் தாய் தந்தை
கோபமே குடி கெடுக்கும்;
கோபமே ஒன்றையும் கூடிவர ஒட்டாது;
கோபமே துயர் கொடுக்கும்;
கோபமே பொல்லாதது; கோபமே சீர்கேடு;
கோபமே கருணை போக்கும்;
கோபமே ஈனமாம்; கோபமே எவரையும்
கூடாமல் ஒருவனுக்கும்.

—அம்பலவாணர்

தீராக் கோபம் போராய் முடியும்.

—ஔவையார்

உள்ளங் கவர்ந்தெழுந் தோங்கு சினம் காத்துக்
கொள்ளும் குணமே குணமென்க.

—சிவப்பிரகாசர்

உண்மையான வீரத்தனம் பிறரைக் கீழே வீழ்த்தி விடுவதில் அல்ல, கோபம் வரும் சமயம் அதனை அடக்கிக் கொள்ளுவதேயாகும்.

—முகமது நபி

மனிதன் விஷயங்களைக் கருதும்போது அவற்றில் அவனுக்குப் பற்றுதல் உண்டாகிறது. பற்றுதலால் காமம் பிறக்கிறது. காமத்தில் கோபம் பிறக்கிறது. கோபத்தில் நினைவுத் தடுமாறுதல் உண்டாகிறது. நினைவுத் தடுமாறுதலால் மதிக் குழப்பம் தோன்றுகிறது. மதிக்குழப்பத்தால் மனிதன் அழிந்து விடுகிறான்.

—பகவத் கீதை

சட்டென்று கோபங் கொள்ளும் புத்தியுள்ளவன், சட்டென்று சிரிக்கும் அறிவாளியைவிட எவ்வளவோ சிறந்தவன்.

—பெர்னுட்ஷா

இயற்கையைக் கட்டுப்படுத்தி, மனதில் எழுகிற கோபத்தை அடக்கிக் கொண்டு நிதானம் தவறாமல் பேசுவதிலும் நடந்து கொள்வதிலும்தான் மனிதன் மிருகத்தினின்று மாறுபடுகிறான்.

—ஒரு பெரியார்

கோபம் பைத்தியத்துக்குச் சமம். அதை வளர்த்தால் நிலைமை மோசமாகிவிடும்.

—மகாத்மா காந்தி

சட்டென்று கோபப்படுகிறவன் சட்டென்று சிரிப்பவனைவிட எவ்வளவோ மேலானவன்.

—பெர்னுட்ஷா

63. பழி

பழி வாங்குதல் ஆரம்பத்தில் இனிக்கும்; ஆனால் கொஞ்ச நேரத்தில் கசப்பாக மாறி விடும். அது எய்தவனையே திரும்பி வந்து கொல்லும் அம்பாகும்.

—மில்டன்

பழி வாங்கினுல் பகையாளிக்குச் சமமாவோம். அலட்சியம் செய்தால் எதிரியைவிட உயர்ந்தவராவோம்.

—தாமஸ் புல்லர்

பழிக்குப் பழி வாங்குவது மனிதத் தன்மை; பழியை மனனிப்பது தெய்வீகத் தன்மை.

—ஒரு பெரியார்

பழி வாங்கும் மனோபாவத்திற்கு ஞானக்கண் கிடையாது.

—நெப்போலியன்

பழி வாங்குவதில் ஒரு அழகான முறை எதிரிகளை மன்னிப்பதுதான்.

—ஒரு பெரியார்

என் பொது வாழ்வில் பழிக்குப் பழி வாங்கும் சக்தி பல முறை எனக்குக் கிடைத்திருந்தும், நான் அவ்விதம் செய்யவில்லை. அவ்விதம் செய்யக் கூடாது என்று நண்பர்களுக்கும் உபதேசம் செய்தேன்.

—மகாத்மா காந்தி

பழி வாங்குதலைப் பற்றி ஒருக்காலும் யான் பேசியதில்லை. கடல் இறைக்கும் நீர்த்துளி மீது பழி வாங்க நாம் கனவிலும் கருதுவதுண்டோ?

—விவேகானந்தர்

தகுதியில்லாத புகழுரை மாறுவேஷம் பூண்ட பழியே ஆகும்.

—போப்

பட்சபாதமாயிருத்தல் என்பது எந்தக் காலத்தும் பழி வாங்குதலினும் பெருந்தகைமை உடையது.

—ஷேக்ஸ்பியர்

64. முகஸ்துதி

முகஸ்துதி என்றால் என்ன? ஒருவன் தன்னைப் பற்றி என்ன நினைத்துக் கொண்டிருக்கிறானோ, அதையே அவனிடம் சொல்லுவதுதான்.

—எவர்ஹார்ட்

முகஸ்துதி என்பது பரஸ்பரம் நடக்கும் ஒரு இழி தொழில். ஒருவரையொருவர் ஏமாற்ற விரும்பினாலும் ஒருவரும் ஏமாந்து போவதில்லை.

—கோல்டன்

ஆணை ஏதேனும் ஒருவித முகஸ்துதியால் மட்டும் வசப்படுத்தலாம்; ஆனால் பெண்ணையோ எந்தவித முகஸ்துதியாலும் வசப்படுத்திவிட முடியும்.

—செஸ்டர் பீல்டு

மூடன் தனக்கே முகஸ்துதி செய்து கொள்வான். புத்திசாலியோ மூடனுக்கே முகஸ்துதி செய்வான்.

—புல்வெர்

முகஸ்துதியை முட்டாள்களின் உணவு என்பார்கள். ஆனால் அறிஞரும் சில சமயங்களில் அதில் சிறிது உண்பது உண்டு.

—ஸ்விப்ட்

முட்டாளின் முகஸ்துதி ஆபத்து நிறைந்தது.

—பிளேட்டோ

அன்பு செய்ய முடியாவிட்டால் முகஸ்துதியேனும் செய்யக் கற்றுக்கொள். அதுமில்லையானால் அபாயந்தான்.

—கதே

65. காமம்

புகையால் நெருப்பும், புழுதியால் முகக் கண்ணாடியும், கருப்பையால் கர்ப்பமும் மூடப்பட்டிருப்பது போலவே, காமம் என்ற பகையாளியால் மெய்யறிவு மூடப்பட்டிருக்கிறது.

—பகவத்கீதை

காமம் உழந்து வருந்தினர்க்கு ஏமம்
மடலல்லது இல்லை வலி.

—திருவள்ளுவர்

காமமே கொலைகட் கெல்லாங்
 காரணங் கண்ணோடாத
காமமே களவுக் கெல்லாம்
 காரணங் கூற்ற மஞ்சும்
காமமே கள்ளுண் டற்குங்
 காரணமாத லாலே
காமமே நரகபூமி காணியாக்
 கொடுப்ப தென்றான்.

—திருவிளையாடற் புராணம்

ஊருளெ ழுந்தவுரு கெழு செந்தீக்கு
நீருட் குளித்து முயலாகு—நீருட்
குளிப்பினுங் காமஞ் சுடுமே குன்றேறி
ஒளிப்பினுங் காமஞ் சுடும்.

—நாலடியார்

கொலையஞ்சார் பொய்ந்நாணார் மானமுமோம்பார்
களவொன்றோ வேனையுஞ் செய்வார்—பழியோடு
பாவமிஃ தென்னார் பிறிது மற்றென் செய்யார்
காமங்கதுவப் பட்டார்.

—நீதிநெறி விளக்கம்

சிறையுமுண்டோ செழிப்புனன் மிக்குழீஇ
நிறையு முண்டோ காமங்காழ் கொளின்.

—மணிமேகலை

காதலுக்குள்ளே காமம் இருப்பினும்
காமம் என்பதில் காதலே இல்லை.

—நாமக்கல் கவிஞர்

காமத்திற்கும் காதலுக்கும் சம்பந்தமில்லை என்று கூறுவது கடவுளுக்கும் விக்ரகத்திற்கும் சம்பந்தமில்லை என்று கூறுவது போலாகும்.

—ஒரு பெரியார்

66. காதல்

காதல்—முட்டாள்களின் கனவு; படித்தவர்களின் பிதற்றல், வெறியர்களின் வெளிப் பேச்சு.

—பெர்னட்ஷா

நாம் அனைவரும் காதலுக்காகத்தான் பிறந்தோம். வாழ்வின் ஆரம்பமும் அதுதான்; வாழ்வின் அந்தமும் அதுதான்!

—டிஸ்ரலி

அழகிற்காக உண்டாகும் காதல் ஒரு பூ; விரைவில் வாடிப்போகும். பணத்திற்காக உண்டாகும் காதல். ஒரு கண்ணாடி டம்ளர்; எந்த நிமிஷம் உடையுமென்று சொல்ல முடியாது. அன்பிற்காக உண்டாகும் காதல் அஜந்தா ஓவியம்; என்றும் வர்ணம் அழியாது!

—அரு. ராமநாதன்

என்றும் காதலிக்காமல் இருப்பதைவிட ஒரு தடவையாவது காதலித்து அதை இழப்பதே மேல்.

—டென்னிசன்

காதல் கீதல் என்பதெல்லாம் கதையளவில்தான் இருக்கிறது. பெரும்பாலாக, நடைமுறை வாழ்க்கைக்கும் காதலுக்கும் எவ்வித சம்பந்தமுமே இல்லை.

—"லட்சுமி"

கண்ணை மூடிக்கொண்டு விழுவது காதல் அல்ல. காதல் திடீரென்று முளைப்பதும் அல்ல. ஒருவருடன் பழகப் பழகத்தான் அன்பு வளரும். ஒருத்தியை அல்லது ஒருவனை மணந்து அவளுடன் அல்லது அவனுடன் ஒன்றுபட்டு வாழ்க்கை நடத்துவதுதான் காதல்.

—வில்ப் எக்கார்ட்

காதல் அடைதல் உயிரியற்கை !—அது
கட்டில் அகப்படும் தன்மை யதோ ?

—பாரதிதாசன்

கற்றவங்க கவிதையிலே காதலாகிறார்,
கனவான்கள் பணத்துமேலே காதலாகிறார்,
பெற்றவங்க பிள்ளைமேலே காதலாகிறார்,
பெருதவங்க தெய்வமீது காதலாகிறார் !

—ஒரு பாடல்

நாடிப் பெறுங்காதல் நன்று; அதனினும் நன்று, நாடாது பெற்றிடும் காதல்.

—ஷேக்ஸ்பியர்

நட்பு அடிக்கடி காதலாக மாறலாம், மாறுவதுண்டு. ஆனால் காதல்மட்டும் நட்பாக ஆவதில்லை.

—பைரன்

காதல் என்பது கல்யாணத்தின் சூரியோதயம்.

—பிரெஞ்சுப் பழமொழி

ஒரே பெண்ணை எப்போதும் காதலித்துக்கொண்டிருக்க முடியாது என்று சொல்வது சுத்தப் பொய். ஒரே வீணையின் வாத்தியத்தை எப்போதும் வாசித்துக் கொண்டிருக்க முடியாது என்று சிறந்த சங்கீத வித்வான் எவனும் சொல்வதில்லை.

—பால்சாக்

காதல் பெண்களை உயர்த்திவைக்கிறது. அவர்களுக்கு பலமும் சக்தியும் அளிக்கிறது. ஆனால் ஆண்களைப் பலவீனப்படுத்தி விடுகிறது.

—டால்ஸ்டாய்

67. பேச்சு

பத்து மரக்கால் அளவு பேச்சு இந்தப் பூமிக்கு வந்தது. பெண்கள் ஒன்பது மரக்கால் பேச்சை எடுத்துக் கொண்டார்கள்; ஆண்கள் ஒரு மரக்கால் பேச்சை எடுத்துக் கொண்டார்கள்.

—பாபிலோனியன் தால்மூத்

பேசாத வார்த்தைக்கு நீ எஜமான், பேசின வார்த்தை உனக்கு எஜமான்.

—ஆங்கிலப் பழமொழி

சிந்தித்துப் பார்க்காமல் பேசுவது, குறி பார்க்காமல் சுடுவதைப் போன்றது.

—காஸ்லிட்

இரகசியமாகப் பேச விரும்புவது பயத்தையே குறிக்கும்.

—மகாத்மா காந்தி

தங்களுக்குத் தெரிந்ததைப்பற்றி ஆண்கள் பேசு கிறார்கள். தங்களுக்குத் திருப்தி தருவதைப்பற்றியே பெண்கள் பேசுகிறார்கள்.

—ரூசோ

சிறிய விஷயமானாலும் யோசித்துப் பேசு.

—ஜின்னா

ஒரு பெண் பேசும் போது நீயும் பேசாதே. புன்சிரிப்பு போதும்.

—லியூ-கின்

இறந்தோரைப் பற்றி பேசுவது போலவே இருப் போரைப்பற்றியும் இவ்வுலகம் பேசுமானால் எவ்வளவு நன்மையாய் இருக்கும் !

—ஆவ்பரி

பேசாத பேச்சு உறையிலுள்ள வாள்போன்றது. பேசி விட்டால் வாளைப் பிறன் கையில் கொடுத்து விடுகிறாய்.

—குவார்லஸ்

ஒருவன் யாரிடம் பேசுகின்றானோ அவனுக்குப் பொருள் விளங்காமலும், பேசுகின்ற தனக்குப் பொருள் விளங் காமலும் இருந்தால், பேசுவது தத்துவ சாஸ்திரம் ஆகும்!

—வால்டேர்

பேசவேண்டிய அவசியம் இல்லாதவர்கள் பேசாமலே இருந்துவிடட்டும். இந்த உலகம் எவ்வளவு இன்பகரமாக ஆகிவிடும் அப்போது !

—வனஷைன் சஞ்சிகை

குளிர்ந்த சந்திரனைக்கண்டு பொங்கும் கடல் சூரியனைக் கண்டு பொங்குவதில்லை. அதுபோல் இனிய சொல்லைக் கண்டு உலகம் மகிழுமேயன்றி, கடுஞ் சொல்லைக் கண்டல்ல.

ஆதலால் நீ எப்பொழுதும் இனிய மொழியே பேசு. அதனால் உலகத்தையே வசப்படுத்தலாம்.

—நாலடியார் கருத்து

தெளிவான பேச்சு தூய்மையான உள்ளத்தின் எதிரொலி.

—வில்லியம் லா

அதிகமாகப் பேசுவோர் செயல்புரிவதில்லை.

—மாஜினி

ஒரு பெண் பேசினால் பெரும் பூமி அதிரும். இரண்டு பெண்கள் பேசினால் வானத்திலிருந்து நட்சத்திரங்கள் உதிரும். மூன்று பெண் பேசினால் அலைகடல் வற்றும். பல பெண்கள் பேசினால் உலகம் என்ன ஆகுமோ?

—ஒரு தனிப்பாடல் கருத்து

பெண்களாகிய நாம், அதிகமாகப் பேசுகிறோம் என்பது உண்மைதான்; என்றாலும் நமக்குத் தெரிந்ததில் பாதிகூட நாம் சொல்ல முடிவதில்லையே!

—ஆஸ்டர்

கவர்ச்சியற்ற சாதாரண பெண்கள் அவர்களின் வாழ்க்கை முழுதும் காதலிக்கப்படுகிறார்கள். ஏனெனில் அவர்களுக்குப் புகழ்ந்துபேசுவது எப்படியென்று தெரியும்.

—ஆண்ட்ரேமராயிஸ்

68. மௌனம்

மௌனம் என்பது முட்டாள்கள் பெற வேண்டிய அறிவு, அறிஞர் குணங்களில் ஒன்று.

—பாய்லோ

முட்டாளின் மேலான ஞானம் மௌனம். அறிஞனின் பெரிய சோதனை பேச்சு.

—குவார்லஸ்

முட்டாளுக்கு "மௌனமாய் இரு" என்பதைவிட உயர்ந்த உபதேசம் வேறொன்றும் இல்லை. அதன் நன்மையை அறிந்து விட்டால் அவன் முட்டாளாக இருக்க மாட்டான்.

—ஸாதி

எல்லாக் குணங்களிலும் மௌனம் மிகவும் மேலானதாகும். அதன் மூலம் பிறர் குறைகளை அறியவும் நம் குறைகளை மறைக்கவும் முடியும்.

—ஜீனோ

பேச்சு பெரியதே. ஆனால் மௌனம் அதைவிடப் பெரியதாகும்.

—கார்லைல்

மௌனம் கலகம் நாசம்.

—சமஸ்கிருதப் பழமொழி

அறிவு, மௌனம் கற்பிக்கும்; அன்பு, பேசக் கற்பிக்கும்.

—ரிக்டர்

மௌனமாக இருக்கும் மனைவியா? இந்த ரத்தினம் எங்கே ஐயா, கிடைக்கிறது.

—பாபுராவ்

ஒரு மௌனம் நூறு தடைகளை வென்று விடுகிறது.

—பிரேம்சந்த்

ஒரு பெண்ணின் மௌனம் ஆணின் உள்ளத்தைக் கிளர்த்தி விடுவது போலவும், அவள் கவனத்தை ஈர்ப்பது போலவும் வேறு எதுவுமே இல்லை.

—ஆலிவர் கோல்டுஸ்மித்

பிறருடைய பேச்சுக்களையும், செய்கைகளையும் கூர்ந்து கவனித்துப் பார். ஆனால், ஒரு விஷயம்; கவனம் எவ்வளவு அவசியமோ அவ்வளவு அவசியம் மௌனமும். மௌனத்தின் மூலம் நீ எதையும் இழந்துவிட முடியாதல்லவா?

—ஒரு பெரியார்

ஒருவனின் வாய்ப் பேச்சைக் காட்டிலும் அவனது மௌனம் அதிகமான எண்ணங்களைப் பிரதிபலிக்கும்.

—ஷேக்ஸ்பியர்

69. சங்கீதம்

சங்கீதம் தேவதைகளின் பேச்சு.

—கார்லைல்

சங்கீதம் உடைந்த உள்ளத்தின் மருந்து.

—எ. ஹண்ட்

சங்கீதத்திற்குக் கட்டுப்படாதவரையும் தலை வணங்காதவரையும் காண்பது சாத்தியமேயில்லை.

—பகவன்

சங்கீதம் நம்முடைய இயற்கையின் நான்காவது தேவை. முதலாவது உணவு, இரண்டாவது உடை மூன்றாவது உறைவிடம், நான்காவது சங்கீதம்.

—பௌவி

சங்கீதத்தைப் பிறமொழி ஒன்றின் மூலம் அனுப்விக்க ஆசைப்படுகிறவன் தன் காதலைக் காதலியிடம் தெரிவிக்க வக்கீலை அமர்த்துவது போன்றதாகும்.

—தாகூர்

சங்கீத உணர்வு இல்லாதவனே, சங்கீத இன்னிசை ஒலிகளின் ஒருமிப்பில் மனம் நெகிழாதவனே, சூழ்ச்சி, நாசம், நயவஞ்சகம் முதலானவற்றிற்கே தகுதியானவன். அவனை ஒருவரும் நம்பக் கூடாது.

—ஷேக்ஸ்பியர்

சங்கீத உச்சஸ்தாயிகள் உள்ளத்தின் உணர்ச்சிகளில் இருந்து பொங்குகிறது.

—எம்மென்ஸ்

நான் சங்கீதத்தையும், மற்ற கலைகளையும் விரும்பு கிறேன். ஆனால், அவற்றிற்குச் சாதாரணமாக இன்று கொடுக்கப்படும் மதிப்பை நான் கொடுக்கவில்லை. குறிப் பிட்ட சாஸ்திர ஞானம் இருந்தாலொழிய ஒரு விஷயம் புரியாதென்றால், அதற்கு நான் மதிப்புக் கொடுக்க மாட்டேன்.

—மகாத்மா காந்தி

சங்கீதம், பொதுவாக விலங்குகளுக்கும் மனிதனுக்கும் பொதுவுடைமையற்ற ஒரு கலையாகும்.

—ரிக்டர்

சங்கீதம் என்பது ஒரு சொற்கூட்டம். அது உலகத் திற்குப் பொது என்பது உண்மையே. ஆனால் அந்த சொற்கூட்டத்தை வைத்துக் கொண்டு ஒவ்வொரு சங்கீத வித்வானும் தனது பண்பாடு, தனது இயல்பு ஆகியவற் றிற்கு எற்ற சங்கீதத்தை எழுப்ப வேண்டும். இல்லா விட்டால் சங்கீதம் செத்துப் போகும்.

—வில்லியம்ஸ்

சங்கிதத்தில் எவ்வளவுக்கெவ்வளவு பழமையான முறைகளைக் கடைப் பிடிக்கிறோமோ, அவ்வளக்கவ்வளவு சங்கீதத்தின் தரம் உயர்ந்து நீடிக்கும்.

—கல்கி

ஆங்கில சங்கீதம், பெண்கள் பாடும்பொது யாரோ குரல் வளையை நெறிப்பதைத் தாங்க முடியாதபடி அலறுவதாகவும், ஆண்கள் பாடும்போது கோபங் கொண்ட சிங்கங்கள் கர்ஜனை புரிவது போலும் உணர்கிறேன்.

—ராஞ்சி ஷகானி

70. நன்மை—தீமை

நன்மை என்றும்—தீமை என்றும் தனியே இல்லை; அவ்விதம் ஆக்குவது நமது மனமே.

—ஷேக்ஸ்பியர்

"நன்மை" அநேகமாய் பிறருக்குத் தீங்கிழைப்பது

—பால் ரிச்சர்டு

அநேக சந்தர்ப்பங்களில் நாம தீமை என்று கருதுவது தவறியோ அல்லது தாமாகவோ நன்மையாக முடிகிறது.

—ஆவ்பரி

கடவுள் தண்டித்தாலும் தண்டிக்கட்டும். பூசாரித் தண்டனையை மட்டும் தாங்க முடியாதென்று எண்ணுவதாலேயே பலர் நன்மை செய்வதை விட்டுத் தீமை செய்வதில் கவனம் செலுத்தி விடுகின்றனர்.

—ஒரு பெரியார்

தீமை தரும் எண்ணங்களுக்கு ஒரு பொழுதும் இடங் கொடாதே. எப்பொழுதாவது சிறிதேனும் இடங்கொடுத்து

விட்டால் பின் தடுமாற்றமின்றி நன்மையை நாடுதல் கஷ்டமாய் விடும்.

—மார்க்க ஒளரேலியன்

தீமையிலும் நன்மை காண்பதே; திடமான உண்மையிடம் நாம் காட்டும் ஆசையை அளவிடும்.

—கதே

தீமையிலும் நன்மையுண்டு; அதை அறிவதே நமது அறிவுடைமை.

—ஒரு பெரியார்

71. நீதிமன்றம்

நீதிமன்றம் ஒரு எலிப் பொறியைப் போன்றது; உள்ளே நுழைவது சுலபம். ஆனால் வெளியே வருவது கஷ்டம்.

—பால்பர்

நீதிமன்றத்திற்குப் போவதானல் என்ன ஏற்படும் என்று ஒன்றும் நிச்சயமாகச் சொல்ல முடியாது. ஆனல் ஒரு விஷயம் நிச்சயமாக ஏற்படும். அதாவது பணச் செலவு ஏற்படும்.

—பட்லர்

நீதிமன்றங்களில் வழக்கு வெற்றி பெற்றாலும் பண நஷ்டம்; தோல்வி அடைந்தாலும் பண நஷ்டம்.

—வால்டேர்

இவ்வுலகிலுள்ள எல்லா நீதிமன்றங்களைக் காட்டிலும், மனச் சாட்சியே சிறந்ததும், உயர்ந்ததுமான நீதிமன்றமாகும்.

—விக்டர் யூகோ

நல்ல வக்கீல்கள் இல்லையென்றால் நீதிமன்றங்களினால் நல்ல முறையில் நீதி வழங்க முடியாது.

—பதஞ்சலி

எந்த நாட்டில் மக்களிடையே தன்னடக்கமில்லாத தன்மைகளும் பல நோய்களும் மலிந்திருக்கின்றனவோ; அந்த நாட்டில் நீதிமன்றங்களும், வைத்தியசாலைகளும் பெருகிக் கொண்டே எந்நேரமும் திறந்து கிடக்கும்.

—பிளேட்டோ

72. வக்கீல்கள்

மக்கள் ஒருவருக்கொருவர் மனிதக்குணத்தோடு பழகிவிட்டால் முதன் முதலாகப் பட்டினியாகச் சாக வேண்டியவர்கள் வக்கீல்கள்.

—சி. என். அண்ணாத்துரை

எதிர், எதிர்கட்சிகளில் வாதாடும் வக்கீல்கள் கத்திரிக்கோலின் இரு பக்கங்களைப் போன்றவர்கள். அவர்கள் ஒருவரை ஒருவர் வெட்டிக் கொள்ளமாட்டார்கள். ஆனால் நடுவில் அகப்பட்டுக் கொண்டு தவிக்கும் இரண்டு பக்கக் கட்சிக்காரர்களையும் வெட்டி விடுகிறார்கள்.

—பெர்னாட்ஷா

சமூகத்தின் புல்லுருவிகள்—வக்கீல்கள்.

—மகாத்மா காந்தி

வக்கீல்களால்தான் இந்தியாவில் சட்டரீதியான ஆட்சி நடக்கிறது. தனிப்பட்ட மனிதர்களின் உரிமையைப் பாதுகாக்கும்பொறுப்பாளர்கள் அவர்கள்தாம். சட்டத்தின் பெருமையையும் குடிமக்களின் உரிமையையும் பாதுகாக்க வேண்டியவர்களும் வக்கீல்கள்தாம். அவர்கள் செய்யும்

தொழில் மிகவும் பரோபகாரமான தொழில், ஆனால் சாதாரண மக்களும், அரசியல் வாதிகளும் வக்கீல்களை வெறுக்கிறார்கள்.

—கே. எம். முன்ஷி

வழக்குகளுக்கு அதிக இடமில்லாதபடி சட்டங்களை எளிதானவைகளாகச் செய்துவிடவேண்டும்; சுருக்கமானவைகளாக ஆக்கிவிடவேண்டும். இம்மாதிரிச் செய்து விட்டால் வக்கீல்களைப் பற்றிய விவகாரமே தீர்ந்து போய்விடும்.

—"லோகோபகாரி."

73. மனம்

மனம் கூர்மையானது; அகன்றதல்ல. ஆனால் ஒவ்வொரு முனையிலும் குத்திக் கொள்ளுகிறது; நகர்வதில்லை.

— தாகூர்

மனம் ஒரு பயங்கரமான கத்தி. இரண்டு பக்கமும் கூர்மையுடையது. எங்கு திருப்பினாலும், எப்படியும் வெட்டும். நிதானமாக மனத்தை உபயோகிக்க வேண்டும். நிதானம் தப்பினால் வெட்டுக்காயம்தான். சந்தேகம் வேண்டாம்.

—மாந்தேன்

ஒரு ஆணின் மனம் மாறுவதற்கும் மாற்றுவதற்கும் ஒரு பெண்ணின் மனமே துணை செய்யும்.

—ஒரு பெரியார்

பள்ளத்தை நோக்கிப் பாய்ந்தோடும் காட்டாற்று வெள்ளம் போன்றது மனிதனின் மனம். நல்லது கெட்டது, உபயோகமுள்ளது, உபயோகமற்றது இன்னின்னது சிந்திக்கலாம், இவை இவை நினைக்கக்கூடாது என்ற வரம்பிற்குட்படுவதில்லை.

—ஒரு பெரியார்

மனம் ஒரு மாளிகை; உள்ளே சென்றவர்கள் வெளியே வர விரும்புவர்; வெளியே இருப்பவர் உள்ளே செல்ல விரும்புவர்.

—ஆவ்பரி

அறிவிற்கு மற்றொரு பெயர் மனம்.

—லெனின்

அறிந்தவற்றைக் கொண்டு புத்தியில் நினைத்து முடிவாக ஏற்படுகிற உணர்விற்கே மனம் என்று கூறிக் கொள்கிறோம்.

—ரஸ்கின்

மனம் கொண்டதே மாளிகை; நரகத்தை சொர்க்கமாக்கிக் காட்டுவதும் சொர்க்கத்தை நரகமாக்கிக் காட்டுவதும் அதுவே.

—மில்டன்

மனந்தானுனைக் கெடுக்குமாறுப் பகையின்
இனந்தானென் றெஞ்ஞான்று மெண்ணி—மனந்தன்
செயலெல்லாம் பார்த்தனைச் சீரிய வற்றுயப்பின்
அயலெல்லாம் போமழிந்து

—வ. உ. சிதம்பரம்

வயிற்றைப் போன்றதே மனமும், அதில் நீ எவ்வளவு திணிக்கிறாய் என்பது முக்கியமல்ல. அது எவ்வளவு ஜீரணித்துக் கொள்கிறது என்பதுதான் முக்கியம்.

—ஆல்பாட்ஜோ

ஒருவனுடைய மனம் தூய்மையால் இல்லாவிட்டால், பணமோ, குணமோ, வலிமையோ, வனப்போ அவனுக்குப் பயன்படாது.

—அரிஸ்டாட்டில்

மனத்தைத் தெரிந்து கொள்ளட்டும்; அதனை தெளிவாகச் சொல்லட்டும்; அதனை எங்கும் பரப்பட்டும்; அந்த மனத்திற்குத் தக்கபடி நல்ல காரியங்களையே செய்யட்டும்; மற்றவை தாமே வந்து அமையும்.

—ஏசுநாதர்

மனிதனுடைய சுகதுக்கங்களுக்கும் வெற்றி தோல்விகளுக்கும் மனமே காரணம். மனிதன் மனதில் நடந்ததை கண்டு ஏமாந்து விடக்கூடாது. அடங்கிவிட்டது போலத் தோன்றும் மனது பல ஆண்டுகள் கடுந்தவம் புரிந்த முனிவர்களையும் ஆட்டிவைக்கிறது.

—காளிதாசர்

74. பணம்

பணம் என்பது ஆழங்காண முடியாத ஒரு பெருங் கடல். அதில் பெருமை, மனச்சாட்சி, உண்மை முதலியன மூழ்கிவிடும்.

—கோஸ்லே

கொஞ்சம் பணம் இருந்தால் உங்களை அது காப்பாற்றும். அதிகப் பணம் இருந்தால் நீங்கள் அதைக் காப்பாற்றவேண்டும்.

—ஒரு பெரியார்

மற்ற மனிதர்கள் எல்லாம பணத்திற்காக இப்படிப் பேயாய் அலையாதிருந்தால், எந்தத் தனி மனிதனும் பணம்

இல்லாமலே எவ்வளவோ நிம்மதியுடன் வாழ்க்கை நடத்த முடியும்.

—கேஸ்ஷாரிமன்

பணத்தினால் இன்பத்தை விலைக்குப் பெற முடியாது. ஆனால் அதனைக் கொண்டு மனிதன் துன்பத்தை விலைக்கு வாங்க முடியும்.

—மைக்கேலார்லேன்

பணத்தை மட்டும் சேர்த்துக் கொள்; உலகம் முழுவதும் சேர்ந்துகொண்டு உன்னை ஒரு பண்பாளன் என்று கூறத் தயங்காது.

—பெர்னட்ஷா

வேறு எந்த நற்பரிசுக்கும் தகுதியில்லை என்று கண்ட பின்னர் அத் தகுதியற்ற மனிதனுக்குக் கடவுள் பணத்தைக் கொடுக்கிறார்.

—தலூர்

பணம் மனிதனைப் படைத்ததை எவனேனும் கண்டதுண்டோ? மனிதனே பணத்தை எப்போதும் படைப்பவனாவான்.

—விவேகானந்தர்

பணம் தொல்லைகளின் எதிரி. நிறையப் பணம் இருந்தால் அதுவே தொல்லைகளின் தாய்.

—ஒரு பெரியார்

பணம் வந்ததுபோல் போய்விடும். போகும்போது நமக்கு அபகீர்த்தியையும் உண்டாக்கும். ஆனால் நற்குணம் என்ற உண்மையான செல்வம் நம்மை ஒருபோதும் கைவிடாது.

—லியோனர்டோ

பணம் சேரச் சேர மனமும் மாறிக்கொண்டே போகும். பணத்தாசை பிடித்தவர்க்கு உறவினர்கள் கிடையா; பெரியோர்களும் கிடையா.

—சமஸ்கிருதப் பழமொழி

குறிப்பாகத் தன் பணம் எங்கெல்லாம் போகிறது என்பதை அறியாதவன் நிச்சயமாகத் திருமணம் ஆகாதவனுகத்தான் இருப்பான்.

—டன்பென்னெட்

பணம் எப்போதும் பந்துவல்ல; பந்துதான் எப்போதும் பணம்.

—சைபீரியாப் பழமொழி

பணத்தைத் தீய வழியில் தேடுவது குற்றம். ஆனல் தீயவழியில் செலவிடுவதோ அதைவிடப் பெரிய குற்றம்.

—ரஸ்கின்

பணம் தேடுவது ஒரு பெரிய காரியந்தான். ஆனல் அதைவிடப் பெரிய காரியம், தேடிய பணத்தைக் காப்பாற்றிக் கொள்வதே ஆகும்.

—டிஸ்ரேலி

பணம் ஒரு நல்ல உழைப்பாளி; ஆனல் ஆபத்து நிறைந்த தலைவன்.

—பிரஞ்சுப் பழமொழி

பணம் தேடுவது முட்டாளுக்குக்கூடத் தெரியும். ஆனல் அதைச் செலவு செய்வதற்கு அறிஞருக்குத்தான் தெரியும்.

—கதே

சிலர் பணத்தை வெறுப்பதாகச் சொல்லுவார்கள். ஆனல் அவர்கள் வெறுப்பது பிறரிடம் உள்ள பணத்தைத்தான்!

—கோல்டன்

பணத்திடம் நம்பிக்கை வைக்காதே; நம்பிக்கையிடம் பணத்தைப் போட்டுவை.

—பலுசிஸ்தான் பழமொழி

பணத்தால்தான் அபிமானத்தைப் பெறமுடியுமென்றால், பணத்தாலேயே அபிமானத்தை அழிக்கவும் முடியும்.

—டென்மார்க் பழமொழி

பணத்தைக் கொடுத்துவிட்டு அவனிடம் கொஞ்சிப் பேசிக்கொண்டு இருந்தால் பணம் போய்விட்டது என்று பொருள்.

—அரேபியப் பழமொழி

75. கவலை

எனக்குத் தெரியும், கவலை—வாழ்க்கையின் எதிரி.

ஷேக்ஸ்பியர்

நான் என்ன செய்யவேண்டும் என்பதுவே என் கவலை; என்னைப் பற்றி பிறர் என்ன நினைக்கிறார்கள் என்பதல்ல.

—டால்ஸ்டாய்

வாழ்வைக் காக்க எவ்வளவு கவலை கொள்ளுகிறோமோ அவ்வளவு கவலையும் கவனிப்பும் வாழ்வை நல்வாழ்வாக்க எடுத்துக்கொள்ள வேண்டும்.

—ஆவ்பரி

கவலை உடல் நலத்தை அரித்து அரித்து எரிக்கும் நஞ்சு.

—திரு. வி. க.

கவலையற்றவர் நீண்ட காலம் வாழலாம். பல்லாண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த தமிழ்ப் புலவரான பிசிராந்தையாரின் பாடலாலும் இதை அறியலாம்.

—ஒரு பெரியார்

சோக நாடகமே சிறந்த உண்மை விளக்கம். கவலையிலேதான், கலை வளர்கிறது; மனித உள்ளம் தூய்மையில் ஊறி வெளியே வெற்றியுடன் தலைகாட்டுகிறது.

—பேகன்

கல்யாணம் செய்துகொண்டவனை கவலைகள் அலைக்கழிக்கும்.

—பேஸில்

உலகம் உன்னைத் தெரிந்துகொள்ள வில்லையே என்றும், நீ உலகத்தைத் தெரிந்துகொள்ளவில்லையே என்றும் கவலைப்படாதே.

—கன்பூசியஸ்

கவலையைத் துரத்து. எப்போதும் உயர்ந்த எண்ணங்களோடு இரு.

மு. வரதராசன்

76. மகிழ்ச்சி

மகிழ்ச்சி சகல நோய்களையும் தீர்க்கும் அற்புத மருந்து. சந்தோஷமாக வாழ முற்பட்டால், வாழ்க்கையில் கஷ்டமே இராது.

—ரஸ்கின்

மகிழ்ச்சியோடு இருக்க முயற்சிக்காதே. மகிழ்ச்சி என்பது திருப்தி தரும் ஒரு சக்தி. தேடிச் சென்ருல் அது கிடைக்காது; தன்ஞல் வரும்.

—ஒரு பெரியார்

தனிமையில் மகிழ்ச்சியாக இருப்பவன் ஒன்று காட்டு மிருகமாக இருக்கவேண்டும், அல்லது கடவுளாக இருக்க வேண்டும்.

—பேக்கன்

மகிழ்ச்சியைத் தேடாதே. ஆனல் மகிழ்ச்சியாயிருக்க எல்லா காலமும் தயாராயிரு.

—ரஸ்கின்

தன்னுடைய சக்திகளை பயன்படுத்துவதில் மகிழ்ச்சி காணுதவன்; என்றும் மகிழ்ச்சி காணப்போவதே இல்லை.

—கதே

உண்மையான மகிழ்ச்சி ஓய்ந்திருப்பதிலோ, பணத்திலோ இல்லை. அது மற்றவர்கள் புகழ்வதிலும் இல்லை. பயனுள்ள ஒரு காரியத்தைச் செய்யும்போதுதான் அது நமக்கு உண்டாகும்.

வில்ப்மெட்கிரென்பெல்

ஒருமாதம் பூராவும் ஒரு விஷயத்தைப் பற்றி வருந்துவதை விட ஒரு மணிநேர உழைப்பு உங்கள் துயரத்தைப் போக்கி அதிக மகிழ்ச்சியை அளிக்கும.

—பெஞ்சமின் பிராங்கிளின்

மகிழ்ச்சியாக இருப்பதற்கு, கருணை வாய்ந்த மனப் பண்பு உடையவர்களாக இருக்கவேண்டும்.

—ஒரு பெரியார்

பணமும் மகிழ்ச்சியும் பிறவிப் பகைவர்கள். ஒன்று வசிக்கும் இடத்தில் மற்றொன்று வசிக்காது.

—பிலிப்பைன் பழமொழி

எப்போதும் மகிழ்ச்சியோடிரு. பிறரால் வரும் சாந்தியையாவது, பிறருடைய உதவியையாவது தேடும் பொழுதுதான் மகிழ்ச்சி மாசு ஏற்படுகிறது.

—மார்க்க ஒளரேலியன்

77. முட்டாள்

தனக்கு ஒன்றும் தெரியாது என்று எண்ணுபவனுக்குக் கொஞ்சமாவது புத்தியுண்டு; தனக்கு எல்லாம் தெரியும் என்று இருப்பவன்தான் சுத்த முட்டாள்.

—புத்தர்

பெரியோர்களின் குறைகளே முட்டாள்களின் ஆறுதல்.

—டிஸ்ரலி

புரிந்து கொள்ளாத போதும், பொறுமைப் படும் போதும் மனிதன் மற்றவனை முட்டாளாகக் கருதி விடுகிறான்.

—சாக்ரடீஸ்

எல்லா மக்களையும் சிறிது நாளைக்கும், சிறிது மக்களை எல்லா நாளைக்கும் முட்டாள்களாக ஆக்க முடியும்; ஆனால் எல்லோரையும் எல்லா நாளைக்கும் முட்டாள்களாக்க முடியாது.

—ஆபிரகாம்லிங்கன்

தான்தான் மற்றவர்களைவிட புத்திசாலி என்று யாராவது நினைத்தால் அதுதான் அவர்களுடைய முட்டாள்தனமாகும்.

—எம்மின்ஸ்

முட்டாள்கள் எதையும் அப்படியே நம்புகிறார்கள்; புத்திசாலிகள் எதிலும் சந்தேகம் கொள்ளுகிறார்கள். இதுதான் உலகத்தைக் கஷ்டப்படுத்துகிறது.

—பெர்ட்ராண்ட் ரூஸல்

முட்டாளைத் துணைக்கொள்வது ஏகாங்கியாய் இருப்பதைவிட வேறாகாது.

—முதுமொழிக் காஞ்சி

தான் ஒரு சிறந்த அறிவாளி என்று எண்ணுபவன் முட்டாள் மட்டுமல்ல; ஆபத்தானவனுங்கூட.

—டைரர்

முட்டாள் படிப்பதை வெறுக்கிறான்; சாதாரண மனிதன் படிப்பதை புகழ்கிறான; ஆனால் புத்திசாலி அதை உபயோகித்துக் கொள்கிறான்.

—ஒரு பெரியார்

முட்டாள் ஆயுட்காலம் முழுவதும் அறிஞருடன் பழகினாலும் உண்மை அறியான். கரண்டிக்குக் குழம்பின் ருசி எப்படித் தெரியும்?

—சீனப் பழமொழி

முட்டாள் தன்னை அறிவாளி என்று எண்ணிக்கொள்கிறான். ஆனால் அறிவாளியோ தான் முட்டாள் என்பதை அறிவான்.

—ஷேக்ஸ்பியர்

அறிவாளி நுழைய முடியாத இடத்தில் முட்டாள் சுலபமாக புகுந்து விடுவான்.

—பெர்னட்ஷா

அறிஞர்கள் அடியெடுத்து வைக்க அஞ்சுமிடத்திலே முட்டாள்கள் படபடவென முன்னேறுகிறார்கள்.

—போப்

78. புத்திசாலி

அகமகிழ்ச்சி அடைவதால் ஒருவனது துயரம் அழிகிறது. அகமகிழ்ச்சி உள்ளவனது புத்தி நிரந்தரமாகிறது.

—பகவத்கீதை

அறிந்து கொண்டதே அறிவு. அதற்கு வழியும் வலுவும் கொடுப்பது புத்தி.

—கார்டினல் நியூமென்

இருதயம் கெடுதலாய் இருப்பவரிடம், புத்தியும் பலவீனத்தை அடைந்து விடுகிறது.

—கோல்டு ஸ்மித்

எவன் அதிக ஆச்சரியப்படுவதை நிறுத்திக் கொள்கிறானோ அவன் சீக்கிரத்தில் புத்திசாலியாகிவிடுகிறான்.

—ஒரு பெரியார்

ஆண்கள் புத்திசாலிப் பிடிக்காவிட்டாலும் கணத்தில் காரியத்தை நடத்தும் வாளை ஒத்தது. பெண்கள் புத்தியோ, கூர்மையாக இருந்தும் பெரிய காரியத்துக்கு உதவாத பேனைக்கத்திக்கு ஒத்தான் ஈடாகும்.

—தாகூர்

புத்திசாலியாக இருப்பதற்கு எந்தக் காரியத்தையும் கூர்ந்து நோக்க வேண்டும்; ஆழ்ந்து சிந்திக்க வேண்டும்.

—ரஸ்கின்

புத்திசாலித்தனம்தான் துன்பம் வராமல் தடுத்துக் கொள்வதற்கு ஆயுதம். அது மனத்துக்குள் இருப்பதானதால் பகைவர்களாலும் புகுந்து அழிந்துவிட முடியாத பாதுகாப்பு.

—குறள் கருத்து

ஒரு விஷயத்தை பல வாயிலாகப் பார்க்க முடியாத புத்தி குறுகிய புத்தியாகும்.

—ஜார்ஜ் எலியட்

புத்திசாலிக்கு எப்போதும் அதிர்ஷ்டம் வந்துவிடலாம்; ஆனால் அவன் முட்டாளைப்போல் எப்போதும் சந்தோஷமாக இருக்க முடியாது.

—ஒரு பெரியார்

79. தாய்

கடவுள் எங்கும் நிறைந்திருக்க முடியாது; எனவே தாய்மார்களை அவர் சிருஷ்டி செய்திருக்கிறார்.

—யூதப் பழமொழி

தாயிற் சிறந்ததோர் கோவிலுமில்லை.

—ஔவையார்

ஒரு பவுண்டு போதனையைவிட ஒரு அவுன்ஸ் தாய்மை மேலானது.

—ஸ்பானியப் பழமொழி

குழந்தையின் பூதவுடலை மட்டும் பெற்றெடுப்பவள் அல்ல தாய், அதன் புகழுடம்பையும் பெற்றெடுப்பவள் அவளே.

—ஒரு பெரியார்

தாய் இறந்துபோனல் வாய்க்கு ருசியான சாப்பாடு போகும்.

—நீதிவெண்பா கருத்து

தாயின் இதயம்தான் குழந்தையின் பள்ளிக்கூடம்.

—பீச்சர்

குழந்தைகளின் அறிவு சீக்கிரத்தில் முதிராததற்கு தாயின் அளவற்ற அன்புதான் காரணம்.

—சார்லஸ் டார்வின்

கஷ்டகாலமே வீரர்களைப் பெறும் தாய்.

—மாஜினி

குழந்தையை கையிலேந்தி நிற்கும் தாயைவிட அதிக அழகான காட்சி கிடையாது. குழந்தைகள் மத்தியில் உட்கார்ந்து மகிழும் தாயைவிட அதிகமாகப் போற்றற் குரியர் கிடையார்.

—கதே

உண்டாக்கிப் பாலூட்டி வளர்த்த தாயை
உமையவள் என்றறியீரோ, உணர்ச்சி கெட்டீர் ?

—பாரதியார்

மகளைவிட, வயதானவளாகத் தோற்றந்தரும் தாய் புத்திசாலி.

—கோக்ஸ்

ஒரு சிறந்த தாய் நூறு ஆசிரியர்களுக்குச் சமமாவாள்.

—ஹெர்ார்ட்

80. மனைவி

மனைவி ஒரு வீணையல்ல, வாசித்து முடித்த பிறகு அதைச் சுவற்றில் உங்கள் விருப்பப்படி தொங்கவிட முடியாது.

—ரஷ்யப் பழமொழி

உன்னுடைய மனைவி உன் நண்பன் என்பதையும், சகபாடி என்பதையும், ஆனால் போகக் கருவி அல்ல என்பதையும் ஞாபகத்தில் வைத்துக்கொள்.

—மகாத்மாகாந்தி

பணிவற்ற மனைவி பகைவர்க்குச் சமமானவள்.

—சமஸ்கிருதப் பழமொழி

முதலில் உன்னை அடக்கியாளப் பழகு. பிறகு உன் மனைவியைச் சுலபமாக உன்னால் அடக்கியாள முடியும்!

—புல்லர்

ஒருவன் பெருவதற்குரிய பொருள்களில் மனைவியை விடச் சிறந்த பொருள் எது?

— திருக்குறள் கருத்து

கணவன் சுபாவத்தைப் புரிந்துகொண்டு அனுசரித்து நடக்காதவள் மனைவி அல்ல.

—முதுமொழிக் காஞ்சி

மனைவியாவதென்றால் அடுப்பங்கரையும் வீடுமட்டும் தெரிந்தால் போதும். துணைவியாவதற்கு அகில உலகமும் தெரிந்திருக்க வேண்டும். அப்போதுதானே தன் துணைவனுக்கு எல்லாத் துறைகளிலும் ஆலோசனை கூறமுடியும்?

—டி. கே. சி.

ஆண்கள் தங்கள் மனைவிகளைத் தங்கள் சரீரத்தைப் போல் நேசிக்க வேண்டும். தன் மனைவியை நேசிக்கிறவன் தன்னைத்தானே நேசிக்கிறான்.

—பைபிள்

வேளைக்கு வேளை நாவிற்கு ருசியான உணவு கொடுத்து, தூங்கும்பொழுது கால் பிடித்துவிட்டு தொந்தரவு செய்யாமலிருப்பதே மனைவியின் லட்சணம்.

—புதுமைப் பித்தன்

மனைவி வெறுங்கலவிக்கு மட்டும் உரியஒருத்தியல்லள். அவள் தாயுமாவாள்; உடன் பிறந்தவளுமாவாள்; மகளுமாவாள்; கடவுளுமாவாள்.

—திரு. வி. க.

உங்கள் நாயை கடைசி வரையில் நம்புங்கள்; உங்கள் மனைவியை முதல் சந்தர்ப்பம் ஏற்படுமட்டும் நம்புங்கள்.

—பிரான்சுப் பழமொழி

உலகத்தில் யாருக்குமே மனைவியை எப்படிச் சமாளிப்பது என்று தெரியவில்லை—பிரம்மச்சாரியைத் தவிர.

—ஜார்ஜ் கோல்மன்

கோபமுள்ள மனைவி, அடுப்பிலிருந்து எடுக்க மறந்துவிட்ட கிடுக்கி போன்றவள். அந்தக் கிடுக்கி தானகவே ஆறவேண்டும்

—பாபுராவ்

மனைவியாரும் அறிவுடையவரே என்று கணவர்கள் அறிந்து கொள்வார்களாக.

மாஜினி

உண்மையான மனைவி கணவனுடைய இல்லத்தில் அடிமை; இதயத்தில் அரசியாவாள்.

—ரஸ்கின்

81. பெண்

பெண் என்பவள் எந்த இளங்காற்றுக்கும் வளைந்து கொடுக்கும் நாணல். ஆனால் புயல் அடித்தாலும் ஒடிந்து விடாத நாணல் அது.

—வாட்லி

மனித வாழ்க்கையை நமக்குத் தந்தவர்களும்—அதை மணம் பெறச் செய்பவர்களும் பெண்களே.

—போளி

சுயமாகத் தியாகம் பண்ணும் பண்பும் தூய்மையும் சேர்ந்து வடிவெடுத்த சொரூபமாக பெண் இல்லாவிட்டால் பின், பெண் என்பதற்கே அர்த்தமில்லை.

—மகாத்மாகாந்தி

பெண் என்பது என்ன? இயற்கை சிருஷ்டித்த—பொறுத்துக் கொள்ளக்கூடிய தவறுகளின் சிகரம்!

—கௌலி

பெண் கடவுளின் ஓர் ஒளிக்கதிர்.

—உத்தீன் ரூமி

பேய் தன்னால் முடியாதென்று நினைக்கும் காரியத்தை முடிக்கத்தான் "பெண்" என்ற ஜந்துவை அனுப்புகிறது.

—பிரேசிலி பழமொழி

அன்னை தயையும் அடியாள் பணியுமலரப்
பொன்னின் அழகும் புவிப் பொறையும்—நன்னு மொழில்
வேசி துயிலும் விறல் மந்திரி மதியும்
பேசில் இவை யுடையாள் பெண்.

—நீதி வெண்பா

தனக்குத் தெரியாததை பெண் மறந்து விடுகிறாள்.

—பிரிட்டன் பழமொழி

காரிகை, காற்று, காசு—இவை மூன்றும் மாறிக் கொண்டே இருப்பவை.

—ஸ்பானிய பழமொழி

பெண் ஏவல் செய்து ஒழுகும் ஆண்மையின் நாண்உடைப்
பெண்ணே பெருமை உடைத்து.

—திருவள்ளுவர்

பெண்ணென்று பூமிதனில் பிறந்துவிட்டால்—மிகப்
பிழை யிருக்குதடி தங்கமே தங்கம்.

—பாரதியார்

மங்கையராகப் பிறப்பதற்கே—நல்ல
மாதவம் செய்திட வேண்டுமம்மா.

—தேசிக விநாயகம்

ஆடை, அணிகலன், ஆசைக்கு வாசமலர்
தேடுவதும், ஆடவர்க்குத் சேவித்திருப்பதும்,
அஞ்சுவதும் நாணுவதும் ஆமையைப் போல் வாழுவதும்
கெஞ்சுவதுமாகக் கிடக்கும் மகளிர் குலம்
மானிடர் கூட்டத்தில் வலிவற்ற ஓர் பகுதி !

—பாரதிதாசன்

வனப்புடைய பெண் ஒரு மணி. நற்பண்பு வாய்ந்த பெண் ஒரு மணிக்குவை.

—ஸாதி

பெண்கள் இயல்பிலேயே இனிமை நிரம்பியவர்கள். அன்பென்னும் ஐசுவரியத்தைப் பிறவியிலேயே பெற்றெடுத்தவர்கள்.

—தாகூர்

82. முடியும்

சீக்கிரமோ அல்லது தாமதித்தோ எப்படியும் வெற்றி பெறுபவன் யாரெனில் தன்னால் முடியும் என்று எண்ணுகிறவன்தான்.

ஆங்கிலக் கவி

தேடாது அழிக்கின் பாடாய் முடியும்.

—ஔவையார்

முடியும் என்று கூறும் ஒருவனே அரசனாவான்.

—கார்லைல்

உடலுடன் உள்ளமும் ஒத்துழைத்தால், காமப் பசியைத் திருப்தி செய்யும் காரியத்தில் இறங்காமல் இருக்க முடியும்.

—மகாத்மா காந்தி

ஒரு வேலையை "நீங்கள் செய்ய முடியுமா?" என்று யாராவது கேட்டால், உடனே, "முடியும்" என்று தயங்காமல் சொல்லிவிடுங்கள். அதை எப்படிச் செய்வது என்பதுபற்றிப் பிறகு யோசித்துக் கண்டுபிடித்துக் கொள்ளலாம்.

—ரூஸ்வெல்ட்

தன் தந்திரங்களைப் பத்து வருஷத்திற்கு ஒரு முறை மாற்றிக்கொண்டு இருப்பவன்தான் எப்போதும் தலைவனாக இருக்க முடியும்.

—நெப்போலியன்

ஒருவனுடைய பேச்சும் செயலும் ஒன்றுபோல் இருக்க வேண்டும். அப்பொழுதுதான் அவன் சமுதாயத்தில் சேர்ந்து வாழமுடியும்,

—ரூசோ

உள்ளத் தூய்மை உள்ளவனே நன்னெறியில் ஓடுகிற உணர்ச்சிகளுக்கு உருக்கொடுக்க முடியும்.

—நியூமன்

பொது வேலைகளில் இளைஞர்கள் ஈடுபடுவது நல்லது. அவர்களுக்கு அதிகமான பழக்கமும் அநுபவமும் இல்லாத போதிலும் அதைத் நிறைவேற்றவும், ஈடு செய்யவும் அவர்களிடம் ஊக்கமும் உற்சாகமும் இருக்கிறது. இதனால் அவர்கள் எதையும் செய்துவிட முடியும்.

—பதஞ்சலி

பிறர் சொல்வதற்குக் காது கொடுத்துக் கேட்கவும், கீழ்ப்படியவும் முதலில் கற்றுக் கொள். அப்போதுதான், பிற்காலத்தில் சாமர்த்தியமாக உத்திரவிடவும், விருப்பப்படி பிறரை ஆட்டிவைக்கவும் உன்னால் முடியும்.

—வில்லியம் போட்கெர்

துன்பப் பறவைகள் உன் தலைக்கு வந்து வட்டமிடுவதை நீங்கள் தவிர்க்கமுடியாது. ஆனால், அவை உங்கள் தலைமயிர்மேலே உட்கார்ந்து கூடுகட்டிக் கொள்ளாமல் நீங்கள் தடுக்க முடியும்.

—சீனப் பழமொழி

உறுதியான உடல் இருந்தால் உறுதியான மனமும் இருக்கும் என்பது சரியல்ல. நேர்மாறானதே உண்மை. உறுதியான மனம் இருக்குமானால் உடல் நிலையைக் கூடுமான வரையில் வசதியாக வைத்துக்கொள்ள முடியும்.

—பிளேட்டோ

83. அழகு

அழகு என்பது ஒரு பொருள் அன்று. அது வெளித் தோற்றமே ஆகும். அதற்கு இலக்கணங்கள் கூறுதல் இயலாது.

—ஒரு பெரியார்.

அழகு என்பது பெண்களுக்கு இயற்கை அளிக்கும் முதல் பரிசு; அவர்களிடமிருந்து முன்னதாகப் பறித்துக் கொள்ளும் வஸ்துவும் அதுதான்.

—மீரி

அழகு!—அது சில நாளில் சிதைந்துவிடும் ஒரு சாம ராஜ்யம்.

—சாக்ரடீஸ்

பெண்களுடன் சிறிது ஒதுங்கியிருந்து பழகுவதே ஆண்களுக்கு அழகு.

—தாகூர்

ஆபத்தும் கஷ்டங்களும் ஏற்பட வேண்டும்; அதை வெல்லவும் வேண்டும். அதுவே ஆண் மகனுக்கு அழகு.

—ஔரங்கசீப்

உண்மையிலும் உண்மையின் மூலமாகவும் நான் அழகைக் காண்கிறேன்.

—மகாத்மா காந்தி

அழகு வழக்காடும்போது எல்லா பிரசங்கிகளும் ஊமையாகி விடுகின்றனர்.

—ஷேக்ஸ்பியர்

பெண்டிர்க்கு அழகு எதிர் பேசாதிருந்தல்.

—அதிவீரராம பாண்டியன்

அழகு ஒரு ஆபத்தான ஆயுதம்.

—சி. என். அண்ணாதுரை

குயிலுக்கு அழகு இன்னிசை. தித்திக்கப் பேசும் பெண்ணுக்கு அழகு மாறாத மனம்; கலை கற்ற படிப்பாளிக்கு அழகு இரக்க சுபாவம்; ஆசைமயக்கு அற்ற ஞானிகளுக்கு அழகு பொறுமைக் குணம்.

—நீதி வெண்பா

ஒரு பெண்ணை நீ அழகாய் இருக்கிறாய் என்று மட்டும் சொன்னால் அவ்வளவாக இலட்சியம் செய்ய மாட்டாள். அவளுக்கு தெரிந்த யாராவது ஒரு நல்ல அழகியை விட நீ அழகி என்று சொன்னால் அவள் மனம் குளிர்ந்து மயங்கி விடுவாள்.

—அனன்

ஒரு பெண்ணிடம் அவள் அழகாயிருக்கிறாள் என்று ஒரு தடவை சொல்லுங்கள். குட்டிச்சாத்தான் அதை ஒரு நாளைக்குப் பத்து தடவை அவள் காதுக்குள் திருப்பித் திருப்பிச் சொல்லிக் கொண்டிருக்கும்.

—பிரான்சுப் பழமொழி

அழகுதான் உண்மை, உண்மைதான் அழகு.

—கீட்ஸ்

அழகாக உள்ள எல்லா பொருள்களுமே பயனுடையதாக இருப்பதால்தான், அழகு என்று ஒப்புக் கொள்ள முடியும்.

—விக்டர் யூகோ

காதலால் கரைக்கப்படாத பொருள் அழகு.

—ஆஸ்கார் ஒயில்ட்

அழகுக்கு தொல்லைதான் சக்தி அளிக்கிறது.

—நீட்ஷே

அழகு தன்னை ஒரு நாளும் உள்ளபடி அறிந்து கொள்ள முடியாது.

—கதே

84. கற்பு

கற்பு. அன்பின் மிகுதியால் வரும் செல்வமாகும்.

—தாகூர்

“பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னும்
திண்மை யுண்டாகப் பெறின்.”

—திருவள்ளுவர்

ஒரு பெண் மனம் விரும்பி ஏற்றுக்கொள்ளும் காதலில் தான் அவளுடைய வாழ்வும் கற்பும் அடங்கி இருக்கிறது.

—ஜார்ஜ் எலியட்

கற்பு நிலையென்று சொல்ல வந்தாரிரு
கட்சிக்கும் அஃது பொதுவில் வைப்போம்.

—பாரதியார்

பெண்கள் கற்பு நெறி தவறக்கூடாது என்று மாத்திரம் கவலைப் படுவானேன்? ஆண்கள் கற்பு விஷயத்தில் ஏதாவது எடுத்துச் சொல்லப் பெண்களுக்கு உரிமையில்லையே, ஏன்?

—மகாத்மா காந்தி

கற்பெனப்படுவது சொல் திறம்பாமை.

—ஔவையார்

பெண்கள், தங்கள் கற்பைத் தாங்களே காத்துக் கொள்ள வேண்டும்.

—மாங்தேன்

கற்புக்காத்தல் ஒருத்தியின் மனோநிலையைப் பொருத்து நிற்பது. மனத்திறைல் எழுந் தீய எண்ணமே கற்பைக் குலைப்பது.

திரு. வி. க.

பெண் தன்னைப்பற்றியும் தனது கற்பைப் பற்றியும் காத்துக்கொள்ள தகுதி பெற்றுக்கொள்ள விட்டுவிட வேண்டுமே ஒழிய, ஆண் காவல் கூடாது.

—பெரியார் ஈ. வெ. ரா.

கற்பு, அடக்கம், உண்மை இம்மூன்றும் பெண்களைக் காப்பாற்றும் தெய்வங்கள்.

—ஹால்டன்

'கற்பு' என்னும் நல்லொழுக்கம் மக்களினத்துள்; குல மகளிற்கு மட்டுமே வற்புறுத்தப்பட்டு வந்தது; பொது மகளிற்குக் கற்பு வேண்டாததாக இருந்தது; ஆடவர்க்குக் கற்பு வற்புறுத்தப்படவில்லை.

—மு. வரதராசன்

85. திருமணம்

திருமணம் சிலருக்குக் காதலின் பூந்தோட்டம். ஆனல் பலருக்கு அதுவே போர்க்களம்.

—கிளிண்டன்

அவசரப்படுத்தி திருமணம் செய்து கொள்கிறோம்; பின்னல் ஓய்ந்திருக்கும்போது அதற்காகவே வருந்துகிறோம்.

—கான்கிரேவ்

எப்படியிருந்தாலும் திருமணம் செய்து கொள். நல்ல மனைவியாய்க் கிடைத்தால் மகிழ்ச்சியாய் இருப்பாய், மோசமான மனைவி கிடைத்தால் நீ ஞானியாவாய்.

—சாக்ரடீஸ்

திருமணத்தில் பெற்றோர்கள் தலையீடு இருக்கக் கூடாது. நாட்டின் ஒழுக்கத்திற்கும் அமைதிக்கும் இது மிக மிக அவசியம்.

—மாசேதுங்

திருமணம் என்பது ஒரு சிறை; அதில் பெண் கைதி; ஆண்—அந்தச் சிறை அதிகாரி.

—பகவன்

திருமணம் என்பது கடைசியாக வந்து சேருமிடம் அல்ல—அது ஒரு பிரயாணம்.

—ஜர்னல் ஆப் லிவிங்

காதல் என்பது மனமயக்கம். திருமணம் என்ற சிறு சடங்குடன் அது சமாதியடைந்து விடுகிறது.

—மேரி கொரில்லி

மனிதன் பார்த்து வியக்கும் நட்சத்திரம் காதல் அதைப் பார்த்தபடி அவன் இடறி விழும் படுகுழி திருமணம்

—மென்கென்

திருமணம் ஆகாதவர்கள் திருமணம் செய்து கொள்ள விரும்புகிறார்கள். திருமணம் ஆனவர்களோ அத் தொடர்பில் இருந்து விடுபட்டு வெளியேற விரும்புகிறார்கள்.

—எமர்சன்

உணவை எப்படி தேர்ந்தெடுக்கவேண்டும் என்று சொல்லு; உடையை எப்படி அணிய வேண்டும் என்று

சொல்லு; ஆனல் திருமணத்தில் மட்டும் தலையிடாதே. அது அவரவர்கள் பிரியம்.

—ஆமென்

இருமனமும் ஒருமனப்பட்டதே திருமணம் ஆகும்.

—பாரதிதாசன்

திருமணம் என்பது காதலின் அஸ்தமனம்.

—பிரான்சுப் பழமொழி

திருமணத்திற்கு முன் பெண் அழுவாள்; திருமணத்திற்கு பின் கணவன் அழுவான்.

—போலந்துப் பழமொழி

திருமணம் என்பது வாழ்க்கை முழுவதும் ஒன்றுபட்டிருக்க ஏற்படும் ஒரு சேர்க்கை. திருமணத்தின் மூலம் ஆண் பெண் இருவருக்கும் நட்புரிமை ஏற்படுகிறது. இது கெடாமல் இருக்க ஒருவரை மற்றவர் அடக்கி ஆளவோ, ஒருவர் சொல்லை மற்றவர் அலட்சியம் செய்யவோ கூடாது. தனக்கு ஒன்றைக்கூற எவ்வளவு உரிமை இருக்கிறதோ, அதே உரிமை மற்றவருக்கும் இருப்பதாக உணர வேண்டும்.

—டேவிட்மேஸ்

மனிதன் தான் செய்த பாவங்களுக்காக அனுபவிக்கின்ற, நரகத்திற்கும் சொர்க்கத்திற்கும் இடையே உள்ள இடம்தான் திருமணம்.

—ஜான்ஸ்டன்

86. குழந்தை

குழந்தைகளின் மூலம் அன்பின் கியதியை புரிந்து கொள்ள முடியும் என்பதையும், கற்றுக்கொள்ள முடியும்

என்பதையும் நான் கண்டறிந்திருக்கிறேன். அறியாமை குடிகொண்டுள்ள பெற்றோர்களாகிய நாம் மட்டும் தலையிடாமல் இருப்பதால், குழந்தைகள் ஒருவித சூது வாதையும் அறியாமலே இருப்பார்கள்.

—மகாத்மா காந்தி

குழந்தை ஒரு கலைஞன்.

—பிளாரன்ஸ்கேன்

குழந்தைகளைத் திருத்த மிக நல்ல வழி, அவர்களைப் பாராட்டுவதுதான்.

—ஷெரிடான்

ஏழையின் செல்வங்களுக்குக் குழந்தைகள் என்று பெயர்.

—டேனிஷ்

குழந்தைகளின் வாயிலிருந்து அறிவு ஞானம் பிறக்கிறது.

—ஏசுநாதர்

தாயின் நற்குணங்களும், தந்தையின் பாவங்களும் குழந்தைகளிடம் வருகின்றன.

—சார்லஸ் டிக்கன்ஸ்

குழந்தைகளுக்கு கவலை, பயம், அதிர்ச்சி, கோபம், வருத்தம், பொறாமை, கசப்பு இவை இல்லாத ஒரு இலட்சிய வாழ்வை வாழ்வதற்குக் கற்றுக் கொடுங்கள்.

—எர்னஸ்டைன மாரிஸ்

குழந்தைகளை நல்ல பழக்கத்தில் வளர்க்க வேண்டும். ஏனென்றால், அவர்கள் தான் நமது வருங்கால பிரஜைகள்.

—வல்லபாய் படேல்

குழந்தை வளர்ப்புதானே? அது ரொம்பவும் சுலபமான வேலை. குழந்தை உன்னுடையது அல்ல; பிறனுடையது என்று பாவித்துக்கொள்; அவ்வளவுதான். பிறருடைய குழந்தையை எப்படி வளர்க்க வேண்டும் என்பது தெரியாதவன் எவனுமே இந்த உலகத்தில் இல்லை.

—பிங்கிராஸ்பி

சிறிது அன்பு குழந்தையிடம் காட்டு; அடடா, எத்தனை கொள்ளை கொள்ளையாகத் திரும்பவும் கொட்டுகிறது அது!

—ரஸ்கின்

குழந்தைகள் இல்லாத வீடு சூன்யமானது. குழந்தைகளே நிரம்ப வட்டிக்கு விடக்கூடிய பெருஞ் செல்வமாகும்.

—திரு. வி. க.

குழந்தைகள் வாழ்க்கையில் புதிய கவலைகளை அதிகரிக்கின்றனர். ஆனல் பழைய கவலைகளை மறக்கடிக்கிருர்கள்.

—பேக்கன்

குழந்தையை வளர்க்கும்போது அதனுடைய வயது முதிர்ந்த நிலையை மனதில் கொள்ள வேண்டும்.

—ஜோபர்ட்

குழந்தையின் குறும்புத்தனமே அதன் மூலதனம். குழந்தை ஓர் உயர்ந்த பொருள். அது உயிரும் உணர்ச்சியும் கொண்டது. அதன் சம்மதத்தைக் கேட்டு நாம் அதை உண்டாக்கவில்லை.

—ராஜாஜி

87. சிக்கனம்

சிக்கனமாக இல்லாதவன் சாமர்த்தியசாலியாக இருக்க முடியாது. சாதுரியமாகக் குடித்தனம் நடத்த இயலாது.

—பீகன்ஸ்பீல்டு

வருமானம் என்பது உழைத்துப் பணம் கொண்டு வருவது மாத்திரமல்ல. சிக்கனமாய் இருந்து, கையிலுள்ளதைக் கூடுமான வரை செலவழிக்காமல் இருப்பதும் வருமானமாகும்.

—ஸிஸரோ

செழிப்பாய் இருக்கும்போது சிக்கனமாக இரு. அப்போதுதான் அறிவை உபயோகித்து, ஆசைகளை அடக்கிக் கொள்ள முயற்சி செய்யவேண்டும். செழிப்புக் குறைவாய் இருக்கும்போது, தானாகவே நீ சிக்கனமாக இருப்பாய். வீண் ஆசைகளுக்கு அடிமையாகி விடுவோமோ என்று அப்போது பயப்படத் தேவை யில்லை.

—ஜோஹான் ஜியார்ஜ்

சிக்கனமாகவும் எளிமையாகவும் வாழும் வழியைத் தனது பிள்ளைக்குப் போதிக்கும் தந்தை, அளவற்ற செல்வத்தை விடுத்துச் செல்லும் தந்தையைவிடச் சிறந்தவனாவான்.

—வில்லியம்பென்

சிக்கனமாக இல்லாதவன் சந்தோஷமாக வாழ முடியாது. சிக்கனமாக வாழ்பவன் சஞ்சல புத்தி உடையவனாக இருக்கவும் முடியாது.

—சாம்யுல் ஜான்சன்

சிக்கனமாக வாழாதவன் சஞ்சலம் மிகுந்தவனாக வாழ வேண்டியவன் தான்.

—கன்பூஷீயஸ்

சிக்கனம்—அதுவும் ஒருவித வருமானமே.

—ஸெனீக்கா

சிக்கனம் இல்லையேல் யாரும் செல்வராக முடியாது. சிக்கனம் இருந்தாலோ யாரும் வறிஞராக முடியாது.

—ஜான்சன்

சிக்கனம் என்பது ஒருவன் பணத்தை எவ்வளவு குறைவாகச் செலவிடுகிறான் என்பதைப் பொறுத்தல்ல; அதை அவன் எவ்வளவு உபயோகமாக செலவிடுகிறான் என்பதே ஆகும்.

—ஆரிசன் ஸ்வெட்

சிக்கனம் மிதமிஞ்சினால் லோபமாகும்.

—ஆவ்பரி

பணம் செலவழிப்பதையெல்லாம் எழுதி வை; செலவழித்தது அவசியம்தானா என்று சிந்தித்துப்பார்; சிக்கனம் தானாக வந்துவிடும்.

—மகாத்மா காந்தி

திறமையற்றவர்கள் சிக்கனமாயிருக்க முடிவதில்லை. சிக்கனம் இல்லாதவர்களிடம் பணம் தங்குவதில்லை.

—ஒரு பெரியார்

88. வேண்டும்

ஒன்று பட்டால் உண்டு வாழ்வே—நம்மில்
ஒற்றுமை நீங்கிலனைவர்க்கும் தாழ்வே—
நன்றிது தேர்ந்திடல் வேண்டும்—இந்த
ஞானம் வந்தாற்பின் நமக்கெது வேண்டும்?

—பாரதியார்

எக்காரியத்தை ஆரம்பித்தபோதிலும் சரியே, அது எவ்வளவு அற்பமானதாய் இருந்தபோதிலும் சரியே, அதை முடித்து விட்டுத்தான் மறுவேலை பார்க்கவேண்டும்.

—கிளாட்ஸ்டன்

பசியால் வாடும் கோடிக்கணக்கானமக்கள் வேண்டுவது ஒரே ஒரு பாட்டைத்தான்—களை தீர்த்துத் தெம்பு கொடுக்கும் சோற்றையே. அதை யாரும் அவர்களுக்குத் தானம் கொடுக்க முடியாது. அவர்களே தான் சம்பாதித்துக் கொள்ள வேண்டும்; நெற்றி வியர்வை நிலத்தில் விழ உழைத்தே சம்பாதித்துக் கொள்ள வேண்டும்.

—மகாத்மா காந்தி

நெஞ்சில் ஈரமுள்ள மனிதத் தொடர்பு எப்போதும் வேண்டும். சாட்டையடியால் சாந்தி வராது; உலகஒற்றுமை வேண்டுமானால், கொடுமை ஒழிந்து, அன்பு மலர வேண்டும்.

—மாண்டேதன்

சிந்தனை, செயல், சொல் எல்லாம் நல்லனவாகவே இருக்க வேண்டும். எளிய வாழ்க்கையே வாழ வேண்டும். பிறரிடம் அன்பாகவே நடக்க வேண்டும். எல்லா உயிர்களிடத்திலும் அன்பு பாராட்ட வேண்டும். சொல்லாமையே சிறந்த பண்பாக அமைய வேண்டும்.

—புத்தர்

கஷ்டப்படுவதைப்பற்றி அலட்சியமாக இருப்பவர் போற்றுதலுக்கு உரியவர்; அது அவர் சொந்தக் கஷ்டமாக இருக்கவேண்டும்.

—ராபர்டுலிண்டு

சந்தர்ப்பம் தானாக வருவதில்லை. சந்தர்ப்பத்தையும் நாமே உண்டுபண்ணிக் கொள்ள வேண்டும்.

—பெர்னாட்ஷா

89. கூடாது

தன்னால் முடிந்தபோதும் முடியாதபோதும் மனிதன் யோசனை செய்யக்கூடாது.

—மார்க்ட்வெயின்

அமைதியாக வாழ வேண்டுமானால். கண்ணால் கண்டது, காதால் கேட்டது எதையும் வாயால் சொல்லக் கூடாது.

—கெஸ்டோரோமா நோரம்

பெருமையான ஒன்றை அடைவதற்குப் பாடுபடும் அருமையான முயற்சியைப் பழிக்கக் கூடாது.

—முதுமொழிக் காஞ்சி

ஆண்டவனைத் தேடி எங்கே போகின்றீர்கள்? இவ்வுலகில் வாழும் துன்பப்பட்டவர்கள், பலவீனர்கள், ஏழைகள் இவர்கள் எல்லோருமே தெய்வ வடிவங்கள் தானே? ஏன் இவர்களை முதலில் ஆதரிக்கக் கூடாது.

—விவேகானந்தர்

பெண்களைப் பற்றிச் சரியாக எதுவுமே சொல்ல முடியாது. சொல்ல முடிந்தாலும் சொல்லக்கூடாது.

—ஆம்பீவியன்

சிறியோர் என்று அலட்சியம் செய்யக் கூடாது.

—ஈசாப்

வேலை செய்வதில் அவசரமும் கூடாது. இடையில் இளைப்பாறுவதும் கூடாது.

—கதே

மதத்திற்கும் அரசியலுக்கும் தொடர்பு கூடாது.

—மார்டின் லூதர்

90. இல்லை

நாணமுள்ள பெண், ஆணைத் துரத்துவது இல்லை. எலிப் பொறி எலியைத் துரத்துவது இல்லை.

—"எக்சேஞ்ச் எக்ஸ்பிரஸ்"

"முடியாது" என்பது என் அகராதியில் இல்லை.

—நெப்போலியன்

பொதுவாகப் புத்தகங்கள் என்பன நம்முடையத் தவறுகளுக்குப் பெயரிடுவதைத் தவிர வேறொன்றும் செய்வது இல்லை.

—கதே

எல்லோரும் பிறர்க்கு எஜமானனாக இருக்கவே விரும்புகிறார்கள். ஆனால் எவனும் தனக்கு எஜமானனாக இருக்க விரும்புவது இல்லை.

—ஒரு பெரியார்

பலபேர் நடந்து தேய்ந்தபாதையில் புல் வளர்வதில்லை; அப்படித் தப்பித்தவறி ஒன்றிரண்டு முளைத்தாலும் அவை சீக்கிரம் மிதியுண்டு மண்ணோடு மண்ணாகிவிடும். அதே மாதிரி பலருக்குத் தன்னை விற்கும் பரத்தையின் மனத்தில் உண்மையான ஆசை உதிப்பது இல்லை. அப்படி உதித்தாலும் அது அதிக நேரம் நீடிப்பதும் இல்லை.

—ஒரு பெரியார்

அறிவின் முன்னணியிலே போர் புரிவோர்க்குப் பெரும்பான்மையோரின் ஆதரவு, ஒரு நாளும் கிடைப்பது இல்லை.

—இப்சன்

பிறர் சொன்னதைக் கேட்டு அதன்படி செய்யத் தெரியாதவர்கள் ஒரு வகையார்; பிறர் சொன்னதைத் தவிர வேறு எதுவுமே செய்யத் தெரியாதவர்கள் மற்றொரு

வகையார். இந்த இரண்டு வகையாருமே ஒரு போதும் உருப்படுவதில்லை.

—ஸைரஸ் கர்ட்டில்

காமம், வெகுளி, மயக்கம் என்னும் முக்குற்றங்களால் ஏற்படும் கிலேசம் எனும் திரையை விலக்கித் தெளிவு பெற வேண்டுமானல், சுய முயற்சியால் ஏற்படும் போதிச் செல்வத்தைத் திரட்டிக் கொளல் வேண்டும். குருக்களுடைய மந்திரங்களால் யாதொரு பயனும் இல்லை.

—புத்தர்

மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள் சொல்
வதிலோர் மகிமையில்லை.

—பாரதியார்

அறிஞர்களுக்கும் அயோக்கியர்களுக்கும் அவர்கள் சாவு நேரம் அநேகமாக நல்லதாக இருப்பதில்லை.

—சாக்ரடீஸ்

அறிவு பெறத்தக்க ஆற்றலுடைய ஒருவன், அறிவிலியாய் இருப்பது போன்ற துக்ககரமான செய்தி வேறு இல்லை.

—கார்லைல்

ஒரு பெண்ணின் இருதயம் கருணையின் கோவிலாக மாறும்போது, அதற்கு இணையான வாஞ்சை இந்த உலகத்தில் எங்குமே இல்லை.

—மார்டின் லூதர்

91. இருக்கிறது

மனிதனின் அதிர்ஷ்டம் அவன் தலையெழுத்தில் இல்லை; அவன் நடத்தையில்தான் இருக்கிறது.

—இங்கர்சால்

எத்தகைய வருத்தமும், ஏமாற்றமும் ஏற்படினும், கணவனையும் குழந்தைகளையும் எவள் அன்புடன் உபசரித்து உணவளிக்கிறாளோ அவளிடமே பெண்மை என்னும் பொருள் தன்மை பூரணமாக நிறைந்திருக்கிறது. குறைந்த வருமானமாய் இருந்தாலும் சரி, கீழ்த்தரமான தொழிலாக இருந்தாலும் சரி, மனைவியையும் குழந்தைகளையும் எவன் அன்புடன் ஆதரித்துச் செல்கிறானோ அவனிடமே ஆண்மையின் பெருந்தன்மை பூரணமாக நிறைந்து இருக்கிறது.

—கிளாராலுஸ்

"பிறர் தன்னைவிட சுகமாக வாழ்கிறார்கள்" என்ற எண்ணம்தான் எல்லாத் துன்பங்களுக்கும் மூலகாரணமாக இருக்கிறது.

—டெரெட்ஸ்

இளைஞர்களின் காதல் உண்மையில் அவர்களது இதயத்தில் இல்லை; அவர்களது கண் பார்வையில்தான் இருக்கிறது.

—ஷேக்ஸ்பியர்

காதலில் தேனும் இருக்கிறது, கடுக்காயும் இருக்கிறது.

—ஒரு பெரியார்

சத்தியம் எப்போதும் ஏழு நாட்களுக்கு அப்பால்தான் இருக்கிறது.

—ஒரு பெரியார்

"கடவுள் உலகம் இதோ இருக்கிறது", 'அதோ இருக்கிறது' என்று மனிதர் சொல்லும் பொழுது நீங்கள் அவர் பின் செல்ல வேண்டாம். கடவுளுலகம் உங்கள் மனதிற்குள்ளேயே இருக்கிறது.

—ஒரு பெரியார்

92. ஆண், பெண்

ஒரு ஆண்; பெண்ணின் கண்களுக்கு மட்டும் விருந்தளித்தால் போதாது. அவர்களுடைய காதுகளுக்கும் ஸ்பரிச உணர்ச்சிகளுக்கும்கூட விருந்தளித்தாக வேண்டும்.

—லியாலாருஜெல்

பெண்கள் கற்பனை உலகத்தில் சஞ்சரிப்பவர்கள்; ஆண்களோ நடைமுறைக் காரியங்களில் மனதைச் செலுத்துவார்கள். பெண்கள் மனோநிலை அடிக்கடி மாறிக் கொண்டே வரும். கிடைக்காதவற்றைப் பற்றித்தான் அவர்கள் கனவு காண்பார்கள்.

—லூயிஸ் டமினின்

பெண்கள் யாரை மனமாறக் காதலிக்கிறார்களோ அந்த ஆண்கள், அந்தப் பெண்கள் எதிரில் பச்சைக் குழந்தைகளாகிவிடுகிறார்கள்.

— தாகூர்

தனக்குத் தேவையான ஒரு ரூபாய் பெறுமான பொருளுக்கு ஆண்மகன் இரண்டு ரூபாய் தருவான்; பெண்ணோ தனக்குத் தேவையில்லாத இரண்டு ரூபாய் பொருளுக்கு ஒரு ரூபாய் கொடுப்பாள்.

—வில்லியம் பீங்கர்

ஆண் பெண் சிற்றின்பம் என்கிறோமே அதைவிட வலிமையான சுகம் வேறு எதுவுமில்லை, ஆனால் அதைப் போல் வெறியூட்டும் போதையும் வேறொன்றுமில்லை.

—பிளேட்டோ

ஒரு ஆணைப் படிக்க வைத்தால் ஒருவரைப் படிக்க வைத்தது போலாகும்; ஒரு பெண்ணைப் படிக்கவைத்தால் ஒரு குடும்பத்தையே படிக்க வைத்தது போலாகும்.

—லிவர்

93. துன்பம்

மனக் கோணலே துன்பம்.

—ஜேம்ஸ் ஆலன்

துன்பம் ஒருவனுக்கு அவனையே அறிமுகப்படுத்தி வைக்கிறது.

—ஒரு பெரியார்

துன்பத்தைப் போன்ற பயிற்சிக் கருவி வேறு இல்லை.

—டிஸ்ரேலி

கடவுள் மக்களைத் துன்பக் கடலில் ஆழத்துக்குக் கொண்டு செல்வது அவர்களை அதில் அமிழ்த்துவதற்கு அல்ல; அவர்களை நீராட்டித் தூய்மைப்படுத்தவே ஆகும்.

—ஹாகி

வெற்றி நமக்கு உலகின் ஒரு புறத்தையே காட்டுகிறது. துன்பம் அதன் மறுபுறத்தை உணர வைக்கிறது.

—கோல்டன்

துன்பத்திலிருந்து உண்மையையும் கடைத்தேறுவதில் இருந்து நன்றியும், துக்கத்திலிருந்து சுகமும், விடுதலையிலிருந்து நம்பிக்கையும் பிறக்கிறது.

—ரஸ்கின்

துன்ப நினைவுகளைக் குழிதோண்டிப் புதைக்க வேண்டும்; சிலையில் செதுக்கி வைத்துக் கொள்ளலாகாது.

—வில்லியம்மாரோ

அடக்கமும் அன்பும் துன்பத்தால் கற்றுக்கொள்ளப் படும்.

—ஜார்ஜ் எலியெட்

ஒன்று முதல் மூன்று வருஷங்கள் துன்பத்தைச் சகிக்கக் கூடியவர்கள், முப்பது வருஷமானாலும் அதைச் சகித்து விடுவார்கள்.

—மகாத்மா காந்தி

துன்பத்தைப் பொறுக்கக் கூடியவனால்தான் எந்த செயலையும் நன்கு செய்யமுடியும்.

—மில்டன்

கூடியமட்டும் துன்பம் விளையாமல் தடுத்துக் கொள்வதும், தடுக்க முடியாத துன்பத்தைக் கூடிய மட்டும் பயன்படுத்திக் கொள்ளுவதுமே அறிவுடைமையாகும்.

—ஒரு பெரியார்

துன்பங்களே சான்றோரை அளக்கும் துலாக்கோல்.

—பர்க்

துன்பத்தை வெறுத்தலோ அல்லது கவனியாதிருத்தலோ போதாது; அதனை அறிய வேண்டும். துன்பத்தை நீக்கும்படி கடவுளை பிரார்த்தித்தால் போதாது, அது எதன் பொருட்டு வந்திருக்கிறது என்றும் அது எதனை உங்களுக்குக் கற்பிக்கிறது என்றும் நீங்கள் அறிய வேண்டும். உங்கள் நினைப்பாய் உங்கள் வாழ்க்கையை ஆக்குகிறீர்கள் அல்லது அழிக்கிறீர்கள்.

ஜேம்ஸ் ஆலன்.

"பிறர் தன்னைவிடச் சுகமாக வாழ்கிறார்கள்" என்ற எண்ணம்தான் எல்லா துன்பங்களுக்கும் மூலகாரணமாயிருக்கிறது.

—ஹெர்பர்ட் பார்க்கர்

வாஞ்சையும் தாழ்மையும், துன்பங்களைச் சகித்துக் கொள்வதன் மூலமே கற்றுக்கொள்ள முடியும்.

ஜார்ஜ் எலியட்

துன்பம் — மனிதனிடத்திலுள்ள அறியாமையி னின்றும் பிறக்கிறது.

—திரு. வி. க.

துன்பம் என்பது தீய எண்ணங்களின் பலன்தான்,

—ஒரு பெரியார்

94. முடியாது

மக்கள் தாங்களே செய்து கொள்ள வேண்டிய காரியங்களில், அவர்களுக்கு நீங்களே எப்போதும் உதவி செய்து கொண்டிருக்க முடியாது.

—ஆபிரகாம் லிங்கன்

ஒரு தேசபக்தனை அவனுடைய தேசத்தில் இருந்து விரட்டிவிடலாம்; ஆனல் அவன் உள்ளத்தில் இருந்து அவனுடைய தேசத்தை விரட்ட முடியாது.

—வால்டேர்

விதியானது தன்னிடம் உள்ள எல்லா அம்புகளையும் என்மீது பாய்ச்சட்டும். எல்லாவற்றையும் தாங்கிக் கொண்டு இன்னும் எத்தனைவரினும் அத்தனையையும் தாங்கக்கூடிய ஒரு ஆன்மா என்னிடம் இருக்கிறது. ஆன்மாவை வெற்றி கொள்வது எப்பொருளாலும் முடியாது.

—டிரைடன்

ஆன்மாவின் உறுதியான மனேதிடத்தைத் தடுக்கவோ, ஒடுக்கவோ, அடக்கவோ எந்த விதியாலும் சூழ்நிலைகளாலும் முடியாது.

—ஹக்ஸ்லி

ஒரு காரியத்தை உன்னால் செய்ய முடியும் என்று நீ திட்டமாய் எண்ணுவாயானால் அது எவ்வளவு கஷ்டம் நிரம்பியதாய் இருப்பினும் அதை நீ செய்தே முடிப்பாய். ஆனால் அதற்கு மாறாக இவ்வுலகில் மிக எளிதாக இருக்கக் கூடிய காரியத்தையும் உன்னால் செய்ய முடியாது என்று எண்ணுவாயானால் அதை உன்னால் ஒருபோதும் செய்ய முடியாது.

—எமலிகோ

தங்கள் குறைபாடுகளுக்காக பிறரைத் தூற்றுவதால் எந்தத் தீமைகளையும் போக்கிவிட முடியாது.

—ஜவாஹர்லால் நேரு

குற்றத்தை மன்னித்துவிடலாம். ஆனால் துரோகத்தை மன்னிக்க முடியாது.

—ரூசோ

மனிதன் தன்னுடைய ஆற்றலைப் பயன்படுத்த ஏதாவது ஒரு தொழிலைத் தேர்ந்தெடுத்துக்கொள்ள வேண்டும். ஒருவித குறிக்கோளும் உழைப்பும் இல்லாமல் காலம் செல்லுமாகில், அவனுடைய வாழ்விலே சாரமுள்ள பகுதியைக் காண முடியாது.

—மாக்சிம் கார்க்கி

மரணத்துக்கு அஞ்சாத பெண்ணை எவராலும் மான பங்கம் செய்ய முடியாது.

—மகாத்மா காந்தி

95. இன்பம்

இன்பம் என்பது சுட்ட நிலக்கரி போன்றது; அது ஒரு செய்பொருளின் விளைவே ஆகும்.

—எமர்சன்

மனிதன் இன்பத்தைத்தானே உண்டாக்கவல்லவன்.

—தோரோ

இன்பம் என்பது வேறு ஒன்றும் இல்லை; துன்பத்தின் இடை வெளியின்போது கிடைக்கும் ஓய்வே ஆகும்.

—ஜான் ஸெஸ்டன்

அழகு வாய்ந்த பொருள், என்றும் இன்பம் தரும் பொருள்.

—கீத்ஸ்

எவன் ஒருவன் பிறர் இன்பத்திற்காகத் தன் இருதயக் கதவுகளைத் திறக்கின்றானோ, அவனே தன்னுள் மறைந்து இருக்கும் இன்பத்தைக் காண்கிறான்.

—எலிசபெத் கிப்சன்

மன நேர்மையே இன்பம்.

—ஜேம்ஸ் ஆலன்

காதலர் இருவர் கருத்தொருமித்து
ஆதரவுபட்டதே இன்பம்.

—திருவள்ளுவர்

பணக்காரர்களின் மாளிகைகளைவிட ஏழைகளின் மண் குடிசைகளில்தான் இன்பம் அதிகமாக இருக்கிறது.

—இங்கர்சால்

உழைப்பால் களைப்படைபவர்களே உண்மையான இன்பம் காண்கிறார்கள்.

—பெர்னாட்ஷா

நாம் இன்பம் என்னும் பன்னீரைப் பிறர்மீது தெளித்தால், நம்மீதும் சில துளிகள் விழாமல் இருக்காது.

—எமர்ஸன்

இன்பம் பெற பிறரை எதிர்பார்க்காமல் தன்னையே நம்பி நடப்பவன் இன்பத்துக்கான சிறந்த வழியை தெரிந்து கொண்டு விட்டவனாவான்.

—பிளேட்டோ

இல்வாழ்க்கையை இன்பமாக்குவது "நம்" என்ற ஒரே வார்த்தை.

—ராபெர்ட் வில்ஸன்

~~5, 66, 64, 73, 75~~

~~87, 92, 91, 100, 104, 111~~

~~113, 114, 125, 135, 134~~

~~140, 141, 150, 156, 152~~

~~154~~

[illegible]. p 140, 136, 111, 154

— நற்மணம். கி.மா. பக்தவத்சலன், 1956. பக். [illegible]

ugaiest — See Gyp...
61, 131